APRIL.'48
பங்குனி
-6-
அணா
மஞ்
மஞ்சரி
MAR. 48
மாசி
மஞ்சரி
NOV. '47
கார்த்திகை

FEB. '49 Regd. No. M. 4975

மஞ்சரி

ஸர்வதாரி — மாசி

அமரவசனம்		1
கலை வளர்த்த காஷ்மீர்	மாதுரி	2
இந்த வருஷ ஜோஸ்யம்	அஸ்ட்ரலாஜிகல் மகஸீன்	6
அமெரிக்காவில் இந்தியா லீக்	பம்பாய் க்ரானிகிள்	11
அம்மை குத்திய முதல் டாக்டர்	மாத்ருபூமி	16
எதையும் சமாளிக்கும் காது		18
வர்தாவில் கண்டது	கதாவளி	20
புகையாத அடுப்பு	பீப்பிள்ஸ் ஹெல்த்	22
ஜாதி மாடுகள்	புஸ்தகப் பிரபஞ்சம்	26
வாத்தியார் அவதி	மனோஹர்	31
மண் வீடு	கர்மவீர்	34
சீனாவின் புதிய தலைவர்கள்	ஸ்வதந்த்ரா	40
மகா சிவராத்திரி	பாரதி	43
ஏழைகளின் கற்பகம்		46
எழுதவேண்டிய புத்தகம்	நியூ டெமொக்ராட்	50
நம்பத் தகுந்த நம்பூதிரிகள்	திருகலட்சுமி	53
வேலையும் உணவும்	பேரெண்ட்ஸ் மகஸீன்	62
ராவ் சிபார்சும் கௌடில்யரும்	ஸரிதா	66
புத்தரின் சிஷ்யர்கள்	ப்ரபாஸி	69

விசேஷப் பகுதிகள்

க்விஸ்		9
பிழையைத் திருத்துங்கள்		25
குழந்தைகள் குறும்பு		38
பரமஹம்ஸர்: வாழ்வும் வாக்கும்		48
பாபுராவ் பதில் சொல்லுகிறார்		57
கார்ட்டூன் கதம்பம்		60
சிறுகதை: ஓடிப்போன ஆசாமி	குடும்ப ராவ்	73
புத்தகச் சுருக்கம்: விஷ ஜுரம்	'வனபுல'	83

அணா 6

வாழ்க்கையின் பரிபூர்ணம்

காந்திஜி என்றால் வாழ்க்கையின் பரிபூர்ணம். அவர் சகல துறைகளிலும் ஈடுபட்டு மாறுதலை உண்டாக்கினார் (படம்). வாழ்க்கையின் சகல துறைகளிலுள்ள விஷயங்களையும் திரட்டித் தருவது மஞ்சரி.

பொதுவுடைமைக்காரர்களே என்றாலும் 'சீனாவின் புதிய தலைவர்'களைப்பற்றி நாம் தெரிந்துகொள்ளவேண்டும் (பக். 40). நம்பினாலும் நம்பாவிட்டாலும் 'இந்த வருஷ ஜோஸ்ய பலன்'களைப் படியுங்கள் (பக். 6). 'புகையாத அடுப்பு' (பக். 22) என்றால் எந்தப் பெண்ணுக்குமே மகிழ்ச்சி தான். விவாதத்துக்குரிய விஷயம் விவாக ரத்து; அதைப் பற்றிய, 'ராவ் சிபார்சும் கௌடில்யரும்' (பக். 66) ரசமான கட்டுரை.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன் — கா. ஸ்ரீ. ஸ்ரீ.

த. நா. ஸேனாபதி — குமுதினி

வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி — கி. சாவித்திரி அம்மாள்

சீதா தேவி — 'ஆர்வி'

கௌரி அம்மாள் — மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி; சங்கர்; மகான்.

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/- சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 2] [இதழ் 3

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

அமர வசனம்

சத்தியம் என்பது என்ன? இது ஒரு சங்கடமான பிரச்னை; ஆனால், என் சம்பந்தப்பட்ட மட்டில், இதை ஒரு விதமாக நான் தீர்த்துக்கொண்டு விட்டேன்: உள்ளத்தின் குரல் சொல்வதே எனக்குச் சத்தியம். அப்படியானால், வெவ்வேறு மனிதர்கள் ஒன்றுக்கொன்று மாறான வெவ்வேறு சத்தியங்களை ஏன் சிந்திக்கிறார்கள் என்று நீங்கள் கேட்கலாம். எண்ணற்ற சாதனங்களைக்கொண்டு மனிதனின் மனம் சிந்திக்கிறது. எல்லார் மனமும் ஒரே விதமான பரிணாமத்தை அடைந்திருக்கவில்லை. அதனால் ஒருவனுக்குச் சத்தியமாக இருப்பது மற்றொருவனுக்கு அசத்தியமாகத் தோன்றலாம். ஆகவே, சத்திய சோதனை செய்வதற்குச் சில நிபந்தனைகள் அவசியமாகின்றன.

எந்த விதமான பயிற்சியும் இல்லாதவர்களெல்லாம் இந்தக் காலத்தில் மனச்சாட்சி உரிமை கொண்டாட ஆரம்பித்துவிட்டார்கள். அதனால்தான் உலகம் திகைக்கும்படி அசத்தியங்கள் மலிந்துவிட்டன. நிறைந்த பணிவில்லாத எவனுக்கும் சத்தியம் புலனாகாது. சத்தியம் என்ற கடலிலே நீங்கள் நீஞ்சவேண்டுமானால், உங்களை நீங்கள் ஒரு பூஜ்யமாகச் செய்துகொள்ள வேண்டும்.

—மகாத்மா காந்தி: 'மகாத்மாவின் மனம்.'

காஷ்மீர் யாரைச் சேர்ந்தது என்று இன்று
போராட்டம் நடக்கலாம். அன்று இந்திய
இலக்கியத்துக்கு ஜீவன் அளித்தது காஷ்மீர்.

கலை வளர்த்த காஷ்மீர்

மோகனசரண மிச்ர

காஷ்மீர் பூலோக சொர்க்கம். அழகு நடமாடும் அந்த இடத்திலே இயற்கைத் தேவி கொலு வீற்றிருக்கிருள். நீண்டகாலமாக அங்கே கற்பனையும் சிந்தனையும் இலக்கிய அநுபவமும் வெள்ளமாகப் பெருகியிருக்கின்றன. பல காலமாக அது இலக்கியச் சாதனைக்கு முக்கிய வித்தியாபீடமாகத் திகழ்ந்தது. தர்க்கசாஸ்திரத்துக்கு நவத்வீபமும், வியாகரணத்துக்கும் தர்மசாஸ்திரத்துக்கும் காசியும் பிரசித்தமாக இருப்பதுபோல - இன்னுங் கேட்டால் இவற்றுக்கும் முன்னதாகவே—இலக்கிய வளத்துக்குப் புகழ் பெற்றது காஷ்மீர்.

புராண காலத்திலிருந்து பன்னிரண்டாம் நூற்றாண்டு வரைக்குமுள்ள நிகழ்ச்சிகளைக் கூறும் கல்ஹணருடைய ராஜதரங்கிணி, சரித்திர முறையில் மிகவும் பயன்படுகிறது; கவிகளுக்கும் மொழி ஆராய்ச்சியாளருக்குங்கூட இதில் வேண்டிய விஷயம் இருக்கிறது. கல்ஹணர் காஷ்மீரில் வாழ்ந்தவர். இவருடைய தகப்பனர் 'சணபக' (சம்பக) என்பவர் காஷ்மீர் அரசன் ஹர்ஷனுக்கு (1089 - 1109) மந்திரியாக இருந்தார். ஹர்ஷன் கொலையுண்ட பிறகு கல்ஹணர் காசிக்கு வந்து, உலகப்பற்று இல்லாமல் வாழ்ந்தார். அரசியலிலிருந்து விலகியதும், இவர் தமது நாட்டின் அரசியல் சரித்திரத்தை எழுதினர்.

ஸம்ஸ்கிருத நாடகங்களில் 'முத்ராராக்ஷஸம்' தனிப்பெருமை வகிக்கிறது. அரசியல்தான் இதன் விஷயம். இதை இயற்றிய விசாகதத்தர், காஷ்மீர் அரசன் அவந்திவர்மாவோடு (582 - ஆம் வருஷம்) வாழ்ந்தவர். அந்த அரசனின் பெயரை, இவர் பரதவாக்கியத்தில் சொல்லியிருக்கிருர்.

அலங்கார சாஸ்திரத்தின் தந்தையான பாமஹர் காஷ்மீரைச் சேர்ந்தவர் என்பதைப் பலரும் ஒப்புக்கொண்டிருக்கிருர்கள். பரதருக்குப் பிறகு இவருடைய 'காவ்யாலங்காரம்' மிகப் புகழ் பெற்றது. நாட்டிய சாஸ்திரத்துக்கு உட்பட்டிருந்த அலங்காரத்தை இவர் பிரித்து அதைத் தனிச் சாஸ்திரமாக்கினர்.

எட்டாவது நூற்றாண்டின் கடைசியில் காஷ்மீர் அரசன் ஜயாபீடனுக்கு அமைச்சராக விளங்கிய ஆசார்ய வாமனர் 'ரீதி' சம்பிரதாயத்தை ஸ்தாபித்தார். முறையான சொல்லமைப்புத்தான் 'ரீதி' என்பது. 'ரீதியே காவியத்தின் ஆத்மா' என்ற கொள்கையை வாமனர் நிலைநாட்டினர். இவருடைய 'காவ்யாலங்கார ஸூத்ரம்' மிகவும் பிரசித்தம்.

காப்பிரைட்: மாதுரி (ஹிந்தி: டிசம்பர் '48), லக்னௌ.

இவர் காலத்திலேயே வாழ்ந்த ஆசார்ய உத்படரும் ஜயாபீடனின் சபையை அலங்கரித்தவர். இவருக்கு நாள்தோறும் அரசன் ஒரு கோடி சுவர்ண முத்திரைகள் சம்மானம் அளித்துவந்ததாக ராஜதரங்கிணி கூறுகிறது. ஒரே அரசனிடம் வாழ்ந்துங்கூட, வாமனரும் உத்படரும் இலக்கியத் துறையில் எதிரிகள். வாமனர், ரீதி சம்பிரதாயத்தின் தந்தை; உத்படர், அலங்கார சம்பிரதாயத்தின் போஷகர். இருவருமே தங்கள் கொள்கைகளைச் சுதந்தரமாக ஸ்தாபித்துப் பரமாசாரியர்களாக விளங்கினுர்கள்.

அலங்கார வழியைச் சார்ந்த ஆசார்ய ருத்ரடரும் காஷ்மீர் காரரே. இவர் தமது 'காவ்யாலங்கார'த்தில் காவியத்தின் பயன், நோக்கம், கவிக்குத் தேவையான குணங்கள், மொழிநயம், ரீதி, ரஸம், விருத்தி முதலிய அலங்கார சாஸ்திரக் கொள்கைகளை விரிவாக ஆராய்ந்திருக்கிருர். முதல் முதலில் அலங்காரங்களை வகுத்துத் தந்தவர் இவர்தாம். ரஸங்களைப்பற்றியும் இவர் விரிவாகக் கூறியிருக்கிருர்.

'ஹயக்ரீவ வதம்' என்ற மகா காவியத்தை இயற்றிய பர்த்ருமேண்டர், காஷ்மீர் அரசன் மாத்ருகுப்தனேடு வாழ்ந்தவர். இவர் இந்தக் காவியத்தை அரசனுக்குப் படித்துக் காட்டினுர். ஆரம்பத்திலிருந்து கடைசிவரைக்கும் நல்லது கெட்டது ஒன்றும் சொல்லாமலே அரசன் இதைக் கேட்டான். கடைசியில் இவர் மனச்சோர்வோடு சுவடியைக் கட்டிவைக்கும் சமயத்தில், அரசன் அதன் கீழே சட்டென்று ஒரு பொன்தட்டை வைத்து இவருக்கு நிறையப் பொருள் தந்து கௌரவித்தானும்.

காஷ்மீர் கவி பட்ட பௌமகர், பட்டிகாவியத்தை அநுசரித்து, 'ராவணூர்ஜுனீயம்' என்ற காவியத்தை இயற்றினுர்.

அவந்திவர்மாவின் சபையில் ரத்தினமாகத் திகழ்ந்த மகாகவி ரத்திஞகரர், காஷ்மீர் கவிகளில் மகுடமணி. மாககவியின் 'சிசுபால வதம்' பரவுவதைத் தடுப்பதற்காக இவர் 'ஹரவிஜய'த்தை இயற்றினுர். அளவிலும் குணத்திலும் இது பெருமை பெற்றது. இதில் 50 ஸர்க்கங்கள் இருக்கின்றன. மாககவி வைஷ்ணவராதலால், 'திருமாலின் சரிதத்தைப் பாடுவதனுல் எழில் வாய்ந்த' காவியத்தைத் தாம் இயற்றியதாகச் சொன்னுர். ரத்திஞகரர் சைவராதலால், 'பிறைசூடியின் சரிதத்தைப் பாடுவதனுல் எழில் வாய்ந்த' காவியத்தைத் தாம் இயற்றியதாகச் சொல்கிருர். இவர் சாக்த ஆகமங்களில் கரை கண்டவர், அவந்திவர்மாவின் காலத்தில் வாழ்ந்தவர்.

'கப்பிணுப்யுதயம்' என்ற மகா காவியத்தை இயற்றி இதே காலத்தில் வாழ்ந்த சிவஸ்வாமியும் காஷ்மீர் வாசியே. இந்தக் காவியத்தைப் பஞ்சாப் சர்வகலாசாலையார் 1937 - இல் வெளியிட்டார்கள். இவர் சைவர்; ஆனுல் பௌத்தர்களோடு பழகியவர். ஆசார்ய மம்மடர் தொனிக்கு உதாரணம் சொல்லும்போது, இவருடைய கவிதையை வெகுவாகப் புகழ்ந்திருக்கிருர்.

அனந்தன் (1028 - 1063), கலசன் (1063 - 1083) ஆகிய காஷ்மீர் அரசர்களின் ஆட்சிக் காலத்தில், காவிய விமரிசனத்தில் 'ஔசித்ய' சம்பிரதாயத்தைத் தோற்றுவித்த ஆசார்ய க்ஷேமேந்

திரர் வாழ்ந்தார். இவர் வெவ்வேறு விஷயங்களைப்பற்றிப் பல நூல்கள் எழுதியிருக்கிறார். இவருடைய நடை, ஓட்டமும் இனிமையும் நிரம்பியது. புகழ்பெற்ற 'வியஞ்சனு வாதி'யான ஆசார்ய அபிநவகுப்தரிடம் இவர் கல்வி பயின்றார். சைவர்களின் சூழ்நிலையில் இருந்துங்கூட, பரமபாகவதரான ஸோமதேவரோடு பழகி இவர் வைஷ்ணவரானார்.

புகழ்பெற்ற அலங்கார ஆசிரியரான ருய்யகரும், அவர் சிஷ்யர் மங்ககரும் காஷ்மீர் அரசனை ஜயசிம்மனுடைய (1129 - 1150) சபையில் விளங்கியவர்கள். ருய்யகருடைய 'அலங்காரஸர்வஸ்வம்' அருமையான நூல். மங்ககர் ஆராய்ச்சியில் வல்லவர். அவருடைய மணிமொழிகள் பிரசித்தம்: 'வெளுத்த துணியிலே பட்ட கறை பளிச்சென்று தென்படுவதுபோல அழகிய வாக்கிலே உள்ள குற்றமும் சீக்கிரம் தெரிந்துவிடும்'; 'விமரிசனம் இல்லாமல் கவியின் பெருமையோ கவிதையின் பெருமையோ நிலைக்க முடியாது. சூறைக்காற்று அடித்தாலொழிய, தீவட்டிக்கும் ரத்தின ஒளிக்குமுள்ள வித்தியாசம் எப்படித் தெரியும்?'

இவருடைய 'ஔசித்ய விசார சர்ச்சா' என்னும் நூல், இலக்கிய ஆராய்ச்சியில் தனி வழியை வகுப்பது. உசிதமாக இருப்பதே ஔசித்யம்; அதுதான் ரஸத்துக்கு உயிர். இந்த 'ஔசித்யம்' சொல், வாக்கியம், பொருள், குணம், அலங்காரம், ரஸம், வினை, கருவி, பால் ஆகிய பலவற்றோடும் தொடர்புள்ளது என்பது இவர் கொள்கை. 'ரஸபங்கத்துக்கு, ஔசித்யமில்லாமை தவிர வேறு காரணமே இல்லை' என்று ஆனந்தவர்த்தனர் சொல்கிறார்.

'நைஷதீய சரித'த்தை இயற்றிய ஸ்ரீஹர்ஷர் காஷ்மீர்காரர் அல்ல; ஆயினும் இங்கேதான் அவருடைய பாட்டி வீடு. அந்தக் காலத்தில் அவருடைய காவியத்தைப் பாராட்டிப் படித்தவர்கள் காஷ்மீரில்தான் அதிகம். இதைத் தமது காவியத்திலே அவர் ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார்.

'விக்கிரமாங்கதேவ சரிதம்' என்ற சரித்திர மகாகாவியத்தை இயற்றிய கவிசிரோமணி பில்ஹணர் காஷ்மீரில் பிறந்தவர். 'சாதாரண மக்கள் கவிச் சுவையை எவ்வளவுதான் அநுபவித்தாலும் அதனால் கவிதையின் பெருமை குறைவதில்லை. அரக்கர்கள் எவ்வளவுதான் கொள்ளை யிட்ட போதிலும் கடல் ரத்தினக் களஞ்சியமாகத்தான் விளங்குகிறது' என்று இவர் சொல்கிறார்.

ஹிந்து சாம்ராஜ்யத்தின் கடைசிச் சக்கரவர்த்தியான பிருத்விராஜனைக் கதாநாயகனாகக் கொண்ட 'பிருத்வீராஜ விஜயம்' என்ற மகாகாவியத்தையும் அதன் உரையையும் எழுதிய ஜோனராஜர் (1448 வாக்கில் வாழ்ந்தவர்) காஷ்மீர்காரர்.

காளிதாசருக்கு இணையாக விளங்கிய மகாகவி பாரவி விதர்ப்ப தேசத்தில் பிறந்தவராயினும், காஷ்மீருடன் அவருக்குத் தொடர்பு இருந்தது.

பைசாச பாஷையில் குணாட்யர் எழுதிய பிருகத் கதையை, 24,000 சுலோகங்களில் ஸோமதேவர் மொழிபெயர்த்தார். அற்புதக் கதைகளின் அந்தத் திரட்டுதான் 'கதாஸரித்ஸாகரம்'. ஸோமதேவர், காஷ்மீர் அரசன் அனந்தனுக்குச் சமகாலத்தவர்.

அவந்திவர்மாவின் ஆஸ்தான பண்டிதரான ஆசார்ய ஆனந்த வர்த்தனர் தொனி சம்பிரதாயத்தைத் தோற்றுவித்தவர். இவருடைய 'த்வன்யாலோகம்' முக்கியமான ஆதார நூல். வேதாந்தத்துக்குக் கீதை போல, இலக்கிய விமரிசனத்தில் இது தலைமை வகிப்பது. இவருக்கு உரைகாரராகிய ஆசார்ய அபிநவகுப்தரும் காஷ்மீர்காரரே. பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவர் 'த்வன்யாலோக'த்துக்கு எழுதிய 'லோசனம்' என்ற உரை இவருடைய கொள்கைகளை நன்றாக விளக்குகிறது. பரதருடைய நாட்டிய சாஸ்திரத்துக்கும் இவர் 'பாரதி' என்ற புதிய உரையை எழுதினார். சைவ சாஸ்திரத்தில் இவர் பேராசிரியர்; தந்திர சாஸ்திரத்தைப்பற்றியும் 'தந்த்ராலோகம்' என்ற கிரந்தத்தை எழுதியிருக்கிறார்.

தொனிவிரோதிகளான பட்ட குந்தகரும் மகிமபட்டருங்கூடக் காஷ்மீர் மண்ணில் வளர்ந்தவர்கள். பதினோராவது நூற்றாண்டில் இருவரும் முறையே 'வக்ரோக்திஜீவிதம்', 'வ்யக்திவிவேகம்' என்ற நூல்களை எழுதினார்கள்.

தொனிசம்பிரதாயத்தைப் பரப்பிய பரமாசார்யரான மம்மடரைப் பிறப்பித்த பெருமையும் காஷ்மீருக்கு உண்டு. பாதஞ்சல மகாபாஷ்யத்துக்கு 'ப்ரதீபம்' என்ற உரையை இயற்றிய கையடரும், வேதபாஷ்யகாரரான உப்படரும் இவருடைய தம்பிகள். இவருடைய 'காவ்யப்ரகாசம்' காவிய தத்துவங்களை விளக்கும் அருமையான கிரந்தம். 'ஸாஹித்ய தர்ப்பணம்' என்ற மூல நூலை எழுதிய விசுவநாதர்கூட இவருடைய நூலுக்கு உரை எழுதுவது பெருமை என்று எண்ணினார். இப்படிப் பல விதத்தில் காஷ்மீர் நமது அறிவை வளப்படுத்தியிருக்கிறது. காஷ்மீர் பாரத நாட்டில் ஒரு முக்கியப்பகுதி. காஷ்மீரின் உயிர் நமது உயிர்.

இளவரசிக்கு எப்படித் தெரியும்?

இளவரசி எலிஜபெத்துக்குக் குழந்தை பிறந்த அன்று என் சிநேகிதி ஒருத்தியின் வீட்டுக்குப் போயிருந்தேன். அவளுக்கு இரண்டு பெண்கள். மூத்தவளுக்குப் பத்து வயது. அவள் தாயைப் பார்த்து, "தனக்குக் குழந்தை பிறக்கப் போகிறது என்று எப்படி, அம்மா, இளவரசிக்குத் தெரிந்தது?" என்றாள்.

தாய் பதில் சொல்வதற்குள், "எல்லாப் பேப்பரிலேயுந் தான் இந்தச் சமாசாரம் போட்டிருக்கே! இளவரசிக்குப் படிக்கத் தெரியாதா? படித்திருப்பாள். இது தெரியவில்லையே உனக்கு!" என்றாள் ஐந்து வயதுள்ள இளையவள்.

—மிஸஸ் இ. எம். டார்லஸ்டன்.

இந்த வருஷ ஜோஸ்யம்

1949-ஆம் வருஷத்தின் பெரும் பாகம் விரோதி என்னும் தமிழ வருஷமாக அமைகிறது. இந்த வருஷத்தின் நாயகர்கள் வருமாறு: ராஜா புதன்; பிரதம மந்திரி புதன்; ஸஸ்யாதிபதி அல்லது விவசாய மந்திரி சனி; தான்யாதிபதி குரு; மேகாதிபதி குஜன்; ரஸாதிபதி சந்திரன்; நீரஸாதிபதி அல்லது உலோக மந்திரி சுக்கிரன்; அர்க்காதிபதி அல்லது வியாபார மந்திரி குஜன்; சேனாதிபதி குஜன்; பசுக்களின் அதிபதி பலராமன். அரசியல், வியாபாரம், தொழில் முதலியவற்றில் நிகழப் போவதை இந்த மந்திரிசபை அமைப்பு ஒருவாறு குறிக்கும். இந்தச் சபையில், முக்கியமான சூரியன் இல்லை. சலன புத்தியுடைய புதனுக்கு இரண்டு ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன. போருக்கு உரிய கிரகமாகிய செவ்வாய்க்குச் சேனாபதிப் பதவியும் மேகம், வியாபாரம் ஆகிய இரண்டின் தலைமையும் வேறு கிடைத்திருக்கின்றன. புத்திக்கும் நன்மைக்கும் உரிய குருவுக்கும், சந்திரனுக்கும் சாமானியப் பதவிகள் அமைந்திருக்கின்றன. விரோதி வருஷத்தின் பொதுப் பலனை முனிவர்கள் முன்பே சொல்லியிருக்கிறார்கள்: "குழந்தைகள் நோயால் வருந்துவார்கள்; திருடர்களால் ஜனங்களுக்கு கஷ்டம் ஏற்படும்; பசுக்களின் பால் குறையும்; பகைமை அதிகமாகும்" என்பது அவர்கள் குறிக்கும் பொதுப் பலன்.

இந்த வருஷம் பகைமையும் வெறுப்பும் அழிவும் அதிகமாகும்; உலகத்தில் அமைதிக்குரிய நிலை ஏற்படாது. சந்தேகமும் அவநம்பிக்கையும் ஏற்படும். ஆண் பெண் அனைவரும் அதிகமாக லௌகிக புத்தி உடையவர்களாக இருப்பார்கள். கோதுமையும் பருப்பும் குறையும். பாவம் அதிகமாகும். குடி மக்களுக்கும் ஆள்வோருக்கும் இடையே வேற்றுமை அதிகமாகும். வழக்குகளால் பணச் செலவும் கருந்தானியங்களின் மிகுதியும் இருக்கும். பருவகால மழை தடைப்படும். சமயத்துறையில் புதிய விழிப்பு ஏற்படும். செவ்வாய் மேகாதிபதியாக இருப்பதால் இந்த ஆண்டில் மழை குறையும். பயிருக்குச் சேதம் நேரும். மனிதர்கள் நியாயமற்ற வழியைப் பின்பற்றுவார்கள். ஒழுக்கக் குறைவு நேரும்.

> **பலன்களைப் பார்த்தால் பயமாகத்தான் இருக்கிறது. ஆனால், ஜோஸ்யத்தை மனிதன் முன்னெச்சரிக்கையாகக் கொள்ளவேண்டும் என்று ஜோஸ்யர்களே சொல்லுவார்கள் 'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்றுபவர்' என்ற வள்ளுவர் வாக்குத்தான் பொய்க்குமா?**

காப்பிரைட்: அஸ்ட்ரலாஜிகல் மகஸீன் (ஆங்கிலம்: பிப்ரவரி '49), பெங்களூர்.

சந்தனம், பொன், ஜவுளி இவற்றின் விலை அதிகமாகும். அக்டோபர், நவம்பர் மாதங்களில் உணவுப் பொருள் நிலை மிகவும் கடுமையாகி விடும்.

பல பாங்கிகளும் கைத்தொழில் ஸ்தாபனங்களும் இந்த வருஷம் கஷ்டத்துக்கு உள்ளாகும். இந்தியாவிலும் அமெரிக்காவிலும் பணத்தை மறைக்கும் சூழ்ச்சிகள் நிலவும். வியாபாரிகளுக்கு இந்த வருஷம் மிகவும் கெட்ட பலனைத் தரும்.

எங்கே பார்த்தாலும் தொழில் துறையிலும் அரசியல் துறையிலும் பல பிரச்னைகள் தீராமலே இருக்கும். ராணுவச் செலவு அதிகமாகவே இருக்கும். ஆங்கில எகிப்து விஷயத்தில் இன்னும் வேற்றுமை அதிகப்படும். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் உள்ள தொடர்பு கவலைக்கிடமான கட்டத்தை அடையக் கூடும். மலாயா, ஸயாம், இந்தோனீஷியா ஆகிய இடங்களில் கலகங்களும் புரட்சி வேலைகளும் நிகழும். போக்கிரிகளால் ஜனங்களுக்குத் துன்பம் உண்டாகும். அரசாங்கத்தின் பாதுகாப்பும் பெயரளவில்தான் இருக்கும்.

சமயத் துறையில் புதிய உணர்ச்சி உண்டாகும். வலது சாரிக் கட்சிகளுக்குப் பிராதான்யம் ஏற்படும். பூகம்பம் நேரலாம். பிஹாரிலும் வங்காளத்திலும் வெள்ளத்தால் சேதம் ஏற்பட இடமுண்டு. தொழிலாளர்களிடையே அதிருப்தி நிலவும்.

இந்தியாவில் ரகசியமான சூழ்ச்சிகள் நடைபெற இடம் உண்டு. நம் தலைவர்கள் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் நல்லுறவு ஏற்படுத்த எவ்வளவு முயன்றாலும் பாகிஸ்தான் தன் ஏமாற்று வித்தையை விடாமலே இருக்கும். இந்திய யூனியனுக்குள் புகுந்து கலகம் விளைக்கவும் கூடும். இந்த விஷயத்தில் இந்திய அரசாங்கம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

கப்பல் நஷ்டம் சிறிது ஏற்படும். பொருளாதாரச் சிக்கலும் வரி விஷயத்தில் சங்கடமும் உண்டாகும். மந்திரிகள் மாறுவார்கள். வேலை நிறுத்தங்களும் நிர்வாகத்தில் தொல்லைகளும் உண்டாகும். இந்தியாவுக்கு எதிராகப் பாகிஸ்தான் ரகசியப் பிரசாரம் செய்து வரும். அதைத் தக்கபடி அடக்காவிட்டால் பெரிய போராட்டத்தில் வந்து முடிந்தாலும் முடியும்.

காஷ்மீர் விஷயத்தில் பெயருக்கு ஓர் ஒப்பந்தம் ஏற்படலாம்; ஆனால் அந்த ஒப்பந்தத்தைப் பாகிஸ்தான் நண்பர்கள் அழித்துவிடுவார்கள். மீண்டும் கடுமையாகப் போர் ஆரம்பமாகும்.

பண்டித நேரு தம் உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

டிசம்பர் மாதத்தில் செவ்வாயும் சனியும் சேர்கிறார்கள். அப்போது தேசம் முழுவதும் சீதோஷ்ண ஸ்திதியில் மாறுபாடு நேரும். மேல் கடற்கரையில் புயலால் உயிருக்கும் பொருளுக்கும் நஷ்டம் உண்டாகும். 1965-ஆம் வருஷத்துக்குள் இந்தியா உலகத்திலே மிகவும் சக்தி படைத்த நாடாகிவிடும்.

இங்கிலாந்தில் வேலையில்லாத் திண்டாட்டமும், வியாபார நஷ்டமும் உண்டாகும். பிரசித்தி பெற்ற இருவர் மரணம் அடைவார்கள். நெருப்பாலும் வேறு வகையாலும் உயிர்ச்சேதம் ஏற்படும். போக்குவரத்திலும் நிலக்கரிச் சுரங்கங்களிலும் வேலை நிறுத்தமும் விபத்துக்களும் நேரும். குடியேற்ற நாடுகளிலிருந்தும் ஆளப்படும்

தேசங்களிலிருந்தும் அமைதியற்ற செய்திகள் வரும். சர்ச்சில் கொடிய அசௌக்கியத்துக்கு உள்ளாவார். பொருளாதார நிலை நன்றாக இராது.

பிரான்சிலும் இத்தாலியிலும் அமைதி ஏற்படாது. இந்த வருஷம் முழுவதுமே பிரான்சில் நிலையான அரசாங்கம் இராது.

ருஷியாவில் ஸ்டாலினுக்கு மதிப்பு அதிகமாகும். ஆனாலும் தேக சௌக்கியம் குறைவாகும். அமெரிக்காவோடோ, மேற்கத்திய நாடுகளோடோ யுத்தம் செய்ய இடமில்லை. ருஷியாவில் உள்நாட்டுச் சங்கடங்கள் இருக்கும்.

அமெரிக்காவில் ட்ரூமனுக்கு ஜனங்களின் ஆதரவு இருந்துவரும். வியாபார முதலாளிகளுக்குப் பாதகமான சட்டம் வரும். இதனால் ட்ரூமனுக்குச் சிறிது அபக்கியாதி ஏற்படலாம். யூத ராஜ்யத்தைப் பலப்படுத்த அமெரிக்கா முயற்சி செய்யும்.

சீனத்தின் எதிர்காலத்தைப் பற்றிச் சொல்லப் புகுமுன் அதன் ஜாதகத்தைக் கவனிக்கவேண்டும். அதில் ஊர்ப்பட்ட சிக்கல்கள் உண்டு. இன்று சீனத் தலைவராக உள்ள சியாங் கே ஷேக்கின் ஜாதகத்தை ஊகித்து அமைத்துப் பலனை உணரலாம். அவர் 30-10-1885-இல் பிறந்தவர். 1928-ஆம் வருஷம் அவர் சீனத்தின் தலைவர் ஆனார். கேது ஆளும் ஸ்தானத்தில் இருப்பதால் பல விரோதிகள் அவருக்கு உண்டு. ஆனால் அவர்களை மன்னித்து உத்தியோகத்தில் அமர்த்திவிட்டார். இப்போது மூன்றாவது முறையாக அவரை ஏழரைநாட்டுச் சனி பீடித்திருக்கிறது. அவருடைய க்ஷேமத்தைப்பற்றிக் கவலை கொள்ளத்தான் வேண்டும். முன்பே இதைப் பற்றி நாம் எழுதியிருக்கிறோம். "சீனத் தலைவருக்கு மிகவும் சங்கடமான நிலை வரும். அவர் உயிருக்கே அபாயம் நேரத்தக்க சந்தர்ப்பமும் வரலாம். சீன மக்கள் பட்டினியால் கஷ்டப்படுவார்கள். அரசியல் குழப்பம் நேரும். அரசாங்க நிர்வாகத்தில் மாற்றம் ஏற்படும். குவோமிண்டாங் கட்சிக்கு இது துரதிருஷ்ட காலம். இந்தப் போராட்டத்தைச் சீனா கடந்துவிடும். கம்யூனிஸ்டுகள் சீன தேசத்துப் பண்போடு ஐக்கியமாகிவிடுவார்கள். 1951-வரையில் சீனக் குடியரசுக்கு ராகு தசை நடக்கிறது. பொருளாதாரம், வியாபாரம் இவற்றில் மந்தம் நேரும். பசியும் பிணியும் மிகுதியாக வந்து துன்புறுத்தும். 1951-ஆம் வருஷத்துக்குப் பிறகு முக்கியமாகக் குரு தசையில் சீனம் பேரரசாகிவிடும். அயல் நாட்டாருடைய தலையீட்டை உதறித் தள்ளிவிட்டுச் சர்வ சுதந்தரமாக நிலை நிற்கும்."

இப்போதைக்குச் சீனத் தலைவர்கள் ராஜ தந்திரத்துடனும் முன் யோசனையுடனும் நடந்துகொள்ள வேண்டியது அவசியம். சீன சாதியினர் தனி மனிதனுடைய நல்லியல்பையும் தனி மனிதனுக்கு உரிய மதிப்பையும் வற்புறுத்துபவர்கள். இதனால் அரசாட்சியில் தவறு நேர்ந்தால் ஆள்பவரையே மாற்றிவிட வேண்டும் என்ற கொள்கை அங்கே இருக்கிறது. இந்த உள்நாட்டுக் கலகம் இன்னும் இரண்டு மூன்று வருஷங்களுக்காவது நீடிக்கும்.

க்விஸ்

[நமக்கு மிகவும் தெரிந்த விஷயங்களில்கூடச் சில சமயம் திட்டமான விவரங்கள் ஞாபகம் இருப்பதில்லை. இதோ சில கேள்விகள்: எங்கே, உங்கள் கவனசக்தியைச் சோதித்துப் பாருங்கள். பிறகு, 24-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக் கொள்ளுங்கள்.]

தலைநகர்:

1. பாபர் முதல் முதலில் மாளிகை கட்டிய தலைநகர் எது?

2. தற்போதைய டெல்லிநகரம் (பழைய டெல்லி) யார் அமைத்தது? ஆரம்பகாலத்தில் அதன் பெயர் என்ன?

3. நேபாளத்தின் தலைநகர் எது?

சங்கீதம்:

1. கீழ்க்கண்ட கர்நாடக ராகங்களுடன் அநேகமாக ஒத்திருக்கும் ஹிந்துஸ்தானி ராகங்கள் இவற்றில் எவை? (அ) மோஹனம், (ஆ) மத்யமாவதி, (இ) ஹிந்தோளம்.

2. அடிக்கடி நீங்கள் கேட்கும் பின் வரும் கீர்த்தனைகளின் ராகம் உங்களுக்குத் தெரியுமா?— (அ) ஸரஸஸாமதான, (ஆ) க்ருபயா பாலய, (இ) யோசனா கமல லோசனா, (ஈ) நகுமோமு.

3. கர்நாடக சங்கீதக் கச்சேரிகளில் வயலின் இருப்பது போல் வடநாட்டில் பக்க வாத்தியமாக உதவுவது இந்த மூன்றில் எது?— (அ) ஸிதார், (ஆ) ஸாரங்கி, (இ) தில்ருபா.

விளைபொருள்:

1. ஒரு பொருள் உலகம் முழுதும் உள்ள விளைச்சலில் 75% பாகிஸ்தானில் மட்டும் விளைகிறது. அது எது?

2. இந்தியாவைத் தவிர மற்ற நாடுகளில் விளையாத பழம் எது?

3. ஸபோடா எந்த இனத்தைச் சேர்ந்தது?

பிராணிகள்:

1. யானைத் துதிக்கையில் எத்தனை எலும்புகள்?

2. முதலை வாய் எந்த விதத்தில் விசேஷம் வாய்ந்தது?

3. திமிங்கிலம் முட்டையிடுவது கடலுக்கடியிலா, கடலோரமாயுள்ள பாறைகளிலா?

அரசியல்:

1. இந்திய அரசியல் நிர்ணய சபையில் சென்னை மாகாணத்திலிருந்து எத்தனை பெண்மணிகள் அங்கத்தினராக இருக்கிறார்கள்? யார் யார்?

2. இதுவரை எத்தனை பெண்மணிகள் காங்கிரஸ் அக்கிராசனப் பதவி வகித்திருக்கிறார்கள்?

விளையாட்டு:

1. வெளிநாடுகளில் விளையாடச் சென்ற வெவ்வேறு விளையாட்டு

கோஷ்டிகளில் கலந்து கொள்ளும் அளவுக்கு இரண்டு விளையாட்டுக்களில் தேர்ச்சி பெற்ற இந்தியர் யார்?

2. பாட்மிண்டன் முதலில் விளையாடப்பட்டது எங்கே? அதற்கு அந்தப் பெயர் ஏன் வந்தது?

3. ஹென்லி கீழ்க்கண்ட விளையாட்டுக்களில் எதற்குப் பெயர் போனது?— (அ) புட்பால், (ஆ) கிரிக்கெட், (இ) படகு விளையாட்டு, (ஈ) குதிரைப் பந்தயம்.

போது:

1. தற்போதிருக்கும் அமைப்பு வாய்ந்த ஸைகிள் வண்டி முதல் முதல் எப்போது பழக்கத்துக்கு வந்தது? அந்த அமைப்பைக் கண்டு பிடித்தவர் யார்?

2. பவுண்டன் பேனா கண்டு பிடித்தவர் இந்த மூன்று பேரில் யார்? (அ) ஷீபர், (ஆ) வாடர் மன், (இ) பார்க்கர்.

3. கிட்டு தகப்பனாருடன் சினிமா பார்க்கச் சென்றான். தியேட்டர் வெளியே ஒருபக்கம் சிவப்புவாளிகள் தொங்கிக்கொண்டிருந்தன. அவற்றில், "நெருப்பு விபத்து நேர்ந்தால் உபயோகிப்பதற்கு என்று போட்டிருந்தது. கிட்டு இதைப் பார்த்து விட்டு, "இதென்ன அப்பா, இந்த வாளிகளில் தண்ணீர் இல்லாமல் மணல் ஏன் கொட்டி வைத்திருக்கிறது?" என்று கேட்டான். தகப்பனார் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தார். ஏன்? உங்களுக்குத் தெரியுமா?

யுக்தி:

21 வட்டக் கட்டைகள் இருக்கின்றன. அவற்றை வரிசைக்கு 5 வீதம் 8 வரிசைகளும், வரிசைக்கு 3 வீதம் 4 வரிசைகளும் இருக்கும்படி அமைக்கவேண்டும். எப்படி?

சிறுவனும் சிலையும்

சென்னையில் ஓர் ஐரோப்பிய உத்தியோகஸ்தர் இருந்தார். அவர் தினந்தோறும் தம் ஐந்து வயது மகனை மௌண்ட்ரோடுக்கு அழைத்துச் செல்வது வழக்கமாம். ஒவ்வொரு தரமும் குதிரை மேல் இருக்கும் மன்ரோவின் சிலையை ஏற இறங்கப் பார்த்து விட்டுப் பையன், "அப்பா! அது யார்?" என்று கேட்பான். அவரும், "அது மன்ரோ" என்று சொல்லுவார். கொஞ்சநாள் கழித்து அவர் உத்தியோகத்திலிருந்து விலகினார். சீமைக்குப் புறப்பட ஏற்பாடாயிற்று. போவதற்கு முந்தியநாள் பையன் மன்ரோவைக் கடைசி முறையாகப் பார்க்கவேண்டும் என்று தகப்பனாரைத் தொந்தரவு செய்தான். அவரும் "சரி" என்றார். அன்று சாயங்காலம் அவனை அங்கே அழைத்துக்கொண்டு போனார். பையன், வெகுநேரம் அந்தச் சிலையைப் பார்த்துக் கொண்டே இருந்தான். இருட்ட ஆரம்பித்தது; பையன், "போய் வருகிறேன், மன்ரோ" என்று கண்களில் நீர் ததும்பச் சிலையிடம் விடை பெற்றுக்கொண்டான். பையனுடைய தேசாபிமானத்தைக் கண்டு தகப்பனருக்குக்கூட அந்த இடத்தைவிட்டுப் போக மனம் வரவில்லை. அப்புறம் இரண்டு பேரும் திரும்பிப் போகப் புறப்பட்டார்கள். சட்டென்று பையன், "மன்ரோமேலே இருக்கிறானே! அவன் யார், அப்பா?" என்று கேட்டான்!

நம் சுதந்தரத்துக்காக அமெரிக்காவிலே நடந்த போராட்டம் பலருக்குத் தெரிந்திராது. அதை அதில் கலந்த ஒருவரே இதோ எழுதியிருக்கிறார்.

அமெரிக்காவில் இந்தியா லீக்

ராஜேந்திரநாத் குப்த

விவேகானந்தரும் ரவீந்திரரும் லாஜபத் ராயும் அமெரிக்காவில் இந்தியாவின் பெருமையைத் தெரிவித்த ஆதி புருஷர்கள். மன வலிமை, கௌரவம், தலைமை இவற்றைக்கொண்டு இந்தக் காரியத்தைச் செய்தார்கள். அவர்கள் நினைவுறுத்திய அந்தப் பெருமை, காந்தீயத்தைப்பற்றி அமெரிக்கா அறிந்தபோது பின்னும் நன்றாகப் புலப்பட்டது. ஜவாஹர்லாலின் புத்தகங்கள் காந்தீயக் கொள்கைகளை மேல் நாடுகளுக்கு நன்றாக விளக்கின.

இத்தகைய பெரியோர்கள் அமெரிக்கருக்குச் சித்திரித்துக் காட்டிய பாரதநாட்டின் சித்திரமும், பிரிட்டிஷாருடைய ஆதிக்கத்தில் அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியாவின் உருவமும் வெவ்வேறாகத் தோன்றின. இந்த இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை அமெரிகர் உணர்ந்து தெளிந்தார்கள். இந்தியா சுதந்தரம் பெறும் விஷயத்தில் அவர்கள் அநுதாபங் கொண்டார்கள்.

இந்தப் பெரியோர்களின் செல்வாக்கோடுகூட, இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு நாடுபார்க்கச் சென்றவர்களும், அரசியல் அகதிகளும், மாணக்கர்களும், வியாபாரிகளும் அமெரிக்கருக்கு இந்தியா விஷயத்தில் பேலும் மேலும் சிரத்தை உண்டாக்கினார்கள்.

இந்தியாவுக்கு 1920 - 25 - ஆம் வருஷங்களில் சில அமெரிக்கர்கள் போனார்கள். அவர்களில் சிலர் இந்தியாவின் கலைப் பண்பைப் பாராட்டினார்கள்; சிலர், இந்தியர்களின் வாழ்க்கை முறையைக் கண்டு அருவருப்புக் கொண்டார்கள். பாதிரிகள் கூடத் தங்கள் கைங்கரியத்தைச் செய்தார்கள். ஆனாலும் ஒதுங்கி வாழ விரும்பும் அமெரிக்கருக்கு இந்தியா என்ற தேசம் பூலோகத்தில் இருக்கிறது என்று இரண்டு மகா யுத்தங்களுக்குப் பிறகே தெரியவந்தது.

இந்தியா எங்கோ ஒரு மூலையில் இல்லாமல் இருந்திருந்தால் கொலம்பஸ் அமெரிக்காவையே கண்டுபிடித்திருக்கமாட்டாரே! இந்திய சமுதாயத்திலுள்ள சிக்கலான அமைப்புக்களும், பல வேதாந்தங்களும், ஆயிரக்கணக்கான தெய்வங்களும், ஹிந்து முஸ்லிம் சண்டையும் இந்தியாவைப்பற்றி அதிகமாகத் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆவலை அமெரிக்கருடைய உள்ளத்தில் எழுப்பவில்லை.

இதனால் இந்தியர் வாழ்க்கையின் புறத்தோற்றத்தை மாத்திரம் அமெரிக்கர்கள் கவனித்தார்கள். முகமூடிக்குள்ளிருந்தபடியே இந்தியப் பெண்கள் பார்ப்பது, நிர்வாண

மூலம்: பம்பாய் க்ரானிகல் (ஆங்கிலம்: 16-1-'49) பம்பாய்.

சந்நியாசி ஆணிப் படுக்கையில் இருப்பது, தீண்டாதார் கோவிலுக்குள் புக வேண்டுமென்று மன்றாடுவது, நவரத்தின கசிதமான மகாராஜா, சுக புருஷரான நவாப், பெரிய முண்டாசும் புல்லாங்குழலும் உடைய மந்திரவாதி கயிற்றை ஆகாசத்தில் நிறுத்தும் ஜாலம் - இத்தியாதி விஷயங்களிலேதான் அமெரிக்கரது கவனம் சென்றது. பிராணிகளில் யானையும் பாம்பும் புலியும் மயிலும் இந்தியாவுக்கு அடையாளமாக நின்றன.

இந்த அலங்கோலச் சித்திரத்துக்குத் துணையாகப் பிரிட்டிஷ் பிரசாரகர்கள் சொந்த நலத்தை உத்தேசித்து, செய்திகளையும் கற்பனையையும் சேர்த்துக் கதை பண்ணினார்கள். மரத்தின் கிளையிலிருந்து தலைகீழாகத் தொங்கும் குரங்கைப் போன்றவன் இந்தியன் என்று தோன்றும்படி செய்தார்கள். இருந்தாலும் சென்ற யுத்தம் வரையில் அமெரிக்கர் ஓரளவு விரும்பும் பிராணியாகவே இருந்தான் இந்தியன். இந்த யுத்தத்திலோ பிரிட்டிஷார் அவனை ஒரு கொடிய மிருகமாகக்கூடச் சித்திரித்துக் காட்டினார்கள். இந்திய தேச பக்தர்களை ஜப்பானின் பக்தர்களாகக் காட்டினார்கள். காந்தியடிகளைப் பிரசார மகாத்மா என்று கூசாமல் சொன்னார்கள்.

ஏழை இந்தியன் கொடுக்கும் வரிப்பணத்தின் ஒரு பகுதி இப்படி அமெரிக்காவில் செலவாயிற்று. இந்தியன் தன்னைத் தானே ஆளத் தகுதியில்லாதவன் என்று நிரூபிக்க முயன்றார்கள். "இந்தியாவிலுள்ள கிளர்ச்சிக்காரர்கள் ஜப்பானியருடன் சூழ்ச்சி செய்து தங்கள் பழைய உபகாரிகளைத் துரத்த ஏற்பாடு செய்கிறார்கள்" என்று இங்கிலாந்தில் உள்ள பிரபு ஒருவர் சொன்னார்.

அப்போது இந்தியத் தலைவர்கள் தங்கள் கட்சியை எடுத்துச்சொல்ல வகையின்றிச் சிறையிலே கிடந்தார்கள். இந்தியாவிலிருந்து செல்லும் செய்திகளை, அதிகாரிகள் கடுமையாகத் தணிக்கை செய்தார்கள். அமெரிக்காவிலே பிரிட்டிஷாரின் கூலிக்காரர்களான சில இந்தியர்கள் தங்கள் இனத்தாரைப்பற்றியே இழிவாகப் பிரசாரம் செய்தார்கள். இப்போது தேச பக்தர்களாகச் சொல்லிக்கொள்ளுகிற சிலர் அப்போது இந்திய அரசாங்கத்தில் பெரிய உத்தியோகம் வகித்திருந்தார்கள். அவர்கள் ஜவாஹர்லால், ஆஜாத், காந்தி ஆகியவர்களைப் பொதுஜனங்களுக்கு முன் அவமதித்துப் பேசினார்கள். அமெரிக்கர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒரே குழப்பமாக இருந்தது. ஜப்பானியர்களோடு போரிட்டவர்கள் அவர்கள். அந்தப் பகைவனோடு சேர்ந்து சூழ்ச்சி புரியும் மக்களிடம் அவர்களுக்கு எப்படி அநுதாபம் உண்டாகும்? பிரிட்டிஷ்காரருடைய பிரசாரம் பலன் அளித்துவிட்டதென்றே தோன்றியது.

இந்த அவலமான நிலையில், தங்கள் நாட்டிலிருந்து வந்தவர்களுடைய துரோகச் செயல்களைக் கண்டு ஆற்றாமல் அமெரிக்காவில் உள்ள இந்தியா லீக் விஷமத்தைத் தடுக்க முன்வந்தது. இந்தியர் சிலர் சேர்ந்து 1937 - ஆம் வருஷத்தில் ஆரம்பித்து நடந்துவந்தது இந்த லீக். இதைச் சேர்ந்தவர்கள் பொதுமேடையிலும் ரேடியோவிலும் பேசி, விஷமத்தனமான பிரசாரங்களையும் கூலிக்காரர்களின் பேச்சுக்களையும் தவிடுபொடியாக்கினார்கள். லீகின் தலைவர் ஸர்தார்

ஜே. ஜே. சிங் திறமையும் சுறு சுறுப்பும் அஞ்சாமையும் செல் வாக்கும் படைத்தவர். வெறும் உல்லாச சங்கமாக இருந்த லீக் அவர் தலைமையில் திடீரென்று அரசியல் நிலையம் ஆகிவிட்டது.

இந்தியாவின்மேல் அபிமான முள்ள அமெரிக்கர்கள் பிரிட்டிஷ் கூலிக்காரர்களின் பொய்ப்பிரசாரத் தால் கலங்கியிருந்தார்கள். அவர் கள் இப்போது உற்சாகத்தோடு இந்தியா லீகில் சேர்ந்தார்கள். 'நியூ யார்க் டைம்ஸ்' பத்திரிகையில் தனியே ஒரு பக்கம் முழுவதும் ஒரு விளம்பரம் வெளியாயிற்று. நேச தேசங்கள் இந்தியா விஷயத் தைக் கவனிக்கவேண்டுமென்று தெரிவித்த அந்த விளம்பரத்தில் பல துறையிலும் செல்வாக்குப் படைத்த 50 அமெரிக்கர்கள் கையெழுத்திட்டிருந்தார்கள். நியூ யார்க் நகர மண்டபத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் இந்திய தேச பக்தர்களைக் கைது செய்ததைக் கண்டித்துப் பேசினார்கள். இந்தக் கூட்டத்தைப்பற்றிய செய்திகளைப் பத்திரிகைகள் நல்ல முறையில் வெளியிட்டன. அதன்பின் தாராள நோக்கமுடைய அமெரிக்கர் பலரிட மிருந்து பிரிட்டிஷாரின் செயலைக் கண்டித்துப் பல கடிதங்கள் வெளி யாயின.

அதுவரையில் பிரிட்டிஷ் பிரசாரகர்கள் லீகைச் சட்டை செய் யாமல் இருந்தார்கள். அவர்கள் அனுப்பிய ரகசிய அறிக்கை ஒன் றில், "இந்தியா லீக் புற்றீசலைப் போல முளைத்த ஸ்தாபனம். மட்ட மான இந்திய போஜன விடுதியில் கூட்டம் போடுகிறது. 60, 70 பேருக்குமேல் கூடுவதே இல்லை" என்று கண்டிருந்தது. 1943 ஜனவரி 26-இல் இந்திய சுதந்தரப் பிரதிக் கினைத் தினவிருந்தை இந்தியா லீக் பில்டிமோர் ஹோட்டலில் நடத்தியது. அப்போதுதான் அந் தப் பிரசாரகர்கள் தம் கருத்தை மாற்றிக்கொண்டுவிட்டார்கள். 600, 700 தேர்ந்தெடுத்த விருந்தினர்கள் அன்று வந்திருந்தார்கள். இந்தக் கூட்டம் பிரிட்டிஷாருக்குப் பீதியை உண்டாக்கிவிட்டது. தங் கள் முழுப் பலத்தையும் கொண்டு இந்தியா லீகின் காரியங்களைக் கண்டிக்கவும் அவமதிக்கவும் புறப் பட்டார்கள்.

மிகவும் கெட்டிக்காரரான ட்ரூ பியர்ஸன் என்பவரை இந்த வேலைக்கு அமர்த்தினார்கள். அவர் பத்திரிகைகளில் தொடர்ந்து கட் டுரைகளை எழுதி வருபவர். ஒதுங்கி நிற்கும் கட்சியினரும் நாஜி அபி மானிகளும் பிரிட்டிஷ்காரர் கொள்கையையோ ரூஸ்வெல்ட்டின் வெளிநாட்டுக் கொள்கையையோ கண்டிக்க இந்தியா லீகை ஒரு கருவியாக உபயோகித்துக்கொள் கிறார்களென்று அவர் எழுதினார். நியூ யார்க்கில் நடந்த விருந்துக்கு மூலகாரணமே அத்தகைய மனிதர் சிலர்தாம் என்றும் எழுதினார்.

யுத்தம் நடந்துகொண்டிருந்த போது இப்படி ஒரு பெரிய எழுத் தாளர் எழுதினால் என்ன ஆகும்? லீகின் கௌரவத்துக்கே ஆபத்து வந்துவிட்டது. இந்த ரீதியிலேயே பிரிட்டிஷ் கையாட்களும் சமாசா ரப் பத்திரிகைகளின் மூலம் லீகை மாசுபடுத்தி வந்தார்கள். லீகைச் சேர்ந்த சிலரே இதனால் காபரா அடைந்து நழுவப் பார்த்தார்கள்.

தலைவராகிய ஜே. ஜே. சிங் அவர்களை நழுவ விடவில்லை. அவர் களிடம் மிகவும் உணர்ச்சியோடு பேசித் திருப்பினார். கோர்ட்டில் ட்ரூ பியர்ஸன்மேல் வழக்குத்

தொடப்பது என்று தீர்மானித்தார்கள். பிரிட்டிஷார் கொடுத்த போலித் தகவல்களை ஆதாரமாகக் கொண்டு அவர் எழுதிய விஷயங்கள் பொய்யென்பதை வெளிப்படுத்தி, சிங் ஒரு நீண்ட அறிக்கை விடுத்தார். நல்ல வேளையாக ட்ரூ பியர்ஸனின் கட்டுரையில் சில நிச்சயமான தவறுகள் இருந்தன. சில முக்கியமான ஆசாமிகள் இந்தியா லீகின் நிர்வாகக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்று அவர் எழுதியிருந்தார். அவர்கள் சாதாரண அங்கத்தினராகக்கூட இருக்கவில்லை. இந்த மாதிரி விஷயங்களை அவர் சரியா என்று பார்க்கவே இல்லை. லீகின் தலைவர் வெளியிட்ட அறிக்கை இத்தகைய முழுப் பொய்களை எடுத்துக் காட்டியது. அது கண்டு பியர்ஸனுடைய எழுத்தைப்பற்றிப் பொது ஜனங்களின் உள்ளத்தில் சந்தேகம் தோன்றியது.

"இந்தியா லீக் இந்தியாவின் சுதந்தரத்துக்காகவும் எல்லா மக்களின் சுதந்தரத்துக்காகவும் பாடுபடுகிறது. ஐக்கிய நாடுகள் வெற்றிபெற வேண்டுமென்பதே இதன் நோக்கம். இந்தியரும் அமெரிக்கரும் இதன் அங்கத்தினர்கள். அவர்கள் சுதந்தரத்திலும் ஜனநாயகத்திலும் நம்பிக்கை உள்ளவர்கள். நாஜி அபிமானிகள், பிரிட்டிஷ் விரோதிகள், ஒதுங்கி நிற்பவர்கள் இவர்களின் கைப் பொம்மையாக இந்த ஸ்தாபனம் இருப்பதாகச் சொல்வது உண்மைக்கு விரோதம்" என்று ஜே. ஜே. சிங் எழுதியிருந்தார்.

சில சட்ட நிபுணர்கள் கலந்து ஆலோசித்தார்கள். அவர்களின் யோசனைப்படியே ட்ரூ பியர்ஸனை அணுகி ஜே ஜே. சிங் உண்மையை எடுத்துச் சொன்னார். அந்த எழுத்தாளர் சில செய்திகளை ஆராய்ந்த பிறகு உண்மையை உணர்ந்தார். பிரிட்டிஷ் செய்தி ஸ்தாபனத்தார் தம்மை ஏமாற்றிவிட்டார்கள் என்பதையும் தெரிந்துகொண்டார். இனி லீகின் நண்பராக இருக்கப் போவதாகவும் சொன்னார். ரூஸ்வெல்ட்டின் பிரதிநிதி வில்லியம் பிலிப்ஸ் இந்தியாவிலிருந்து அனுப்பிய அறிக்கையை அவர் அமெரிக்கப் பத்திரிகைகளில் வெளியிட்டார். சர்ச்சிலும் ரூஸ்வெல்ட்டும் பிலிப்ஸுடன் கூடிப் பேசிய சம்பவத்தையும் வெளிப்படுத்தினர். இவை இந்தியாவுக்கு மிகவும் சாதகமாக இருந்தன.

லீகை அடக்குவதற்குப் பிரிட்டிஷார் செய்த முயற்சிகள் வீணாகவே அவர்கள் அற்பத்தனமான தந்திரங்களில் இறங்கினார்கள். அமெரிக்க அரசாங்க அதிகாரிகளிடம், இந்திய வியாபாரிகளின் வருமானவரிக் கணக்கை மறுபடி தணிக்கை செய்யும்படி சொன்னார்கள். அதில் ஏதாவது தப்பு இல்லாமல் இருக்குமா? அதுவே சாக்காக அவர்களை அமெரிக்காவிலிருந்து வெளியேற்றி இந்தியாவுக்கு அனுப்பச் செய்துவிட்டால் பிறகு அங்கே இருக்கவே இருக்கிறது, அடக்கு முறைச் சட்டம். சில இந்தியர்களின் பிரஜா உரிமையைப்பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் தூண்டிவிட்டார்கள். பல வருஷங்களுக்கு முன் இந்தியாவிலும் இங்கிலாந்திலுமிருந்து பல இந்தியர்கள் பிரிட்டிஷாரின் அடக்கு முறைக்கு ஆளாகிக் கானடா வழியாக அமெரிக்காவை அடைந்திருந்தார்கள். இந்த அரசியல் அகதிகளிடம் எந்த விதமான ஆதரவுப்பத்திரமும் இல்லை. அரசாங்கம் இஷ்டப்பட்டால் இவர்களை அமெரிக்காவிலிருந்து அனுப்பி

விடலாம். ஆனால் அமெரிக்க அரசாங்கம் அப்படிச் செய்யவில்லை.

கடைசியாகப் பிரிட்டிஷ்காரர்கள் ரகசியமாகப் பயமுறுத்தும் காரியத்தில் இறங்கினார்கள். லீகைச் சார்ந்தவர்களுக்கு வெவ்வேறு மனிதர்களின் மூலமாகப் பயமுறுத்திக் கடிதம் எழுதச் செய்தார்கள். அமெரிக்கக் குற்ற ஆராய்ச்சிக்காரர்கள் லீக் காரியாலயத்தைச் சோதிக்கப் போகிறார்களென்றும், ஜே. ஜே. சிங் முதலியவர்களைக் கைது செய்யப் போகிறார்களென்றும் பயமுறுத்தினார்கள். லீக் அமெரிக்காவில் இருந்தாலும், அங்கே பிரிட்டிஷார் அதிகாரம் நடக்காது என்றாலும் இந்தியர்களைத் துரத்துவதற்கு ஏதாவது வழி பண்ணிவிடுவார்களோ என்று சில அங்கத்தினர்கள் கலக்கம் அடைந்தார்கள்.

இந்தப் பயமுறுத்தலுக்கு ஏதாவது ஆதாரமுண்டா என்பதை ஆராய வாஷிங்டனுக்குச் சென்று உயர் பதவியிலுள்ள அரசாங்க அதிகாரியை ஜே. ஜே. சிங் விசாரித்தார். "எதுமுதல் அமெரிக்காகூடப் பிரிட்டிஷ் காலனி ஆயிற்று?" என்று பரிகாசமாகக் கேட்டார். அதைக் கேட்ட அதிகாரி ஒன்றும் புரியாமல் விழித்தார். கதையை முழுதும் கேட்ட பிறகு பிரிட்டிஷ்காரர்களைக் கன்னா பின்னாவென்று வைதார். பிரிட்டிஷ் செய்தி ஸ்தாபனத்தார் செய்த போக்கிரித்தனத்தைக் கண்டு அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. குற்ற ஆராய்ச்சிப் பகுதிக்கு டெலிபோன் செய்து இந்தப் பயமுறுத்தல்களில் அணுவளவாவது உண்மை உண்டா என்று விசாரித்தார். விரிவான ஆராய்ச்சி நடந்தது. எல்லாம் பிரிட்டிஷ்காரர் கட்டி விட்ட பொய் என்பது தெரியவந்தது. பிறகு சிங் இரண்டு அதிகாரிகளை லீக் காரியாலயத்துக்கு வந்து எல்லாவற்றையும் பார்வையிட்டுத் தெளிந்துகொள்ளும்படி அழைத்தார். குற்ற ஆராய்ச்சிப் பகுதியிலிருந்து இரண்டு பேர் அங்கே சென்று எல்லாக் காகிதங்களையும் பார்த்தார்கள்; கணக்கு வழக்கைக் கவனித்தார்கள். லீக் தப்பான வழியில் ஒன்றும் செய்யவில்லை என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். கடைசியில் லீகைப் பாராட்டிவிட்டு, "உங்களுக்குப் பலம் ஓங்கட்டும். ஜான் புல் நாசமாய்ப் போகட்டும்" என்று ஆரவாரித்துக்கொண்டே சென்றார்கள்.

எஜமானி கணக்கு

சுறுசுறுப்பான ஓர் எஜமானி அம்மாள் தன் வேலைக்காரியிடம் மிகவும் வருத்தத்தோடு இப்படிச் சொன்னாள்: "இன்று திங்கட்கிழமை போது விடிந்துவிட்டது; நாளைக்குச் செவ்வாய்க்கிழமை; மறுநாள் புதன்கிழமை. வாரத்திலே பாதி போயும், இன்னும் ஒரு வேலையும் ஆகவில்லை."

—டெல்லர்.

உலகத்திலேயே மகா நவீனமான நகரம் நியூ யார்க். அதில் உள்ள இரண்டு லட்சம் வீடுகளில் மட்டும் 'பாத் ரூம்' (ஸ்நான அறை) இல்லை.

—வால்டர் வின்செல்.

லட்சியம் வெகு தூரத்தில் இருக்கலாம்; ஆனால் அதற்குச் செல்லும் அடுத்த படி வெகு அருகே இருக்கிறது.

—அநாமி.

அம்மை குத்துவதா, கூடாதா என்ற விவாதம் இன்னும் இருந்துகொண்டே இருக்கிறது. அது எப்படியானாலும், அதை ஆதியில் ஸ்தாபித்த டாக்டர் மகாதயாளு.

அம்மை குத்திய முதல் டாக்டர்

ஓ. பி. நம்பூதிரிபாட்

அம்மை குத்தும் முறையைக் கண்டுபிடித்தவர் எட்வர்ட் ஜென்னர். இவர் 1749 - இல் இங்கிலாந்திலே பர்க்கிலி என்ற கிராமத்தில் பிறந்தார். அந்த நாளில் பெயர் பெற்ற வைத்தியரான ஜான் ஹண்டரிடம் மூன்று வருஷ காலம் பயிற்சி பெற்றார். 1775-இல் தான் இவர் முதல் முதலாக அம்மை குத்துவதற்கு வேண்டிய ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார். இருபத்து மூன்று வருஷகாலம் இப்படி ஆராய்ச்சி செய்தார். பிறகு அதைப்பற்றி ஒரு புஸ்தகம் வெளியிட்டார்.

ஒரு முறை அம்மை போட்டியவர்களுக்கு மறுமுறை வராது என்ற உண்மையை ஜனங்கள் முன்னமேயே அறிந்திருந்தார்கள். கீழ் நாடுகளில் சில இடங்களில், அதிகக் கொடியதாக இல்லாத அம்மையைக் குழந்தைகளுக்கு வேணும் என்றே வரவழைப்பார்கள்; இப்படிச் செய்தால் அப்புறம் கொடிய அம்மை அவர்களுக்கு வராதாம்.

அந்த நாளில், துருக்கியில் இதைவிடத் தீவிரமான முயற்சி எடுத்து வந்தார்கள். ஒரு மனிதரின் அம்மை முளையை ஊசியால் குத்தி எடுத்து உலர்த்தி அதை மற்றவர்களுக்குக் குத்தி அம்மையை வரவழைத்தார்கள்.

அப்போது துருக்கியில் ஆங்கிலப் பிரதிநிதியாக இருந்த லார்ட் மாண்டேகுவின் மனைவிக்கு இந்த முறையில் அதிக நம்பிக்கை. அதனால் இங்கிலாந்தில் தன்னால் முடிந்த அளவுக்கு இதைப்பற்றிப் பிரசாரம் செய்துவந்தாள்.

பிரான்ஸ் தேசத்தில் அம்மையைத் தடுக்க முதல் முதல் பிரசாரம் செய்தவர் வால்டேர். இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலும் இந்த முறை ஓரளவு பரவி வந்தது.

இந்த நிலையில் 'கோமாரி' வந்தவர்களுக்கு அம்மை குத்தினால் ஒன்றும் செய்யாது என்பதை ஜென்னர் தற்செயலாகக் கண்டு பிடித்தார். சாதாரணமாக நாம் மாடு மேய்ப்பவர் முதலியவர்களிடம் காணும் வியாதிதான் கோமாரி. அது எல்லா விதத்திலும் அம்மை போன்றதுதான்; ஆனாலும் விஷம் பட்ட இடத்தில்மட்டும் உண்டாகும்; சீக்கிரமாகவும் ஆறிவிடும்.

ஒரு நாள் ஜென்னர் 'கோமாரி' வந்த ஒரு ஸ்திரீயின் கையிலிருந்து 'சீழ்' எடுத்து ஒரு குழந்தையின் உடலில் குத்தினார். குழந்தைக்குக் 'கோமாரி' வந்து அது நன்றாகக் குணப்பட்டு விட்டது. இது நடந்தது மே மாதம். மீண்டும் ஜூலையில் அம்மை விஷத்தை அதே குழந்தையின் உடலில் செலுத்தியபோது அம்மை வரவில்லை. அந்த வருஷம் பல தடவை அந்தக் குழந்தையின் உடலில் அம்மை விஷத்தை ஏற்றியும் ஒன்றும் நேரவில்லை.

காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்: 12-12-'48), கள்ளிக்கோட்டை.

இதை உடனே ஜென்னர் பிரிட்டிஷ் வைத்திய சங்கத்துக்கு அறிவித்தார். ஆனால், அந்தச் சங்கத்தார் இதைப் பொருட்படுத்தவில்லை. ஜென்னர் மட்டும் விடாமுயற்சியோடு தம் ஆராய்ச்சியைச் செய்து வந்தார்.

கடைசியாக ஜென்னரின் பெருமையை அறிந்து மக்கள் அவரை ஆதரிக்க முன் வந்தார்கள். பிரிட்டிஷ் பார்லிமெண்டு அவருக்கு முப்பதினாயிரம் பவுன்களைப் பரிசாக அளித்தது. நெப்போலியன் சக்கரவர்த்திக்கு ஜென்னர் அம்மை குத்தினார். அதன் விளைவாக நெப்போலியன் ஜென்னரைக் கொண்டாடிக் கௌரவித்தார். ஜென்னரிடம் நெப்போலியனுக்கு அபார மதிப்பு.

ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் நடந்த போரில் பிரெஞ்சுக்காரர் ஓர் ஆங்கிலேயனைச் சிறைப்படுத்தினார்கள். அவனை விடுவிக்கும்படி ஜென்னர் நெப்போலியனுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதைப் படித்துவிட்டு நெப்போலியன் தம் ராணியிடம், "அந்த மனிதர் எதைக் கேட்டாலும் நான் 'முடியாது' என்று சொல்ல மாட்டேன்" என்றார்.

ஜென்னர் முதலில் அம்மை குத்திப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு உதவியாக இருந்தவன் ஜெய்ஸ் பிப்ஸி என்ற பையன். அவனுக்கு மிகவும் அழகான ஒரு கட்டிடம் கட்டிக் கொடுத்தார்; அதைச் சுற்றி உள்ள தோட்டத்தில் தம் கையாலேயே செடிகளையும் நட்டு வளர்த்து அவனுக்கு வெகுமானமாகக் கொடுத்தார். அவ்வளவு கருணையுள்ளவர் அவர்.

'அவருக்குப் பிறகு நான்'

தஞ்சாவூர் பிரம்மஸ்ரீ கிருஷ்ண பாகவதர் காலக்ஷேபம் செய்வதில் அவதார புருஷராய் விளங்கி வந்தார். திருநெய்த்தானம் நரசிம்ம பாகவதர் அநேகமாய் அவருடைய சம காலத்தவர். மற்றப்படி பண்டித லக்ஷ்மணாசார், சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர், திருப்பயணம் பஞ்சாபகேச சாஸ்திரிகள், மாங்குடி சிதம்பர பாகவதர் ஆகியோர் அடுத்த ஸ்தானத்துக்கு, 'நீ, நான்' என்று போட்டியிட்ட காலம். அநேகமாய் எல்லாப் பாகவதர்களும் சங்கீத வித்துவான்களும், சென்னையில் ஸ்வாமிநாதசாஸ்திரி ஹோட்டலில்தான் தங்குவது வழக்கம். 1903 - ஆம் வருஷத்தில் 'தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர் காலமானார்' என்ற துக்கச் செய்தியை அங்கே கூடியிருந்த எல்லாரும் பத்திரிகைகள் மூலம் அறிந்தவுடன், அவர் மறைவால் சங்கீத உலகத்தில் ஏற்பட்ட ஈடு செய்ய முடியாத நஷ்டத்தைக் குறித்து வருந்தினார்கள். இந்த அமளி கொஞ்சம் அடங்கியதும், சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர், "கிருஷ்ண பாகவதரோ காலமாகிவிட்டார்; அவருக்குப் பிறகு இனி நான்தான்" என்று மார்தட்டி, தாம் முன்னணிக்கு வரப் போகும் நம்பிக்கையைத் தெரிவித்தார். இதைக் கேட்ட நரசிம்ம பாகவதர் சிரித்துக் கொண்டே, "அடே வைத்தி! அப்படிச் சொல்லாதேடா! வயதானவனை நான் ஒருவன் இருக்கையில், நீ ஏண்டா அவசரப்படுகிறாய்? நான் போன பிறகு நீ போகலாம்" என்றார்!

—'நாட்டியம்'

எதையும் சமாளிக்கும் காது

யாராவது ஒருவருடைய அறிவைப் புகழ்வதென்றால், 'கல்வி கேள்விகளில் சிறந்தவர்' என்று வர்ணிப்பது நம் நாட்டு வழக்கம். மனிதனுக்குக் கல்விச் செல்வம் மட்டும் போதாது; கேள்விச் செல்வமும் வேண்டும். இந்தக் கேள்விச் செல்வத்துக்குரிய புலன் காது. அது சில அற்புதமான சக்திகள் வாய்ந்தது.

எந்தச் சத்தத்துக்கும் ஏற்றபடி ஈடு கொடுத்து நம் காது சமாளித்துக் கொள்கிறது. இடியிடித்தால், அது செவிடு படக்கூடும். ஆனால், ஒரே கணத்தில் மறுபடியும் நல்ல நிலையை அடைந்துவிடும்.

நம் காதுக்குக் கேட்கக்கூடிய ஓசையின் அளவைக் கணக்கிட்டு வைத்திருக்கிறார்கள். இந்த அளவுக்கு டெஸிபெல் என்று பெயர். 10 டெஸிபெல் முதல் 120 டெஸிபெல் வரையில் நாம் சகஜமாகக் கேட்கலாம். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், ஒரு குண்டூசியைத் தராசில் போட்டு நிறுக்கிறீர்கள்; அப்புறம் அதே தராசில் ஒரு பெரிய கப்பலையும் நிறுத்துப் பார்க்கமுடிகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். நம் காதும் இந்தமாதிரிதான் ஓசையை அளக்கிறது.

மனிதனின் காது அபூர்வ சக்தி வாய்ந்தது. அதன் சில அம்சங்களை விளக்கும் இந்தக் கட்டுரை 'காரோனெட்', 'ஸைண்டிபிக் என்ஸைக்ளோபீடியா' இரண்டையும் ஆதாரமாகக் கொண்டது.

ஒரு டெஸிபெல் என்றால் என்ன? ஓசையை அளக்க இது விஞ்ஞானிகளாக ஏற்படுத்திக் கொண்ட ஓர் அளவு. பெல் டெலிபோன் முறையை ஏற்படுத்திய பெல் என்பவரின் பெயரை ஒட்டியே இதற்கு இப்படிப் பெயர் சூட்டினார்கள். இந்த 'டெஸிபெல்' அளவைக் கணக்கிடுவது ஒரு வேடிக்கை. இரண்டு டெஸிபெல் என்றால், ஒரு டெஸிபெல் அளவின் இரண்டு மடங்கல்ல; நாலுமடங்கு; மூன்று டெஸிபெல் ஒரு டெஸிபெல்லின் ஒன்பது மடங்கு. இப்படியே வர்க்கமாகப் பெருக்கிக்கொண்டே போகவேண்டும். நம் காது உணர்ந்துவிடக்கூடிய மிகச் சிறு அளவு ஓசை மாறுதல் ஒரு டெஸிபெல். டெஸிபெல் கணக்கைப் பார்க்கும்போது, இந்த விகிதத்தை முக்கியமாக நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

"இதென்ன, மாவுமில் மாதிரி ஒரே இரைச்சல்!" என்று சில

வேளை நம் காதைப் பொத்திக் கொள்கிறோம். அப்போது 100 முதல் 110 டெஸிபெல் அளவுவரை ஓசை கேட்கிறது என்று அர்த்தம். ஜனசந்தடி அதிகமாக இருக்கும் ஒரு தெருவில் போகிறோம்; அந்த ஓசை சுமார் 60 டெஸிபெல் அளவு இருக்கும். நீர்வீழ்ச்சி பலத்த ஓசையுடன் விழுகிறது; அருகிலே நாம் இருக்கிறோம். அப்போது 95 டெசிபெல் அளவு ஓசை கேட்கும். ரேடியோ ஸ்விச்சை நன்ருகத் திருப்பிவிடுங்கள். ஏறக்குறைய அதே ஓசையை - 85 டெஸிபெல் - நம் வீட்டிலேயே கேட்கலாம்.

வயது முப்பதுக்குமேல் ஆகிவிட்டால் மேல்ஸ்தாயியில் எந்த ஓசையாக இருந்தாலும் கேட்பது சிரமந்தான்; ஆனல் கீழ்ஸ்தாயியில் நன்ருகக் கேட்கும். நாம் காதால் கேட்க முடியாத அளவு ஓசைகள் சில உண்டு; அப்போது ஏதோ நெருப்பில் இருப்பதுபோல் வெப்ப உணர்ச்சி உண்டாகும். கேட்கக் கூடிய அளவுக்கு அதிகக் கீழே போனுலும் மனத்தில் ஏதோ ஒரு வேதனை உண்டாகும்.

காது மந்தமாக இருப்பவர்கள் நீச்சல் அடிக்கும்போது சற்று ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். முழுகும்போது காதில் ஜலம் புகுந்துகொண்டுவிடும். அது அசுத்த ஜலமாயிருந்தால் ஏதாவது நோய் தொற்றிக் கொள்ளலாம். அதற்காக முண்டைத் திரித்துக் காதுக்குள் விட்டுத் துடைக்கவேண்டியதில்லை. தலையைச் சற்றுநேரம் அப்படியும் இப்படியும் சாய்த்தால், அந்த ஜலம் தானகவே வழிந்தோடிவிடும்.

நம் காதுக்குள் மெல்லிய திரை போல் ஒரு வஸ்து இருக்கிறது. 'அதன்மேல் ஏதாவது பட்டுவிட்டால் காது ஓட்டையாகிவிடும்; அப்புறம் கேட்காது' என்றுதானே எல்லாருக்கும் எண்ணம்? அதுதான் இல்லை. ஓட்டை விழுந்தால்கூட அது சீக்கிரமாகத் தூர்ந்து ரணம் ஆறிவிடும். சில தொற்று நோய்களுக்கு டாக்டர்களேகூட வேண்டுமென்றே இப்படிக் காதில் ஓட்டை போட்டுவிடுகிருர்கள்; பிறகு காது தானகவே சீக்கிரத்தில் குணமடைந்துவிடும்.

சிலசமயம் காதில் ஏதாவது புகுந்துவிடும். அதை விரலால் எடுக்க முடியவில்லை யென்ருல் அப்படியே விட்டுவிடவேண்டும். கூரான வஸ்துக்களைக் காதில் விட்டுக் குடைந்தெடுக்கக் கூடாது. நேராகடாக்டரிடம் போய்க் காட்ட வேண்டும். நம் காது மிகவும் மென்மையான உறுப்பு. அதை ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்ளவேண்டியது அவசியம்.

பாட்டியை மிஞ்சின பேரன்!

இரவு மணி ஒன்பது அடித்தது. பாட்டியும் நாலு வயதுப் பேரனும் மட்டும் வீட்டில் இருந்தார்கள். மற்றவர்களெல்லாம் எங்கேயோ சினிமா பார்க்கப் போயிருந்தார்கள். பேரனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அதைப் பார்த்த பாட்டி, "ஏண்டா கண்ணு, கதைதானே சொல்லணும்?" என்று கேட்டாள்.

பேரன் தலையை ஆட்டி, 'ஆமாம், பாட்டி; என்ன கதை வேணும்? கேள்; சொல்றேன்" என்ருன்.

—'காரோனெட்'

மகாத்மாவால் பொலிவு பெற்றது வர்தா. அங்கே இன்றும் காணக்கூடிய சில அம்சங்களை விவரிக்கிறார் ஒரு பிரயாணி.

வர்தாவில் கண்டது

கிரிபாலே

அன்புள்ள தங்கச்சி!

உன் கடிதத்தைப் பார்த்து மிகவும் ஆச்சரியம் அடைந்தேன். என்னையே பரிகாசம் செய்து எழுத ஆரம்பித்துவிட்டாயே? இதையெல்லாம் எப்பொழுது கற்றுக்கொண்டாய்? இதனால் எனக்குக் கோபம் இல்லை. எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டியதுதானே? மிகவும் சந்தோஷம்.

எனக்குக் கடிதம் எழுத நேரமில்லை. நானும் உன் அத்திம்பேரும் எப்படியோ ஒரே தீர்மானமாய் ஊருக்குப் போய்ச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தோம். ராஜூவைக்கூட விட்டுவிட்டுப் போனோம் என்றால் அதிசயமாய் இல்லையா உனக்கு? வர்தாவைப் பார்த்துவிட்டு வரவேண்டுமென்று எவ்வளவோ நாளாகச் சொல்லிக்கொண்டிருந்தேனா; எப்படியோ கிளம்பினோம். "பாபூஜீ" இருக்கும்பொழுதே போய்ப் பார்க்க வேண்டுமென்று எவ்வளவு சிரமப்பட்டேன்! அதற்கும் கொடுத்துவைக்க வேண்டாமா? ஏதோ இதுவாவது கிடைத்ததே! பாபூஜீ போய் ஒரு வருஷம் ஆகிறது; எல்லாம் இன்றுதான் நடந்தமாதிரி அல்லவா இருக்கிறது? 'வர்தா வர்தா என்கிறார்களே; எப்படி இருக்குமோ?' என்றுதான் எண்ணினேன். பாபூஜீ இருந்த இடத்தைப்பற்றிச் சொல்லவேண்டுமோ? அங்கே இருப்பவர்கள் எவ்வளவு அன்போடு பழகுகிறார்கள்! அவர்களிடம் டாம்பீகமில்லை; பேராசை இல்லை; கோபதாபம் இல்லை. எப்பொழுதும் அவரவர் வேலையில் கண்ணுங் கருத்துமாய் இருக்கிறார்கள். பாபூஜீயின் ஆசிரமம் மட்டும் அப்படி இருப்பதில் அதிசயமில்லை; அந்த ஊரையே அப்படி ஆக்கிவிட்டாரே! அதுதான் அதிசயம். எல்லாரும் ஒரே மாதிரி இருக்கிறார்கள். முக்கியமாக வர்தாவில் எனக்குப் பிடித்ததை எழுதுகிறேன். பாபூஜீ இருந்த இடத்தையும் அவர் பழக்க வழக்கங்களைப்பற்றியும் கேள்விபட்டிருப்பாயே? அங்கே வீடுகளும் அடுப்புகள் போடும் விதமுந்தான் எனக்கு மிகவும் பிடித்தன. அநேகம்பேர் பழைய கால மண் வீடுகள் கட்ட ஆரம்பித்துவிட்டார்கள். அந்தமாதிரி அடுப்பை நாமும் கட்டிப் பார்க்க வேண்டும். அதைப்பற்றி விசாரித்தபொழுது எனக்குச் சில விவரங்கள் கிடைத்தன. இதைப் படித்தால் தெரியும்; அப்படிச் செய்து பார். அந்தமாதிரி அடுப்புக் கட்டுவதற்கு அதிகச் சாமான்களே வேண்டாம். குறைந்த செலவில் சுலபமாகக் கிடைக்கக் கூடிய சாமான்களைக் கொண்டு கட்டிவிடலாம். இதை அவர்கள் 'மகன் அடுப்பு' என்கிறார்

காப்பிரைட்: கதாவளி (கன்னடம்: ஜனவரி '49), பெங்களூர்.

கள். இதற்கு வேண்டிய சாமான்கள்: (1) கொஞ்சம் களிமண்; இது எப்படி இருக்க வேண்டுமென்று நம்முடைய பாட்டி, அத்தையைக் கேட்டால் போதும். (2) கொஞ்சம் கல்சட்டி. (3) பழைய இரும்பு வளையங்கள். (4) கொஞ்சம் இரும்புக் கம்பிகள்- இவ்வளவுதான்.

"மகன் அடுப்பு என்பது என்ன? நம் கொடி அடுப்புத்தானே?" என்கிறாயோ? கொடி அடுப்புக்கும் இதற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. இந்த அடுப்பை மூட்டுவது மிகவும் சுலபம். கார்ரோட்டம் கொடி அடுப்பைவிட அதிகம். தீ வெளியில் வராமல் உள்ளேயே பாத்திரத்தில் உறைக்கிறது. அடுப்பில் கட்டை போடும் பாகம் நீண்டு குறுகலாய் இருப்பதால் கட்டையை அதிகமாகப் போடவே முடியாது. சமையல்காரன் அதிகம் போட்டு விடுவானே என்ற கவலை இல்லை. ஜ்வாலை வெளியில் வராததால் சமையல் செய்பவருக்குச் சூடு தெரியாது. புகைபோக்கி இருப்பதால் சுவர்களில் கரி ஏறுவதற்கு இடமில்லை. அடுப்பின் வாய் மிகவும் சிறியதாக இருக்கும். அதனால் பாத்திரத்தில் அதிகக் கரி ஏறாது. தீக்கொழுந்து வெளிப்பக்கம் வராததால் எதையும் பயமில்லாமல் அடுப்பின்மேல் வைக்கலாம். எனக்கு என்னவோ இது மிகவும் பிடித்திருக்கிறது. போட்டுப் பார்க்கப் போகிறேன்.

இதற்குமேல் இன்னொரு விஷயம்: பாபூஜியின் சிராத்த தினத்தை எப்படிக் கொண்டாடுவது? ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாகத் திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். என்னவோ? எப்படிக் கொண்டாடினால்தான் அவருக்கு என்ன? அவர் நம்மிடம்



'ஹொர்ள்' அடுப்பு என்ற இதைப் போல் கட்டியதுதான் மகன் அடுப்பு. இதன் பிளான் முதலிய விவரங்களைப் பின்னால் காணலாம்.

கேட்டது ஒன்றே ஒன்றுதான்: உண்மையாய் நடந்துகொண்டு எல்லாரிடமும் அன்பு செலுத்த வேண்டும். இதைவிட நாம் அவருக்குச் செய்யக்கூடியது வேறு என்ன உண்டு? இந்தியாவில் அவர் ஒன்று இரண்டு விஷயங்களுக்காகவா பாடுபட்டார்? தம்முடைய சுக துக்கத்தையெல்லாம் துறந்து கடைசியில் அன்புக்காக உயிரையும் துறந்தார். உயிரை விடுவதற்குள் அவர் செய்துவிட வேண்டுமென்று இருந்த விஷயத்தைப்பற்றித்தான் நீ தெரிந்துகொள்ள வேண்டும்.

குஜராத்தில் நாவிதன் பிழைப்பும் குயவன் பிழைப்பும் மிகவும் மோசமாக இருக்கின்றன. அங்கே ஜாகீர்தாரும், ஜமீன்தாரும், மிராசுதாரும் அதிகம். அவர்களுக்கு உழைப்பதெல்லாம் நாவிதர்களும் குயவர்களுந்தாம். பிராமணர்களைத் தவிர மற்ற எல்லாருக்

கும் அடிமை மாதிரிதான் இவர்கள் உழைக்கிறார்கள். விடியற்காலையில் எழுந்து காபி, டீ தயார் செய்து கொடுக்கிறார்கள். அப்புறம் வீட்டு வேலைகளைக் கவனிக்கிறார்கள். கடையில் எஜமானனுக்குப் படுக்கை போட்டுவிட்டு அவன் கால்களைப் பிடிப்பார்கள். வீட்டுக்குப் போகும் போது நள்ளிரவாகி விடும். இப்படி உழைப்பதற்குச் சம்பளம் என்ன தெரியுமோ? வயிறு நிறையக்கூடச் சாப்பிட முடியாதாம்! அடிமைகளாக்கிக்கொண்ட பிறகு வெளியில் போகக்கூட இவர்களுக்கு வழி இராது. இது பொறுக்கமாட்டாமல் இவர்கள் முறையிடுகிறார்களாம். இந்த அடிமை முறையை ஒழிக்க வேண்டுமென்று பாபூஜீ வற்புறுத்திக் கொண்டிருந்தார். இதை நம் சர்க்கார் கவனிக்க வேண்டும். அப்போதுதான் பாபூஜீயின் மனத்துக்குத் திருப்தி ஏற்படும் என்று எனக்குத் தோன்றுகிறது. உன் அபிப்பிராயம் என்ன? எழுது. அநேகமாய் ஜனவரி 30-ஆம் தேதி அவர் திதியைக் கொண்டாடுவார்கள். நீ என்ன செய்யப்போகிறாய்? நான் சேரிக் குழந்தைகளுக்குத் துணி வாங்கிக் கொடுக்கலாம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறேன். உன் அத்திம்பேர் வேறு ஏதாவது சொல்லுவாரோ என்னவோ? ராஜு சௌக்கியம். பதில் எழுது.

புகையாத அடுப்பு

புகையாத அடுப்பின் கீழ்க்கண்ட படங்களும் விவரங்களும் 'பீப்பிள்ஸ் ஹெல்த்' (சென்னை) பிப்ரவரி '48 இதழில் ஒரு கட்டுரையில் காணப்படுகின்றன. கட்டுரையை எழுதியவர், ஹைதராபாத் 'டைரக்டர் அவ் எஞ்சினீரிங் ரிஸர்ச்' என்ற அதிகாரியான டாக்டர் எஸ். பி. ராஜு. நம் வீட்டுப் பெண்கள் சமைக்கும் கொடி அடுப்பு ஏழாயிர வருஷம் பழமையானது. அது சுகத்துக்கும் கேடு; விறகும் அதிகமாகிறது. இந்தப் புதிய அடுப்பு ஹைதராபாத் சம்ஸ்தானத்தில் 'ஹைதராபாத் எஞ்சினீரிங் ரிஸர்ச் லெபோரடரி'யில் முதல் முதலில் தயாராயிற்று. அதனால்தான் இதற்கு 'ஹெர்ள் ஸ்டவ்' என்று பெயர் வந்தது.

இந்த அடுப்பினால் (1) புகை சூழாது, கரி ஏறாது; (2) சூடு பரவி வீணாகாது; (3) ஊதி ஊதிக் கண் அவிய வேண்டியதில்லை; (4) ஒரே சமயத்தில் பல பாத்திரங்களை ஏற்றிச் சமையல் செய்ய முடியும்.



படம் 1

படம் 1: இது அடுப்பின் ப்ளான். தீ வாய் இருக்கும் பகுதி கொஞ்சம் முன்புறம் நீண்டிருப்பதைக் கவனியுங்கள். நடுவில் வட்டங்களை இணைக்கும் இரண்டு புள்ளிக்



படம் 2

கோடுகள், உள்ளே செல்லும் துவாரத்தைக் காட்டுகின்றன. வட்டங்கள் பாத்திரங்களை வைக்கும் மேல் வாய்கள். அவற்றின் குறுக்களவு, பாத்திரங்களின் குறுக்களவை விட ஓர் அங்குலம் குறைவாக இருக்கவேண்டும். பாத்திரங்களை வைத்தால், இடுக்கு இல்லாமல் அடுப்பின் மேல்வாய்கள் மூடியிருக்க வேண்டும். தீக் கொழுந்து வெளியே வரவே கூடாது. அடுப்பின் ஏ-பி நீளம் சுமார் 4 அடி 2 அங்குலம். ஸி-டி நீளம் சுமார் 2 அடி 2 அங்குலம்.

படம் 2: படம் 1-இல் உள்ள ஏ-பி பகுதி; தீ வாய் உள்ள பக்கத்தில் இருந்து பார்க்கும்போது தோன்றுவது. கறுப்பான பகுதிக்கு நடுவே உள்ள வெண்மையான பகுதிதான் தீ செல்லும் துவாரம். அது திறந்திருப்பது போல் இங்கே காட்டியிருக்கிறது. ஆனால் உண்மையில் வெளியே தெரியாது.



படம் 3

படம் 3: படம் 1-இல் உள்ள ஸி-டி பகுதி; அதாவது புகை போக்கிக்கு எதிர் முனையிலிருந்து பார்க்கும்போது தோன்றுவது. புகை போக்கிக் குழாயை முழுவதும் காட்டவில்லை. அது வீட்டுக் கூரைக்கு மேலே இரண்டடி நீண்டிருக்க வேண்டும்.

படம் 4: தீ வாய், அடுப்பு இருக்கவேண்டிய உயரம் முதலியவற்றைக் காட்டுவது. விறகு, வறட்டி, காகிதம், உமி, கடலைத் தோலி, உரி மட்டை முதலிய எதையும் போட்டு எரிக்கலாம். முன் பாத்திரங்களில் உறைத்தது போக மிஞ்சிய சூடு சிறிதும் வீணாகாமல் வெந்நீர்ப் பானை வாங்கிக்கொள்கிறது.



படம் 4

[நிஜ அடுப்பின் அளவில் பன்னிரண்டில் ஒன்றாக (1=12), படங்கள் குறுக்கப்பட்டிருக்கின்றன.]

க்விஸ் விடை

[9-ஆம் பக்கத்தில் உள்ள கேள்விகளுக்கு விடை]

தலைநகர்:

1. லாகூர்.

2. ஷாஜஹானால் அமைக்கப் பட்டது; ஷாஜஹானாபாத்.

3. காட்மண்டு.

சங்கீதம்:

1. (அ) பூப், (ஆ) ஸாரங், (இ) மால்கோஷ்.

2. (அ) காபிநாராயணி, (ஆ) சாருகேசி, (இ) தர்பார், (ஈ) ஆபேரி.

3. ஸாரங்கி.

விளைபொருள்:

1. சணல்.

2. மாம்பழம்.

3. இலுப்பை இனம்.

பிராணிகள்:

1. யானைத் துதிக்கையில் எலும்பே கிடையாது.

2. மற்றப் பிராணிகளின் வாய் போல் கீழ்த்தாடை திறவாமல் மேல் தாடை திறக்கும்.

3. திமிங்கிலம் குட்டி போட்டுப் பால்கொடுக்கும்; முட்டை இடாது.

அரசியல்:

1. மூவர்: ஸ்ரீமதி அம்மு ஸ்வாமிநாதன், ஸ்ரீமதி தாக்ஷாயணி வேலாயுதன், ஸ்ரீமதி ஜி. துர்க்காபாய்.

2. இருவர்: ஸ்ரீமதி ஸரோஜினி நாயுடு; அன்னி பெஸண்ட் அம்மையார்.

2. ஐவர்: பி. ஆனந்தாசார்லு, ஸர் சங்கரன் நாயர், வி. விஜயராகவாசாரியார், எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்கார், டாக்டர் பட்டாபி சீதாராமையா.

விளையாட்டு:

1. எம். ஜே. கோபாலன்; கிரிக்கெட், ஹாக்கி.

2. இந்தியாவில் 1876 - இல் புனாவில் அமலிலிருந்த விதிகளின் அடிப்படையில்தான் இப்போது இந்த ஆட்டத்தின் விதிகள் உருவாகியிருக்கின்றன.

3. இங்கிலாந்தில் முதல் முதல் இதைப் பாட்மிண்டன் என்ற இடத்தில் விளையாடினார்கள். அது போபர்ட் பிரபுவின் இருப்பிடம்.

3. படகு விளையாட்டு.

பொது:

1. 1876-ஆம் வருஷம் எச். ஜே. லாஸன் என்பவர் இதைக் கண்டுபிடித்தார். 1885 - ஆம் வருஷம் ரோவர் கம்பெனி வியாபார முறையில் தயாரித்தபின் பழக்கத்துக்கு வந்தது.

2. வாடர்மன்.

3. மின்சாரத்தால் தீவிபத்து நேர்ந்தால் தண்ணீர் அதை மிகுதியாக்கிவிடும். மணல் மின்சாரம் பாயாத பொருளாதலால் தீப் பற்றிய இடத்தில் மணலைக் கொட்டி அணைத்துவிட முடியும்.

யுக்தி:

கீழ்க்கண்டவாறு அமைக்கவேண்டும். (இரண்டு குறுக்கு வரிசைகளையும் கணக்கில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.)—



பல வாத்தியார்களுக்கு இந்த அநுபவம் இருக்கும். ஆனால், இவர் மாதிரி புரொபஸர் ஆனபிறகல்லவா அவர்கள் அதை எழுத முடியும்!

வாத்தியார் அவதி

ரா. தோ. கர்வே

டிரெயினிங் காலேஜிலிருந்து வெளிவந்ததும், நான் எல்பின்ஸ்டன் மிடில் ஸ்கூலில் உபாத்தியாயரானேன். இப்போது அந்தப் பள்ளிக்கூடம் இல்லை. அந்தக் காலத்தில் அதில் மூன்றாம் பாரம் வரைக்கும் இருந்தது. ஒரு பார்சிக் கிழவர் அப்போது தலைமை உபாத்தியாயர். மனுஷர் நல்லவர்; ஆனால் பழங்காலத்தவர். நான் எடுத்துக்கொண்ட வகுப்பில் முன்பெல்லாம் பையன்களை அடிப்பது வழக்கம். அந்த வழக்கம் கெடுதல் என்பது என் அபிப்பிராயம். நான் எவ்வளவோ சாந்தமாக முயன்றும் பையன்களின் உபத்திரவம் தாங்கவில்லை. தலைமை உபாத்தியாயர் என்னைக் கூப்பிட்டு, "பையன்களுக்குப் பிரம்படி வாங்கிப் பழக்கம். நீங்கள் பிரம்பு வாங்கி வாருங்கள். இல்லாவிட்டால் பள்ளிக்கூடத்தில் ஒழுங்கு கெட்டுப் போகும்" என்று சொன்னார். "சரி, ரைடரிடம் சொல்லி வாங்கி வரச் செய்கிறேன்" என்றேன். "கூடாது. பியூனை வேண்டுமானால் அனுப்பி வாங்கிவரச் சொல்லுங்கள். பிரம்பு உங்கள் செலவில் வாங்க வேண்டும்; பள்ளிக்கூடத்துச் செலவில் எழுதக்கூடாது" என்று அவர் சொன்னார். சட்டப்படி பையன்களை அடிக்கக்கூடாது என்றும், இன்ஸ்பெக்டர் வரும்போது பிரம்பை மறைத்து வைக்க வேண்டும் என்றும் பின்னால் எனக்குத் தெரியவந்தது.

இந்தத் தலைமை உபாத்தியாயர் ரிடையரானதும் ஒரு மகாராஷ்டிரர் அந்தப் பதவிக்கு வந்தார். அவரை நான் அதற்கு முன்னால் எங்கும் பார்த்ததில்லை; ஆனால் அவர் ஓர் உபாத்தியாயரிடம், "கர்வேயின் தகப்பனாரை இருபத்தைந்து வருஷங்களாக எனக்குத் தெரியும். அப்படியிருந்தும் கர்வே என்னைப் பார்க்க வரவேயில்லையே?" என்று சொன்னாராம். அவரை எனக்குத் தெரிந்திருந்தாலும் நான் பார்க்கப் போயிருக்க மாட்டேன். ஆனால் அவர் இப்படிச் சொன்னதும் ஒரு தடவை அந்த உபாத்தியாயரோடு அவர் வீட்டுக்குப் போனேன். பிறகு அந்தப் பக்கம் போகவேயில்லை.

ஒரு தடவை பள்ளிக்கூடத்தில் அவர் என்னைக் கூப்பிட்டு, "டாக்டர் என்னைக் கம்பளிச் சட்டை போட்டுக்கொள்ளச் சொல்லியிருக்கிறார். எனக்கு ஒரே புழுக்கமாக இருக்கிறது. இஸ்திரி போட்ட தனியான ஷர்ட்டு 'கப்' கிடைக்கிறதாமே. அது எனக்கு வாங்கித் தாருங்கள். நீங்கள் ஸூட்டு போடுகிறவராதலால் உங்களுக்கு

காப்பிரைட்: மனோஹர் (மராட்டி: ஜனவரி '49), கிர்லோஸ்கர்வாடி, ஸாதாரா ஜில்லா.

அது தெரிந்திருக்கும்'' என்றார். "எனக்கு அது தெரியாது. இருந்தாலும் விசாரித்து வாங்கி வருகிறேன்'' என்று பதில் சொன்னேன். பதினொரு மணிக்கு இந்தச் சம்பாஷணை நடந்தது; அவர் பிற்பகலில் மறுபடி என்னைக் கூப்பிட்டு, "என்ன ஐயா, 'கப்' வாங்கி வந்தீர்களா?'' என்று கேட்டார். "நான் அந்தப் பக்கம் போகவில்லை. போகும்போது வாங்கிவருகிறேன்'' என்று சொன்னேன். "இதுகூட உங்கள் கையால் ஆகவில்லையா?'' என்று அவர் எரிச்சலோடு சொல்லிவிட்டு, அன்று முதலே என்னைத் தொந்தரவு படுத்துவதென்று தீர்மானித்துவிட்டார்.

என் வேலையை நான் நன்றாகத்தான் செய்துவந்தேன்; ஆனால் என் கையெழுத்து எப்போதுமே நன்றாயிராது. பார்க்க அழகாக இல்லாவிட்டாலும் அதைத் தெளிவாகப் படிக்க முடியும். ஒவ்வோர் உபாத்தியாயரும் தமது வகுப்பில் நடந்த பாட விவரங்களை மாதந்தோறும் எழுதிக் கொடுக்கவேண்டும். நான் அந்த மாதிரி ஒரு தரம் கொடுத்தனுப்பியபோது அவர் என்னைக் கூப்பிட்டு, "உங்கள் கையெழுத்து நன்றாயில்லையே!'' என்றார். வாஸ்தவம் என்று ஒப்புக்கொண்டேன். "அப்படியானால் வேறு யாரையாவது கொண்டு எழுதிக் கொடுப்பதற்கென்ன?'' என்று கேட்டார். "என் கையெழுத்து நன்றாக இல்லாவிட்டாலும் சுலபமாகப் படிக்க முடியும். நான் ஏன் பிறர் உதவியை நாடவேண்டும்?'' என்று பதில் சொன்னேன். அவருக்கு என்மேல் துவேஷம் அதிகமாயிற்று.

என் நண்பன் ஒருவன் ஒரு நாள் பம்பாய்க்கு வருவதாக இருந்தான். அவனுக்கு ஊர் புதிதாகையால் நான் விக்டோரியா டர்மினஸுக்குப் போகவேண்டியிருந்தது. அவரிடம் போய் அரை நாள் லீவு கேட்டேன். "நான் எப்போதாவது லீவு வாங்குகிறேனா? என் வீட்டில் மட்டும் விருந்தினர்கள் வருவதில்லையா? அதெல்லாம் முடியாது'' என்று சொல்லிவிட்டார். "சரிதான், பார்க்கலாம்!'' என்று சொல்லிவிட்டுக் கோபத்தோடு வீட்டுக்கு வந்தேன். ஒரு நாள் பதினொரு மணிக்கு, "எனக்குத் தலைவலி; இன்று பள்ளிக்கூடம் வர முடியாது'' என்று ஒரு கார்டு எழுதித் தபாலில் போட்டேன். அது சாயந்

இன்ஸ்பெக்டர் வந்ததும் பிரம்பு மறைகிறது!

தரந்தான் போய்ச் சேர்ந்தது. "நீங்கள் ஏன் எனக்கு முன்னதாகத் தெரிவிக்கவில்லை?'' என்று அவர் மறுநாள் என்னைக் கேட்டார். "தலைவலிக்குமென்று முன்னதாகவே எனக்கு எப்படித் தெரியும்? பதினொரு மணிக்கு வலித்தது; உடனே எழுதினேன்'' என்றேன். "வேறு உபாத்தியாயரிடமோ பையனிடமோ கடிதம் அனுப்புவதற்கென்ன? உங்கள் வீட்டுப் பக்கத்தில் எத்தனையோ பேர் இருக்கிறார்களே?'' என்று அவர் கேட்டார்.

"எனக்கு இருந்த தலைவலியில், அவர்களைத் தேடிக்கொண்டு நான் எங்கே போவது?" என்று ஆத்திரத்தோடு சொல்லிவிட்டேன்.

எனக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கத் தெரியாது என்று நிரூபிக்கும் அளவுக்கு அவர் கடைசியில் வந்துவிட்டார். "இப்போது 'டைரெக்ட் மெதட்' என்று ஒரு முறை வந்திருக்கிறது; அதை நீங்கள் கற்றுக்கொள்ளுங்கள்" என்று ஒரு நாள் சொன்னார். "ட்ரெயினிங் காலேஜில் அதைத்தான் நான் கற்றுக்கொண்டு வந்திருக்கிறேன்; அந்த முறையில்தான் பையன்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறேன்" என்றேன். ஒரு நாள் என் வகுப்புக்கு வந்து பையன்களைச் சில கேள்விகள் கேட்டார். இரண்டொன்றில் அவர்கள் பிசகினார்கள். "இவர்களின் நோட்ஸ் எங்கே?" என்று கேட்டார். "டைரெக்ட் மெதட்டில் நோட்ஸ் கொடுக்கும் வழக்கம் கிடையாது" என்று நான் சொன்னேன். "அப்படியானால் அந்த முறை வேண்டாம். இனி மேல் நோட்ஸ் கொடுங்கள்" என்று சொல்லிவிட்டுப் போனார்.

ஒரு தடவை அவர் என் இலக்கண வகுப்புக்கு வந்து, பையன்களைக் கேள்வி கேட்டார். "ஆறாவது பாரம் கேள்வியை மூன்றாவது பாரத்தில் கேட்கிறீர்களே?" என்று நான் எதிர்த்தேன். "என், மூன்றாவது பாரத்திலேயே ஆறும் பார அறிவு பையன்களுக்கு வந்துவிட்டால் கெடுதலா?" என்றார். பிறகு அவரே உட்கார்ந்து பையன்களுக்கு இலக்கணம் கற்றுக் கொடுத்தார். "எந்தச் சொல்லில் ஏதாவது ஒன்றைச் செய்யும் எண்ணம் இருக்கிறதோ அதுதான் வினைச்சொல்" என்று சொல்லிக் கொடுத்தார். "படிப்பு என்பது என்ன சொல்?" என்று ஒரு பையனைக் கேட்டார். "அது வினைச்சொல், ஸார்!" என்றான் பையன். "அது எப்படிடா, கழுதை!" என்று அதட்டினார். "அதில் படிக்கும் எண்ணம் இருக்கிறது, ஸார்; ஆகையால் அது வினைச்சொல்" என்றான் பையன். எனக்குச் சிரிப்பாக வந்தது. அவர் வகுப்பிலிருந்து கோபத்தோடு போய்விட்டார்.

"'படிப்பு' என்றால் என்ன, சொல், பையா?"

இந்த மாதிரியான சங்கடங்கள் பொறுக்காமல் நான் ஸோலாபூருக்கு வேலையை மாற்றிக்கொண்டேன். அந்தப் பள்ளிக்கூடத்துத் தலைமை உபாத்தியாயர் நல்லவர். அவர் எந்தக் காலத்திலோ யூக்ளிட் படித்து மறந்துபோய்விட்டார். நான் புது முறையில் ஜியாமெட்ரி வகுப்பை நடத்தியதனால் என்மேல் அவருக்கு மிகுந்த அன்பு. நான் காலேஜில் மனுப் போட்டபோது அவர் எனக்கு நல்ல சிபாரிசு செய்தார். எல்பின்ஸ்டன் காலேஜில் எனக்கு வேலை கிடைத்து, பிறகு நான் புரொபஸரானேன்.

கல்லும் சுண்ணும்பும் இல்லேயே என்று கவலேப்படவேண்டியதில்லே. மைசூர்க்காரர்கள் மண்ணே ஆராய்ந்து பலன் கண்டிருக்கிருர்கள்.

மண் வீடு

எம். பி. மோகன்

முன் காலத்திலே வீடுகள் முதல் கோட்டைகள் வரையில் சகல கட்டிடங்களேயும் மண்ணுலேயே கட்டிவந்தார்கள். ரோம் நகரம் இதற்குப் பெயர் போனது. பிளீனியர் என்ற ரோமர் இதைப்பற்றிப் பெரிய புத்தகமே எழுதியிருக்கிருர். காலர் என்பவர் இன்னும் புதிய புதிய முறைகளேக் கண்டுபிடித்து அற்புதமான கோட்டைகளேக் கட்டியிருக்கிருர். துவைத்த மண்ணுடன் செங்கல் பொடி கலப்பது நம் முறை. சிலர் நல்ல உறுதியான சரளேயைச் சேர்ப்பார்கள்.

எரிமலேயிலிருந்து உருகிவந்த 'லாவா'க்கல்லேப் பொடி செய்து அதை மண்ணுடன் கலக்க வேண்டும் என்று காலர் சொல்கிருர். இதைத் தவிர ஒரு விதச் சிமிட்டியும் தயார் செய்து உறுதியான கோட்டைகளே அவர் கட்டினுர். அவைகளே இன்றும் ரோமில் பார்க்கலாம். இதைப் பார்த்து ஹானிபல் என்பவர் ஸ்பெயினில் சில கட்டிடங்கள் கட்டினுர். சீனுவிலும் இப்படி எவ்வளவோ கட்டிடங்கள் உண்டு.

இந்தியாவில் பில்லர் என்ற ஜாதியார் தங்கள் வீடுகளே இன்றும் இதே போலத்தான் கட்டுகிருர்கள். பரத்புரில் ஒரு பெரிய மண் கோட்டை இருக்கிறது; பீரங்கிக்குக் கூட இது அசைந்து கொடுக்கவில்லே.

ரோம் நகரச் சிற்பிகள் இப்படிக் கட்டுவதற்குமுன் ஒன்று செய்வார்கள். அஸ்திவாரக்கல் போடுவது போல் சுவரின் கனம் எவ்வளவு இருக்கவேண்டுமோ அவ்வளவு இடைவெளி விடுவார்கள்; இரண்டு பக்கங்களிலும் உறுதியான கம்புகளே நடுவார்கள். அதற்குள் மண் மொத்தைகளேத் திணித்து உயர்த்துவார்கள். நடுவில் துளியும் சந்துபொந்து இல்லாமல் கம்புகளின் உயரத்துக்குத் திணித்த பிறகு கம்புகளேப் பிடுங்கி எடுத்துவிடுவார்கள். சுவர் துளியும் சரியாது. பில்லர்கள் செய்வது இதைவிட அதிக உறுதியாக இருக்கும். நட்ட கம்புகளுக்கு இடையே இவர்கள் கயிற்ருல் பின்னிவிடுவார்கள். மேலே மேலே சுவரை எழுப்பி அதன்மேல் புல், பூண்டு, வைக்கோல் முதலிய பொருள்களே அப்புவார்கள். அப்புறம் சேற்றைக் குழைத்து மணியாசி செய்வார்கள். அப்போது வீடு வழுவழுப்பாகவும் அழகாகவும் இருக்கும்.

இந்த நாளில்தான் வீடுகளேப்பற்றிக் கேட்க வேண்டியதில்லேயே; கட்ட இடம் கிடைத்தாலும் சாமான் ஒன்றுகூடப் பதது வில்லே. இந்தப் பழைய முறையைப் பின்பற்றிஞல்

காப்பிரைட்: கர்மவீர் (கன்னடம்: நவம்பர் '48), ஹுப்ளி.

நமக்குக் கொஞ்சம் சௌகரியம் உண்டு.

மைசூர் ஸம்ஸ்தானத்துக் கிராம அபிவிருத்தி இலாகாவில் இருப்பவர்களே இதைப்பற்றிய ஆராய்ச்சியை முதலில் ஆரம்பித்தார்கள். அவர்கள் விடுத்த அறிக்கையில்,"வேலைக்காரர்களும் மேஸ்திரிகளும் மனம் வைத்தால் மண்ணைக் கொண்டு என்ன வேண்டுமானலும் செய்யலாம். பச்சை மண், சுட்ட மண் இந்த இரண்டிலும் வேண்டிய ஆராய்ச்சிகள் செய்து பார்த்திருக்கிறோம்" என்று சொல்லுகிறார்கள்.

வேலைக்கு எந்த மண்ணும் உதவும். ஆனல் அதில் கொஞ்சம் களிப்பு வேண்டும்; அது மட்டும் போதாது. அதற்குப் பிசுக்கு உண்டே தவிர உறுதி இல்லை. மண்ணோடு கலப்பதற்கு நல்ல சரளையும் மணலும் வேண்டும். இல்லாவிட்டால் சுவர் விரிந்துவிடும். அவை நிதானமாக இருக்க வேண்டும்; அதிகமானல் கட்டிடத்துக்குப் பலக் குறைவு. மேல் மண்ணில் புழுக்கை முதலியவை இருக்கும். அது பிரயோஜனமில்லை.

நமக்கு வேண்டிய விஸ்தீர்ணத்தில் சுமார் 6 அங்குல ஆழம் வெட்ட வேண்டும். அதன் கீழுள்ள மண்ணை எடுத்துப் பரீட்சை செய்ய வேண்டும். முதலில் ஒரு கூடை மண் எடுத்து வரலாம். அதை ஓர் அங்குல அளவு ஓட்டையுள்ள ஒரு பாத்திரத்திலோ சல்லடையிலோ போட்டுச் சலிக்கவேண்டும். பிறகு பத்து டப்பி மண்ணை அளந்து ஒரு பாத்திரத்தில் போட்டு நிறையத் தண்ணீர் ஊற்ற வேண்டும். அதைக் கலக்கிக் கலக்கித் தண்ணீரைக் கீழே ஊற்றிக்கொண்டே வரவேண்டும். அடியில் தங்கின மண்ணை வெயிலிலோ அடுப்பின் மேலோ வைத்து உலர்த்தலாம். பிறகு அதை மறுபடியும் அதே டப்பியால் அளக்கவேண்டும். முதலில் பத்து டப்பி இருந்த மண் இப்போது ஆறு டப்பி இருக்கும். ஏழிலிருந்து ஏழரை டப்பி வரையில் இருந்தால் உயர்ந்த மண் என்று அர்த்தம். இந்த மண்ணை மறுபடியும் கால் அங்குலக் கண் சல்லடையால் சலிக்கவேண்டும். மணல் கீழே இறங்கிவிடும். சல்லடையில் கல் சரளை நிற்கும். இந்தக் கல்சரளையையும் நாம் உபயோகித்துக் கொள்ளலாம். அச்சுகள் செய்ய இந்த மண் நன்றாக வரும். அச்சுகளுக்குச் சரளை மிகவும் அவசியம். அச்சின் மேல் கனம் அழுத்தும்போது மண் அரைந்து போகாமல் சரளை தடுக்கிறது; உறுதி தருகிறது; நடு நடுவில் தங்கிக் காற்றோட்டம் உண்டாக்கித் தண்ணீரை உறிஞ்சும் சக்தியை அதிகப் படுத்துகிறது. இந்த அச்சுக்களைக் கொண்டு சுவரைக் கட்டினல், மழை, வெயில், இடி எதையும் தாங்கும்.

சுமாராக ஒன்றுக்கு மூன்று பங்கு மணலும் சரளையும் இருக்க வேண்டும். ஆராய்ச்சி செய்தவர்கள் கொடுத்திருக்கும் திட்டம் இது. இதோடு அநுபவத்தாலும் கொஞ்சம் தெரிந்துகொள்ளலாம். மண்ணையும் சரியானபடி சேர்த்து அச்சுக்களும் நல்ல பதமாய் இருந்தால் கட்டிடத்துக்கு அழிவே இல்லை.

பெரிய கட்டிடங்கள் கட்ட வேண்டுமானல் முதலில் ஓர் அச்சுக்கு வேண்டிய மண்ணை எடுத்து 6×6×6 அங்குல அளவுள்ள கனமான டப்பிகளில் போட்டு நன்றாக அழுத்திப் பார்க்க வேண்டும். முன்னால் புழுதி மண்ணை ஒற்றி அளக்கவேண்டும். பிறகு அது அச்சில் வரும்போது

அளவைப் பார்க்கவேண்டும். முதலில் இருந்த அளவைவிடப் பேர் பாதி குறைந்தால்தான் நல்லதமான அச்சு என்று தைரியமாக வேலையைத் தொடங்கலாம். இப்படி வார்த்த அச்சுத் துண்டின் ஒரு சதுர அங்குலப் பரப்பு 600 பவுண்டு பாரத்தைத் தாங்கும். ஓர் அச்சுத் துண்டு சுமார் 120 பவுண்டு நிறை இருக்கும். இந்தத் துண்டுகளைக் கொண்டு எவ்வளவு உயரம் வேண்டுமானாலும் அபாயமில்லாமல் சுவர் எழுப்பலாம்.

களிமண் அச்சு வார்ப்பதுடன் சேற்றைக் குழைத்து மணியாசி செய்வதும் ஒரு வேலை. கரணையால் எடுத்துப் பூசும்படி குழைத்து மணியாசி செய்தால் மிகவும் உறுதி. இதற்குச் சேற்றைக் கொஞ்சம் கெட்டியாகக் கலந்துகொள்ள வேண்டும். அதிகமாகத் நுவைத்துக் குழைக்கக் கூடாது. தண்ணீர் பட்டதும் படாததுமாகவும், தொட்டால் சிலுசிலுப்பாகவும் இருக்கவேண்டும். விரலால் குத்தினால் ஒட்டக்கூடாது. மூன்று நான்கு அடி உயரத்திலிருந்து ஓர் உருண்டையை எறிந்தால் அது தனித்தனியாகத் தெறித்துப் போகவேண்டும்.

சுமாராக அநுபவம் இருந்தால், நிலத்தைப் பார்த்தவுடன் இது நல்ல மண் என்று சொல்லி விடலாம். நல்ல மழை அடித்து நிலம் சற்று உலரும்போது, களிப்பு உள்ள இடங்களில் வெடிப்புக் கொடுக்கும். வெடிப்புச் செங்குத்தாக இருந்தால், அது நல்ல களி என்று அர்த்தம். வெடிப்புச் சாய்வாக இருந்தால் சுமாரான களி.

களி அதிகத் தண்ணீர் இழுக்காது; அதிகக் கனமும் இருக்கும். சில இடங்களில் புழுதி மண் கூட மிகவும் கனமாக இருக்கும். அப்படி இருக்கும் மண்ணை 100க்கு 15 பங்கு வீதம் தண்ணீர் ஊற்றிக் கலந்தால், மணியாசி வேலைக்கு நன்றாக வரும். நல்ல பிசுக்கு மண் 100க்கு 10 பங்கு தண்ணீர் கூட வாங்காது. தண்ணீர் அதிகப் பட்டால் வேலை சுலபம். ஆனால் சுவர் உறுதியாக இருக்காது. வெயில் காலத்தில் வேலை செய்யும்போது அதிக மண்ணை ஒரே தடவையில் துவைத்துப் போட்டுக்கொள்ளக் கூடாது. கொஞ்சம் கொஞ்சமாகக் கலந்துகொண்டே விரலால் தொட்டுப் பார்த்து வரவேண்டும். வெயில் காலத்தில்தான் மண்வீடு கட்டவேண்டும்.

ஒரே மண்ணில் வார்த்த அச்சுக்களால் கட்டுவதுதான் நல்லது. வேண்டிய மண்ணை வீடு கட்டும் இடத்திலேயே எடுக்கலாமா என்று பார்க்க வேண்டும். எடுக்கலாமென்றால், வீட்டு அஸ்திவாரச் சதுர அளவை விட்டுவிட்டுச் சுற்றிலும் உள்ள மண்ணை வெட்டி எடுத்தால் வீட்டின் மட்டம் உயர்ந்துவிடும். அப்போது வீட்டுக்குப் பக்கத்தில் தண்ணீர் தங்குவதற்கு இடம் இராது. இது வீட்டுக்கும் பலம்; மண்ணுக்காக நாம் அலைய வேண்டியதும் இல்லை.

கொத்துவேலைக்காரர் மிதமான கூலிக்கு ஒப்புக்கொண்டால், இப்படிக் கட்டுவது நல்ல லாபந்தான். மண்வீட்டில் வசிப்பது மிகவும் ஆரோக்கியம். அதைக் கட்டத் தேவைப்படும் உபகரணங்கள் மிகவும் குறைவு. அவற்றைச் சுலபமாக எந்தக் கிராமத்திலும் செய்துகொள்ளலாம். மண்வீடு கட்ட முக்கியமாக வேண்டியது கனமான இரும்பு அச்சு ஒன்று. மண்ணை வார்க்கும்

அச்சும், சல்லடையும் எங்கும் கிடைக்கும். மண்ணினால் வார்த்த அச்சை அழுத்த ஒரு மணை உண்டு. இது சாதாரணமாக V வடிவாக இருக்கும். அச்சின் ஓரங்களை இந்த மணை ஒற்றி அமிழ்த்துவதால், சீக்கிரத்தில் அச்சு இறுகிவிடுகிறது என்று சொல்வார்கள். ஆனால் இப்போது இந்த மணைக்குப் பதிலாகச் சமமான கனம் உபயோகித்தால் நல்லது என்று தெரிகிறது. இந்தக் கனம் ஓர் அங்குல அளவு இடத்தில் குறைந்தது இரண்டு பவுண்டாவது விழும்படி இருக்க வேண்டும். 3 × 3 × 3 அங்குல வடிவமுள்ள இரும்புச் சதுரத் துண்டுகளை 6 அடி நீளமும் 1 அடி அகலமும் உள்ள சட்டங்களின் நுனியில் சேர்த்து ஒட்டிய இடிச்சட்டம், கனமாக ஒற்றுவதற்கு உதவும். எல்லாம் சேர்ந்து அது 15 பவுண்டு இருக்கும். அவ்வளவு இரும்பு கிடைக்காவிட்டால் ஒன்று செய்யலாம். 3 × 3 அங்குல அளவில் கனமான மரச் சட்டம் செய்து அதைச் சுற்றிலும் இரும்புச் சட்டம் போட்டுவைத்துக் கொண்டால் போதும். 15 பவுண்டு கனமுள்ள அந்த இடிச்சட்டத்தை முழங்கால் உயரம் தூக்கி நாலு பக்கமும் சரியாக விழும்படி ஓங்கி அச்சின்மேல் அறைய வேண்டும். இல்லாவிட்டால் இடுக்கு விட்டுக் கொள்ளும். பொறுமையுடன் இந்த வேலையைச் செய்தால்தான் லாபம்.

பிரயாணிகளே! கவனியுங்கள்

ஒரு பிரயாணி வெளிநாடுகளில் சுற்றி அநுபவப் பட்டவர். ''நீங்கள் எங்கெல்லாமோ போய்வந்திருக்கிறீர்கள்; முன்பின் தெரியாத ஊர்களில்கூட வண்டிக்காரனுக்குக் கணக்காகச் சத்தம் கொடுக்கிறீர்களாமே; அது எப்படி?'' என்று அவரை ஒரு நண்பர் கேட்டார்.

''அதுவா? - கை நிறையச் சில்லறை எடுத்துக் கொள்வேன். வண்டிக்காரனின் முகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டே அவன் கையில் ஒவ்வொரு காசாகப் போடுவேன். அவன் கொஞ்சம் சிரிக்கிறான் என்று தெரிந்ததோ இல்லையோ, உடனே நிறுத்திவிடுவேன்.''

''விஷயம் இவ்வளவுதானா?''

''அல்ல; இதோடு சும்மா இருந்துவிட மாட்டேன். கொடுத்த சில்லறையில் ஒன்றை எடுத்து டபக்கென்று ஜேபியில் திரும்பப் போட்டுக்கொண்டு விடுவேன். அவன் எதற்காகச் சிரிக்கப் போகிறான்? அதிகமாகக் கொடுத்துவிட்டேன் என்றுதானே?''

—ஆண்ட்ரு மெரிடித்

முட்டாள்தனத்திலெல்லாம் பெரிய முட்டாள்தனம் எது தெரியுமா? பணக்காரனாய்ச் சாவதற்காக ஏழையாய் வாழ்வது தான்.

—இன் டிக்ஸீ



குழந்தைகள் குறும்பு

என் தம்பி பாலுவுக்குச் சுமார் ஆறு வயது இருக்கும். ஒரு நாள் அவன் என் அம்மாவிடம் ஓடி வந்து, "அம்மா, அம்மா! இந்த அக்கா என்னைச் சும்மா அடிக்கிறாள்" என்று சொல்லி அழுதான். உடனே அம்மா, "அழாதேடா, பாலு! முதல்லே அவளுக்குக் கல்யாணத்தைப் பண்ணிப் புருஷன் வீட்டுக்கு அனுப்பிச்சுடலாம்" என்று சொல்லி அவனைத் தேற்றினாள்.

அன்று சாயந்திரம் பாலு ஏதோ குறும்பு செய்யவே அம்மா அவனை அடித்தாள். பாலு சட்டென்று அப்பாவைப் பார்த்து, "அப்பா, இந்த அம்மா ரொம்பப் பொல்லாதவள். முதல்லே இவளுக்குக் கல்யாணத்தைப் பண்ணிப் புருஷன் வீட்டுக்கு அனுப்பிச்சுடணும்" என்றான்!

—சா. கி. சங்கரநாராயணன்,
(மரவனேரி, சேலம்.)

* *

ஏழு வயதுச் சிறுவன் ஒருவன் தன் தாயிடம், "அம்மா, தம்பிப் பாப்பா எங்கேயிருந்து வந்தது?" என்று கேட்டான்.

"தம்பிப் பாப்பாவைக் காக்கை கொண்டுவந்து போட்டது" என்றாள் தாய்.

"காக்கைக்கு எப்படி அம்மா நீ கர்ப்பமாக இருந்தது தெரிந்தது?" என்று சிறுவன் மீண்டும் கேட்டான்.

—'மகளிர் டைஜெஸ்ட்'.

நான் ஒரு சிறு மரப்பெட்டி செய்துகொண்டிருந்தேன். என் 5 வயதுத் தம்பி என்கூட இருந்தான். பலகையின் பிசிறுகளைப் போக்குவதற்காக உப்புக் காகிதம் போட்டுத் தேய்த்துக்கொண்டிருந்தேன். "எதுக்கு அப்படிப் பலகையிலே தேக்கிறே?" என்று அவன் கேட்டான்.

"அதுக்கு அரிக்கிறதாம்; அதனாலே சொறிஞ்சு விடறேன்" என்றேன்.

அன்றிரவு நாங்கள் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது நான் என்



காலைச் சொறிந்துகொண்டேன். இதைப் பார்த்த தம்பி, "என் அண்ணா, உப்புக் காகிதம் போட்டுத் தேச்சுக்கோயேன்" என்றான்.

—ம. ரா. தத்தசுப்ரமண்யம்,
(கொடைக்கானல்)

"அம்மா, அந்தப் பெரிய ஊறுகாய் ஜாடி நம் வீட்டிலே தலைமுறை தலைமுறையாய் இருந்து வருவதாகத்தானே அன்று ஒரு நாள் சொன்னாய்?" என்று கூடத்திலிருந்து விசாரித்தாள் மகள்.

"ஆமாம். அதற்கென்ன இப்போது?" என்று சமையல் அறையில் இருந்தபடி கேட்டாள் தாய்.

மகள் சாவதானமாக, "ஒன்றுமில்லை. அது இந்தத் தலைமுறையிலே கீழே விழுந்து உடைஞ்சு போச்சு" என்றாள்.

* *

அண்ணனுக்குக் கொடுக்காமல் தம்பி தேங்காயைத் தின்றுகொண்டிருந்தான். தம்பி குழந்தையானதால், அவனை அழவிட அண்ணனுக்குப் பயம். ஆசையால், தந்திரமாகத் தேங்காயை வாங்க எண்ணி, "டேய்! தேங்காய் தின்னாதேடா. தேங்காய் தின்னா ஜுரம் வரும்" என்றான் அண்ணன்.

தம்பி சற்றும் தயங்காமல், "ஜுரம் வந்தா, நீ என்னை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிண்டு போ. டாக்டர்கிட்ட நான் மருந்து வாங்கிக்கிறேன்" என்று கச்சிதமாகச்



சொல்லிவிட்டு, தேங்காய் முழுவதையும் தின்றுவிட்டான்.

—எ. சீனிவாசன், (திருத்தணி)

* *

சிறுவனும் சிறுமியும் பெருமை பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

"என் அண்ணா பம்பாய்க்குப் போயிருக்கிறானே" என்றான் சிறுவன்.

"என் அக்காளும் பம்பாய்க்குப் போயிருக்காளே" என்றாள் சிறுமி.

"என் அண்ணாவுக்குப் பாடத் தெரியுமே!"

"என் அக்காளுக்கும் பாடத் தெரியுமே."

"என் அண்ணா பி. ஏ. படிச்சிருக்கானே!"

"என் அக்காளும் பி. ஏ. படிச்சிருக்காளே."

"இதெல்லாம் எப்படியானாலும் எனக்குக் கவலை இல்லை. என் அண்ணாதான் இரண்டு பேரிலும் உயர்ந்தவன்."

"ஓஹோ! அப்படியா? இன்னொன்று உனக்குத் தெரியுமா? என் அக்காள் பிள்ளை பெறப் போறாளே" என்று முடித்தாள் சிறுமி.

சீனுவின் புதிய தலைவர்கள்

கே. ஏ. அப்பாஸ்

பண்டித நேருவும் சியாங்கே ஷேக் தம்பதிகளும் நெருங்கிப் பழகியிருக்கிறார்கள். அதனால் சியாங்கைப்பற்றி நமக்குக் கொஞ்சமாவது தெரியும். ஆனால், இப்போது சீனவில் வெற்றி அடைந்து வரும் பொதுவுடைமைத் தலைவர்களைப்பற்றி அதுகூட நமக்குத் தெரியாது. எட்கார் ஸ்னோ, ஆக்னெஸ் ஸ்மெட்லி, அன்னா லூயி ஸ்ட்ராங் முதலிய அமெரிக்க நிருபர்கள் எழுதியிராவிட்டால், இவர்களைப்பற்றி உலகத்துக்கே ஒன்றும் தெரிந்திராது.

ஆனாலும், இவர்கள்தாம் வடக்குச் சீனவில் எழுதப் படிக்கத் தெரியாத குடியானவர்களை ஒன்று திரட்டிச் செஞ்சேனையை அமைத்த தீரர்கள். ஒரு பக்கம் ஜப்பானுக்கும் மற்றொரு பக்கம் சீனத் தேசிய சர்க்காருக்கும் இவர்கள் ஈடு கொடுத்துக் கொண்டே சமூகத்தைப் பொதுவுடைமை ரீதியில் மாற்றியமைத்தார்கள்!

'சீன என்றால் சியாங் கே ஷேக்' என்றே இதுவரையில் நினைத்துக்கொண் டிருந்தோம். இப்போதோ நிலைமை தலைகீழாக மாறி வருகிறது. முடிவு எதுவானாலும் அதன் புதிய பொதுவுடைமைத் தலைவர்களைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டாமா?

இவர்களில் முக்கியமானவர் மாவோ த்ஸே-டுங். இவருக்கு வயது 56. சீன ஸோவியத் அரசாங்கத்தின் தலைவரும் இவர்தாம்; காரியதரிசியும் இவரே. "அமெரிக்கத் தலைவராக இருந்த லிங்கனைப் போலவே இவரும் ஆஜானுபாகுவாய் இருக்கிறார்; நடுத்தரத்துக்கு மேல் உயரம். சற்று வளைந்த முதுகு. நீண்டு வளர்ந்த தலைமயிர். ஒல்லியாக இருக்கிறார். வெயிலிலும் மழையிலும் அலைந்து சுண்டின முகம். கூர்ந்து நோக்கும் பெரிய கண்கள். பெரும் பாலம் இட்டதுபோல் மூக்கு. எலும்பு புடைத்துக்கொண்டு நிற்கும் கன்னம். முகத்தில் புத்தி தீட்சண்யம் ஜொலிக்கிறது. அதைப் பார்த்ததுமே இந்த மனிதர் மிகவும் ஜாக்கிரதையாக நடந்துகொள்வார் என்று தெரிந்துகொள்ளலாம்."— இப்படி இவரை வர்ணித்திருக்கிறார் எட்கார் ஸ்னோ.

சீனுவுக்கு இந்தியக் காங்கிரஸ் வைத்திய உதவி அனுப்பியது எல்லாருக்கும் ஞாபகம் இருக்கலாம். காலஞ் சென்ற டாக்டர் கோட்னிஸும் டாக்டர் வஸுவும் அந்த வைத்திய கோஷ்டியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மாவோவுடன் நெருங்கிப் பழகியவர்கள். 1939 - இலிருந்து 1941 வரையில் அவர்கள் ஏனனில்

காப்பிரைட்: ஸ்வதந்த்ரா (ஆங்கிலம்: 8-1-'49), சென்னை.

இருந்தார்கள். அவர்களை வரவேற்க அங்கே ஒரு கூட்டம் கூடியது. அங்கே மாவோவும் வந்திருந்தார். ஆனால் மற்றச் சிப்பாய்களுக்கும் இவருக்கும் வித்தியாசமே தெரிய வில்லையாம்! — அவர்களைப் போலவேதான் இவரும் உடுத்திருந் தாராம். அவர்களைவிட இவர் சற்று உயரமாக இருக்கவே கண்டுபிடிக்க முடிந்ததாம்.

சிலநாள் கழித்து டாக்டர் வஸு மறுபடியும் அவரைக் காணப் போனார். அப்போது ஜப்பானியர் குண்டு போட்டு அந்த நகரத்தை நாசமாக்கிவிட்டார்கள். ஆனால் எங்கேயோ ஓர் இடம் மட்டும் பத்திரமாக இருந்தது. அங்கேதான் மாவோ விருந்தாளிகளை வர வேற்று உபசரிப்பது வழக்கம். சிரித்துக்கொண்டே டாக்டரையும் வரவேற்றுச் சாப்பிட்டுவிட்டுப் போகும்படி சொன்னார். துவிபாஷி ஒருவரை வைத்துக்கொண்டு பேசினார்கள். இந்தியாவைப்பற்றி மாவோவுக்குத் தெரிந்திருந்தாலும் இன்னும் நன்றாக அறிந்துகொள்ள வேண்டுமென்று அவருக்கு ஆவல்; மகாத்மா, ஜவாஹர்லால், இந்தியப் பொதுவுடைமைவாதிகள் எல்லா ரைப்பற்றியும் அவர் விசாரித்தார்.

மாவோ மிகவும் சாமானிய உணவுதான் சாப்பிடுகிறாராம். அடிக்கடி அதில் மிளகாய்ப் பொடி தூவிக்கொண்டே சாப்பிட்டாராம். அப்போது, "இந்தியாவுக்கும் சீனு வுக்கும் ஒரு விஷயத்தில் அதிக ஒற்றுமை; இரண்டு ஜாதியாருக்கும் மிளகாய் என்றால் ரொம்பப் பிடிக் கும்" என்று சொல்லிச் சிரித்தா ராம்.

மாவோவுக்கு அடுத்தபடி முக்கிய மானவர் சூ டே. இவர் சீனச் செஞ்சேனையின் தலைவர். "இவர் பெரிய மிராசுதார் வீட்டுப் பிள்ளை. சிறுவயதில் நல்ல நிலை யில் இருந்தவர்; சுகபோகமெல் லாம் அநுபவித்தவர். எவ்வளவோ கெட்ட பழக்கம் உண்டு. ஆனால் சற்றே வயசானதும் எல்லாவற்றை யும் விட்டுவிட்டார். உன்னத லட்சியங்களுக்காகத் தம் குடும்பத் தைக் கூடத் துறந்துவிட்டார்" என்று ஸ்னே எழுதியிருக்கிறார்.

டாக்டர் கோட்னிஸ் முதலியவர் கள் இவரைப் பார்க்கப் போயிருந் தார்களாம். வட சீனுவில் ஒரு குக் கிராமத்தில் இவர் வசிக்கிறார். பெரிய மண்டை; வெயிலிலும் மழையிலும் அலைந்து சுருங்கிப் போன முகம்; உதடு தடிமன். இப் படி ஒருவர் ஒரு குடிசை வாயிலில் உட்கார்ந்திருந்தாராம். அங்கே டாக்டர்கள் வந்ததும் அவர்களை இந்தக் கிழவர் வரவேற்றார். முதலில் இவர் யார் என்று அவர் களுக்குத் தெரியவில்லை. கிழவரும் மற்றவர்களைப்போல் சாதாரணச் சிப்பாய் உடை தரித்திருந்தார். உள்ளே நுழைந்த பிறகுதான் இவர் சூ டே என்று அவர்களுக்குத் தெரிந்தது. இவரோடு சற்றுப் பேசினதுமே, "இவர் எதையும் மனப்பூர்வமாய்ச் சொல்லுகிறார். மிகவும் பொறுமைசாலி. தம் கொள்கையைத் திடமாக நம்புபவர்" என்று வந்தவர்கள் கண்டுகொண் டார்கள். "தந்தையைப்போல் எங்களிடம் வாஞ்சையாக நடந்து கொண்டார். அப்புறம் பலமுறை பல சந்தர்ப்பங்களில் இவரைப் போய்ப் பார்த்திருக்கிறோம். ஆனால் ஒருதரமாவது சிப்பாய்கள்மேல் இவர் எரிந்து விழுந்தோ அவர் களிடம் அவமரியாதையாக நடந்தோ நாங்கள் பார்க்கவில்லை" என்று சொல்லியிருக்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் சீனுவை ஆள ஆரம்பித்தால் என்ன நடக்கும் என்றுதான் கேள்வி. எடுத்தவுடனே பொதுவுடைமையை அமலுக்குக் கொண்டுவந்து விடுவார்களா? தனிப்பட்ட சொத்துரிமையை ஒழித்துவிடுவார்களா? மற்றக் கட்சிகளை அடியோடு நசுக்கி விடுவார்களா?

நாலு வருஷங்களுக்கு முன் மாவோ த்ஸே டுங் 'சீனுவின் புதிய ஜன நாயகம்' என்று ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அதில் என்ன சொல்கிறார் பார்க்கலாம்:

"சீனச் சமூக அமைப்பு மாற இரண்டு காரியங்கள் செய்ய வேண்டியது அவசியம்: முதலில் பழம்பசலி முறைகளை ஒழிக்கவேண்டும். அப்புறம் சோஷலிஸ்ட் ரீதியில் சமூகத்தை மாற்றி அமைக்க வேண்டும். இப்போது நடக்கும் சீனப் புரட்சியில் பழைய முறையை ஒழிப்பதுதான் முதல் வேலை."

கூட்டுச் சர்க்கார் அமைத்தாலும் கூடச் சீனப் பொதுவுடைமைவாதிகள் சும்மா இருக்கப்போவதில்லை. பெரிய வியாபாரம், தொழில் இவற்றைச் சர்க்கார் ஏற்று நடத்தவேண்டும் என்பதுதான் அவர்களின் முக்கியத் திட்டம்.

"பாங்கிகளும் ரெயில்வேயும் வியாபாரமும் தொழிற்சாலைகளும் அரசாங்கத்தின் மேற்பார்வையில் நடக்கவேண்டும். ஆனாலும் தனிப்பட்ட சொத்துரிமையை அரசாங்கம் ஒழிக்காது. பொது ஜனங்களைப் பாதிக்காத வரையில் தனிப்பட்ட முதலாளிகள் பொருள் உற்பத்தி செய்வதையும் அரசாங்கம் தடுக்காது. அவ்வளவு தீவிரமாக முன்னேறச் சீனப் பொருளாதார நிலை இன்னும் இடமளிக்கவில்லை" என்று மாவே த்ஸே டுங் எழுதுகிறார்.

சீனப் பொதுவுடைமைக்கும் அஷியப் பொதுவுடைமைக்கும் அடிப்படையான வித்தியாசம் இதுதான்: ருஷியாவில் ஒரேயடியாகத் தனிப்பட்ட விவசாயத்தைக்கூட நசுக்கிவிட்டார்கள்; சீனுவிலோ அதை ஆதரிக்கிறார்கள். ஓர் இடத்தில் மாவோ, "டாக்டர் ஸன் யாட் ஸென் நம் நாட்டை 'உழவாளிகளின் நாடாக்கவேண்டும்' என்று பாடுபட்டார். அதை நாம் நடத்திக் காட்டவேண்டும். ஜமீன் முறையை ஒழித்து நிலத்தை உழவாளிக்குச் சொந்தமாக்க வேண்டும். அதுதான் முக்கியம். பொதுவுடைமை ரீதியில் விவசாய முறையை மாற்றுவது இப்போது நம் நோக்கமல்ல; பெரிய பெரிய விவசாயிகள் கூடத் தாராளமாகத் தங்கள் தொழிலை நடத்தலாம். அவர்களுக்கு எந்த விதமான தடையும் இராது" என்று எழுதியிருக்கிறார்.

சீனர்கள் மகா கெட்டிக்காரர்கள்; காகிதம், மசி, பட்டு, பஞ்சின் உபயோகம், வெடிமருந்து இவற்றையெல்லாம் அவர்கள்தாம் கண்டுபிடித்தார்கள். கீழ் நாடுகளுக்கு ஏற்றபடி பொதுவுடைமைக் கொள்கையையும் திருத்தியமைக்கவா அவர்களுக்குத் தெரியாது?

வெறும் சிற்றின்பமா?

ஆண் பெண் சேர்க்கை இச்சை நேர்த்தியானது; உன்னதமானது. அதுபற்றி ஒன்றும் வெட்கப்படத் தேவையில்லை. ஆனால், அது பிரஜா விருத்திக்காக என்றே ஏற்பட்டது அதை வேறு விதமாய்ப் பயன்படுத்துவது தெய்வத்துக்கும் மனித குலத்துக்குமே துரோகமாகும். —காந்தி, 'மகாத்மாவின் மனம்.'

இரவிலே கண் விழித்தால், 'இன்று என்ன, சிவராத்திரியா?' என்று சொல்வது வழக்கம். அவ்வளவு பிரசித்தமான அந்த விரதத்தின் புராண வரலாறு ரசமானது.

மகா சிவராத்திரி

டி. புருஷோத்தம்

•

ஒவ்வொரு வருஷமும் மாசி மாதம் கிருஷ்ணத் திரயோதசி யன்று மகா சிவராத்திரி விரதம் வருகிறது. சேதுவிலிருந்து இமாலயம் வரையிலும் சைவர்கள் இந்த விரதத்தை அனுஷ்டிக்கிறார்கள். அன்றுதான் மகாலிங்கம் உற்பத்தியாயிற்றாம்.

இந்திரன் முன்காலத்தில் ஈசுவரனை ஆராதித்து மூன்று லோகத்தையும் ஆண்டு அஷ்ட ஐசுவரியத்தையும் அநுபவிக்கும் பேறு பெற்றான். வஜ்ராயுதத்தை அடைந்து விருத்திராசுரனையும் கொன்றான். இந்தக் கர்வத்தில் தன்னை மிஞ்சியவர்கள் இல்லை என்று இறுமாந்திருந்தான். அவனைத் திருத்த எண்ணிய துர்வாசர், சிவபெருமான் அணிந்த வில்வ மாலையைப் பெற்று அவனுக்குப் பரிசாக அளித்தார். அப்போது அவன் ஏதோ நாட்டியத்தைப் பார்த்துக் கொண்டு மயங்கி இருந்தான். அதனால் அஜாக்கிரதையாக மாலையைக் கீழே நழுவவிட்டான். அது அவனது யானையான ஐராவதத்தின் மத்தகத்தின்மேல் விழுந்தது. யானை அதைத் தன் காலின் கீழே போட்டு நசுக்கிவிட்டது.

இதைக் கண்ட துர்வாசர் கோபமுற்று, "சிவபெருமானை அவமதித்த உன் ஐசுவரியம் அழிந்து விடப்போகிறது" என்று சபித்தார். உடனே அவன் விழித்துக் கொண்டான். அவருடைய காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டான். அவர் மனம் இரங்கி, "மகேசுவரனுடைய அநுக்கிரகத்தினாலேயே மறுபடியும் ஐசுவரியத்தை அடைவாய்" என்று ஆசீர்வதித்தார்.

இந்திரனுடைய ஐராவத யானை முதல் அமராவதி நகரம் வரையில் சகலமும் அசுரர் கையில் சிக்கின. கைலாசத்துக்குப் போய் இந்திரன் பிரார்த்தித்தான். சிவபெருமான் மகிழ்ந்து, "நீ பாற்கடலைக் கடைய ஏற்பாடு செய். அதிலிருந்து அமிர்தம் கிடைக்கும். அதை நீங்கள் எல்லாரும் சாப்பிடுங்கள். உன் ஐசுவரியம் அனைத்தும் திரும்பும்" என்றார்.

பிறகு பாற்கடலைத் தேவர்களும் அசுரர்களும் கடைந்தார்கள். வாசுகி என்ற சர்ப்பமே கடையும் கயிறு. அது நசுங்கி வேதனை பொறுக்க முடியாமல் ஆயிரம் நாவுகளாலும் விஷத்தைக் கக்கிற்று. விஷம் பத்துத் திக்குகளிலும் பாய்ந்தது. எல்லாரும் பயந்து தங்களை ரட்சிக்கும்படி சிவபெருமானை வேண்டிக்கொண்டார்கள். கருணாமூர்த்தியான சிவபெருமான்

காப்பிரைட்; பாரதி (தெலுங்கு: மார்ச், '48), சென்னை.

பிரத்தியட்சமாகி அபயம் கொடுத்தார். விஷத்தைத் திரட்டி ஒன்று சேர்த்துத் தம் வாயில் போட்டுக் கொண்டு விழுங்கி நீலகண்டர் ஆகிவிட்டார். இது நடந்தபோது மாசி மாதம் கிருஷ்ண சதுர்த்தசியன்று இரவு மணி பன்னிரண்டு என்கிறார்கள். இந்த நாளையே சிவராத்திரியாகப் பாவித்து விரதம் அநுஷ்டிக்கிறோம்.

சிவராத்திரியன்று உபவாசம் இருந்து சிவபூஜை செய்தால் எல்லையற்ற நன்மை உண்டாகுமாம். அதற்கு உதாரணமாக ஒரு கதை இருக்கிறது. வெகு காலத்துக்கு முன்பு இரணியாட்சன் என்ற ஓர் அசுரன் இருந்தான். அவன் ஈசுவர அநுக்கிரகத்தினால் எல்லா ஐசுவரியங்களையும் பெற்றிருந்தான். தேவர்களையும் ஜயித்துத் தன்னை மிஞ்சியவர்கள் இல்லை என்ற கர்வத்துடன் சிவபக்தர்களை இம்சித்தான். நாளுக்கு நாள் அவனுடைய அட்டகாசம் எல்லை மீறி விட்டது. கடைசியில் அந்த அசுரன் கைலாசத்துக்கே போய்ச் சிவ கணங்களையும் தொந்தரவு செய்ய ஆரம்பித்தான். சிவபெருமானுக்கு அசாத்தியமான கோபம் வந்துவிட்டது. "நீயும் உன் குடும்பத்தாரும் மிருகங்களைவிடக் கேவலமாக நடந்துகொண்டு விட்டீர்கள். அதனால் நீங்கள் அறிவற்ற மிருகங்களாக மாறச் செய்கிறேன்" என்று சபித்தார். அசுரன் தன் குற்றத்தை உணர்ந்து சிவபெருமானின் காலில் விழுந்து சாபவிமோசனம் அளிக்கும்படி வேண்டினான். சிவபெருமான் மனமிரங்கி, "நீங்களெல்லாம் பன்னிரண்டு வருஷங்கள் மான் உருவத்தில் இருக்க வேண்டும். பின்பு ஒரு வேடனால் சாபம் நீங்கும்; பூர்வ ஜன்ம ஞாபகத்துடன் என்னைப் பூஜித்துச் சாசுவதமாக மோட்சம் பெறுவீர்கள்" என்று அருளினார். அசுரனும் குடும்பத்தாரும் மான்களாக மாறிக் காட்டில் அலைந்தார்கள். இவர்கள் இப்படி இருக்கும்போது ஓர் ஊரில் ஒரு பிராம்மணன் தன் குலதர்மமாகிய வேத அத்தியயனத்தை விட்டு, ஒரு வேடச்சியை மணந்தான்; அல்லும் பகலும் வேட்டையாடுவதே தொழிலாகக் கொண்டான்; மாமிசமும் தின்றான்.

சிவராத்திரி வந்தது. பக்கத்து ஊரில் இருந்த ஒரு வைசியன் அந்தக் காட்டில் சிவபூஜைக்காக வில்வ தளம் பறித்துக்கொண்டிருந்தான்; சிவ சிவ என்று சொல்லிக் கொண்டே பறித்தான். பக்கத்தில் திரிந்துகொண்டிருந்த பிராம்மண வேடன் வைசியனைப் பார்த்துத் தானும் சிவ சிவ என்று கேலியாகச் சொல்லிக்கொண்டு இருந்து விட்டு வேட்டைக்குப் புறப்பட்டு விட்டான். அதென்ன மாயமோ! அன்று காடு முழுவதும் சுற்றியும் ஒரு மிருகங்கூட அவனுக்குக் கிடைக்கவில்லை. களைப்புடன் வீட்டுக்குத் திரும்பிய அவன், வழியில் தென்பட்ட வில்வ மரத்தைப் பார்த்தான். அதன்மேல் ஏறினான். வைசியன் வில்வம் பறித்த தோற்றம் நினைவுக்கு வந்தது. விளையாட்டாக மரத்தின்மேல் உட்கார்ந்து கொண்டு 'சிவ சிவ' என்று சொல்லியபடி வில்வ தளங்களைப் பறிததுக் கீழே விட்டெறிந்து கொண்டிருந்தான். சற்று நேரத்தில் இருட்டிவிட்டது. அப்போது அகஸ்மாத்தாக அங்கே பூர்ண கர்ப்பமான ஒரு பெண்மான் பிரசவ வேதனையுடன் வந்தது. வேடன், இதுதான் சமயமென்று மரத்தின் மேல் இருந்தபடியே மானைக் குறி

வைத்து அம்பு எய்ய முயன்றான். அந்த மானுக்கு ஞானதிருஷ்டி உதித்ததால், "ஐயா, பூர்வ ஜன்மத்தில் நாங்கள் அசுரர்கள். சாப வசத்தால் மிருகங்கள் ஆகிவிட்டோம். என் கணவரைத் தேடுகிறேன். இரவு முடிவதற்குள் அவரை அழைத்துக்கொண்டு, காலையில் சாப்பாட்டு வேளைக்கு உம் வீட்டுக்கு வருகிறேன்" என்று சொல்லியது. வேடன் சந்தேகப்பட்டான். "நான் உம்மிடம் திரும்பி வராவிட்டால் மகா பாதகர்கள் போகும் கதிக்குப் போவேன்" என்று மான் பிரமாணம் செய்தது; வேடன் அதை விட்டுவிட்டான். சற்று நேரத்துக்கெல்லாம் ஆண் மான் ஒன்று அங்கே வந்தது. வேடன் அதையும் கொல்ல முயன்றான். அதுவும் பெண் மானைப் போலவே பிரமாணம் செய்து விட்டுத் தன் இருப்பிடம் சேர்ந்தது.

பின்பு பெண்மான் குட்டி போட்டது. வேறு சில மான்களும் அங்கே வந்து கூடின. அவைகளுக்கெல்லாம் தெய்வ யத்தனத்தால் பூர்வ ஜன்ம நினைவு வந்திருந்தது. அவை சுத்தமாக இருந்து நான்கு ஜாமங்களும் வில்வ தளங்களால் சிவபெருமானைப் பூஜித்தன. மரத்தின் மேல் இருந்த வேடனும் வேறு வழி தெரியாமல் குளிரில் நடுங்கியபடி உட்கார்ந்து, "சிவ சிவ" என்று சொல்லிக்கொண்டே வில்வ தளங்களைக் கிள்ளிக் கீழே போட்டுக்கொண்டிருந்தான். அவனது அதிருஷ்ட வசத்தால் மரத்தின் கீழே சுயம்புவான சிவலிங்கம் ஒன்று இருந்தது. அவனுக்குத் தெரியாமலே வில்வ தளங்கள் அதன்மேல் விழுந்தன. எப்படியானால் என்ன? சிவராத்திரியன்று பட்டினியுடன் சிவநாமத்தை உச்சரித்துக் கண் விழித்துச் சிவார்ச்சனை செய்துவிட்டான். அவனுக்கு விரதபலன் கிடைத்துவிட்டது. அறியாமல் நெருப்பை மிதித்தாலும் சுடத்தானே சுடும்! அவனுடைய பாவங்கள் பஸ்மமாயின. மறுநாள் பொழுது விடிந்தது. அவன் வீட்டுக்குப் போனான். சற்று நேரத்துக்குள் மான்கள் எல்லாம் அங்கு வந்துவிட்டன; "இனிமேல் எங்களைக் கொன்று சாப்பிடுங்கள்" என்றன. அவைகளின் நேர்மை வேடனின் மனத்தை உருக்கியது. அவன் தன் குரூரச் செய்கைகளை நினைத்து நினைத்து வருந்தினான்; பச்சாத்தாபம் அடைந்தான். ஆகாய வீதியிலிருந்து இரண்டு திவ்விய விமானங்கள் இறங்கின. ஒன்று வேடனை ஏற்றிக்கொண்டு சிவலோகத்துக்குப் பறந்தது. மற்றொன்று மான்களை ஏற்றிக்கொண்டு சொர்க்கத்துக்குப் பறந்தது. மான்கள் அங்கே அழியாத நட்சத்திரங்களாகப் பிரகாசிக்கத் தொடங்கின. இன்று ஆகாய வீதியில் நாம் பார்க்கும் மிருகசீர்ஷம் அந்த மான்களின் கூட்டமே என்று சொல்லுகிறார்கள்.

பிறந்த நாள்பற்றி ராஜாஜி

குழந்தைகளுக்குப் பிறந்த நாள் கொண்டாடுவது நியாயம். அவர்களுக்குத்தான் அது பிரியமாக இருக்கும்; அதிசயமாகவும் இருக்கும். பெரியவர்களுக்குக் காரியம் முக்கியமேயொழிய நாள் நட்சத்திரம் அல்ல.

—ராஜாஜி.

ஏழைகளின் கற்பகம்

என். வி. புணதாம்பேகர்
என். எஸ். வரதாசாரி

★★★★★★★★★★★

'கைராட்டை - அதன் சரித்திரமும் புத்துயிரும்' என்ற அரிய நூலிலிருந்து எடுத்த ஒரு பகுதியைச் சென்ற இதழ் 'மஞ்சரி'யில் காணலாம். இன்னொரு பகுதி இது.

★★★★★★★★★★★

வேத காலத்திலும் இதிகாச காலத்திலும் வாழ்ந்திருந்த ஸ்திரீ புருஷர்கள் ஆடையணிவதை ஓர் அருங்கலையாக அபிவிருத்தி செய்திருந்தார்கள். ஆண்மக்கள் மூன்று வகை ஆடை அணிந்திருந்தார்கள். 'நீவி' என்ற அரையாடையும், 'பரிதான' அல்லது 'அதிவாஸஸ்' என்னும் மேலாடையும் 'வஸ்திர' என்னும் மூன்றாம் ஆடையும் அவர்கள் தரித்திருந்தார்கள். 'உஷ்ணீஷ' என்னும் தலைப்பாகையையும் அணிந்து வந்தார்கள். தைத்திரீய பிராஹ்மணத்தில் சொர்ணத்தினாலான ஆடையைப்பற்றி ஒரு குறிப்பு இருக்கிறது. தங்க வேலைப்பாடு அமைந்த ஆடைகளை மருத்துக்கள் அணிந்திருந்ததாக ரிக்வேதம் கூறுகிறது. மற்றோர் இடத்தில், 'வானத்தைப்போல் பார்ப்பதற்கு அழகான ஆடைகளை அணிந்தவர்' என்ற வாக்கியம் காணப்படுகிறது. நிகரற்ற அழகும் மென்மையும் வாய்ந்த ஆடைகள் அந்தக் காலத்தில் உண்டென்று இவற்றினால் அறிகிறோம்.

செல்வர்கள் அரையில் அணிந்த மெல்லிய ஆடைகளை 'ப்ராவார' என்றும், மேலாடைகளை 'உத்தரீய' என்றும், தலையணியை 'உஷ்ணீஷ' என்றும் குறிப்பிட்டார்கள். ஸ்திரீகள் இரண்டு வகை ஆடைகளை அணிந்தார்கள். அவர்கள் உடம்பில் அணிந்ததற்கு 'உத்தரீய' என்றும் தலையைச் சுற்றித் தரித்ததற்கு 'அந்தரீய' என்றும் பெயர்கள் வழங்கின. இதிகாச காலத்தில் பட்டு வஸ்திரங்களும் கம்பளித் துணிகளும் வழங்கின. பருத்தியாடைகளும் ஏராளமாக அணிந்தார்கள்.

கம்பளி ஆடைகள், வெண் சாமரங்கள், விலையுயர்ந்த ரத்தினங்கள், பட்டுகள், பலவர்ண ஆடைகள், ஆபரணங்கள், உயர்தர வாகனங்கள் முதலியவை சீதாதேவியிடம் இருந்தன என்று வால்மீகி ராமாயணம் சொல்கிறது. யுதிஷ்டிரருக்கு இந்தியாவின் பற்பல பகுதிகளிலிருந்தும் வந்த காணிக்கைப் பொருள்களில், ஆட்டு ரோமத்தினால் செய்து தங்கத்தினால் பூ வேலை செய்த ரத்தினக் கம்பளங்களும், கூர்ஜர நாட்டு ஆபீரர் அளித்த பலவகை ஜமுக்காளங்களும், பூச்சிகள் நூற்ற நூலினால் செய்த பட்டுத் துணிகளும்

மூலம்: கைராட்டை (புத்தகம்). பிரசுரித்தோர்: அகில பாரத சர்க்கா சங்கம், தமிழ்நாட்டுக் கிளை, திருப்பூர்.

சணல் முதலிய நாரினுல் செய்த ஆடைகளும் மைசூரிலும் கர்நாடகத்திலும் உற்பத்தியான மெல்லிய சல்லாக்களும் இருந்தனவென்று மகாபாரதம் கூறுகிறது. பாண்டியர்களும் சோழர்களும் தங்கக் கரை போட்ட மெல்லிய வஸ்திரங்கள் கொண்டு வந்து தந்ததாகவும் அறிகிறேம். அந்தப் பழைய காலத்திலேயே நம் நாட்டில் நெசவுத் தொழில் மகோன்னத நிலை எய்தியிருந்தது என்பதற்கு இவையே போதிய சான்றுகளாகும்.

வேறு தொழில் இல்லாதபோது நூற்பதையே ஜீவனேபாயமாகக் கொள்ளலாமென்று ஜனங்கள் அறிந்திருந்தார்கள். ராட்டினம் ஏழை எளியவர்களின் கற்பகமாயும், திக்கற்றவர்களுக்கெல்லாம் அருந்துணையாயும் இருந்தது. புத்தர் ஜாதகக் கதை ஒன்றில் இந்த உண்மை வெளியாகிறது. மரணத்தறுவாயில் இருந்த ஒருவன், "என் மனைவி மக்களை நிர்க்கதியாக விட்டுப்போகிறேனே" என்று மனம் வருந்தினன். அப்போது அவன் மனைவி, "நாதா! தாங்கள் கவலைப் படவேண்டாம். பஞ்சிலிருந்து நூல் நூற்கும் வித்தை எனக்குத் தெரியும். அதைக்கொண்டு நம் குழந்தைகளை நான் காப்பாற்றி வருவேன்" என்று தேறுதல் கூறினள். இப்படிக் கதியற்றவர்களுக்கெல்லாம் கதியாக இருந்து வந்தது ராட்டை என்று அர்த்த சாஸ்திரத்திலிருந்தும் தெரியவருகிறது. திக்கற்ற ஏழைகள், அங்கவீனர்கள், வீட்டுக்கு வெளியே போகாத ஏழை ஸ்திரீகள், வேலை செய்து பிழைக்கவேண்டியிருக்கும் சிறு பெண்கள் முதலியோருக்கு நூற்கும் வேலை கொடுத்தல், சூத்திர அத்தியட்சர் என்ற நூல் அதிகாரியின் கடமைகளில் ஒன்று என்று அர்த்த சாஸ்திரம் கூறுகிறது. ஆகவே, ஒருவகை ஏழைப் பாதுகாப்புச் சட்டமாகவும் அதை உபயோகித்து வந்தார்களென்று அறிகிறேம். மனுவின் காலத்திலேயே இப்படி இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. மனுஸ்மிருதிக்கு விரிவுரை எழுதிய குல்லூக பட்டர், வீட்டுக்கு வெளியே சென்று வேலை செய்ய இயலாத ஏழை ஸ்திரீகளுக்கும் பெண்களுக்கும் என்ன வேலை கொடுக்கலாம் என்பதைப்பற்றி விவாதிக்கிறர்; அதன் முடிவாக, "நூல் நூற்றல் ஒன்றுதான் அவர்களுக்குத் தகுந்த கண்ணியமான ஜீவனேபாயம்" என்று சொல்லியிருக்கிறர்.

ரேஸ் நிபுணர்

அமெரிக்காவில் உள்ள ஸான் பிரான்ஸிஸ்கோ நகர கோர்ட்டில் ஒரு வழக்கு. அதில் சாட்சி சொன்னர் விக்டர் நெல்சன் என்பவர். "குதிரைப் பந்தயத்தில் கட்டாயம் ஜயிக்க முடியும். என்னிடம் 4,500 டாலர்தான் மூலதனம் இருந்தது. அதைப் போட்டுப் புரட்டிப் புரட்டி 3,11,000 டாலர் விலையுள்ள டிக்கட்டுகளை நான் வாங்கியிருக்கிறேன்" என்று அவர் சொன்னர்.

"உமக்குக் கிடைத்த நிகரலாபம் எவ்வளவு?"

"26 டாலர் 41 சதம்." —'கனடியன் ஸ்போர்ட்ஸ் டைஜெஸ்ட்'



பரமஹம்ஸர்

பக்தனின் அபயக் குரல்: ஒரு பக்தனை ஒரு வண்ணான் வெகு கடுமையாக அடித்தான். பக்தன் ஒன்றும் செய்யாமல், "நாராயணா! நாராயணா!" என்று மட்டும் கத்தினான். வைகுண்டத்தில் லட்சுமியுடன் அமர்ந்திருந்த பகவான், உடனே அவனைக் காப்பாற்றப் புறப்பட்டார். இரண்டு அடி தூரம் போனவர், திரும்பிவந்து மறுபடியும் லட்சுமியின் பக்கத்திலே உட்கார்ந்து விட்டார். "இவ்வளவு சீக்கிரம் திரும்பிவிட்டீர்களே! என்ன காரணம்?" என்று கேட்டாள் லட்சுமி. "நான் போக வேண்டிய அவசியம் இல்லாமல் போயிற்று. பக்தனும் வண்ணான் ஆகிவிட்டான். அவன் என்னை நம்பியிருக்கவில்லை; தன்னைக் காப்பாற்றிக்கொள்ள எண்ணித் தானே வண்ணானைத் திருப்பி அடிக்கத் தொடங்கி விட்டான்" என்றார் பகவான். (வாக்கு)

கடவுளை நேருக்கு நேரே கண்ட மகான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர். அவர் வாழ்வு சத்திய ஜோதி; வாக்கு ஜீவ அமிர்தம்.

மண்ணும் பொன்னும்: ராமகிருஷ்ணருக்குச் சிறுவயதில் தமது பொன்னாசையை ஒழிக்க வேண்டும் என்று விருப்பம். ஒரு கையிலே கொஞ்சம் மண்ணை எடுத்துக்கொண்டார். மறு கையிலே சிறிது பணத்தை எடுத்துக் கொண்டார். கங்கைக்கரைக்குப் போனார். "மண் பொன்" என்று சொல்லிச் சிறிது மண்ணைக் கங்கையிலே எறிந்தார். "பொன் மண்" என்று சொல்லிச் சிறிது பணத்தைக் கங்கையிலே எறிந்தார். இப்படியே மாறி மாறி ஜபம் செய்து மண்ணையும் பொன்னையும் முழுவதும் கங்கையிலே எறிந்துவிட்டு வெறுங் கையோடு வீட்டுக்குத் திரும்பி விட்டார். (வாழ்வு)

பக்கிரியும் பாதுஷாவும்: அக்பர் பாதுஷா காலத்தில் டில்லிக்கு அருகிலே ஒரு பக்கிரி இருந்தார். அவரிடம் நாலுபேர் வந்து போவார்கள்; அவர்களை உபசரிக்க வேண்டுமென்று பக்கிரிக்கு ஆசை. ஆனால் கையில் பணம் இல்லை. யார் போய்க் கேட்டாலும் அக்பர்

வாழ்வும் வாக்கும்



தாராளமாகப் பணம் கொடுப்பார் என்று அவர் கேள்விப்பட்டிருந்தார். அதனுல் நேராக அக்பரிடம் போனுர். அப்போது அக்பர், ஓர் அறையில் நமாஸ் செய்து கொண்டிருந்தார். பக்கிரி அங்கே போய் உட்கார்ந்தார். நமாஸ் முடிவில் அக்பர், "ஏ அல்லா! நீதான் எனக்கு எல்லா ஐசுவரியமும் சுகபோகமும் கொடுத்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார். இதைக் கேட்டதும் பக்கிரி சட்டென்று எழுந்து வெளியே போகப் புறப்பட்டார். "வந்த காரியத்தைச் சொல்லவில்லையே! வந்து உட்கார்ந்ததும் உட்காராததுமாகப் புறப்பட்டு விட்டீர்களே; ஏன்?" என்று அக்பர் கேட்டார். "நாலு பேருக்கு உதவியாக இருக்கலாமே என்று உங்களிடம் பணம் யாசிக்க வந்தேன். ஆனுல் இங்கே வந்து பார்த்தால் நீங்களே, 'அது வேண்டும், இது வேண்டும்' என்று அல்லாவிடம் பிச்சை கேட்கிறீர்கள்? அதனுல்தான், 'உங்களைக் கேட்பானேன்; நேராகக் கடவுளையே கேட்டு விடுவோம்' என்று திரும்பிப் போகிறேன்" என்ருர் பக்கிரி. (வாக்கு)





மிகப் பழம் பெருமை வாய்ந்தது இந்தியா; அதை விளக்கும் சரியான சரித்திரப் புத்தகம் எதுவுமில்லை. இந்தக் குறை தீர வேண்டும்.

எழுத வேண்டிய புத்தகம்

கே. எம். முன்ஷி

எகிப்து, பாபிலோனியா, அஸ்ஸிரியா, மெஸபொடேமியா முதலிய புராதன நாடுகளைப் போலவே இந்தியாவும் பழம் பெருமை வாய்ந்தது; ஆனாலும், இதைப்போல் ஒவ்வோர் அம்சத்திலும் அவை சிறந்திருந்ததாகச் சொல்ல முடியாது. எகிப்தின் பழம் பெருமையெல்லாம் இப்போது எங்கே போயிற்று? கிரேக்கர்களும் ரோமர்களும் தங்கள் புராதன சமூகக் கருத்துக்களையும் சமயக் கொள்கைகளையும் ஏட்டளவில் பாதுகாத்து வைத்திருப்பதென்னவோ உண்மைதான்; ஆனால் இவர்களுக்கும் ஆதி கிரேக்க ரோமர்களுக்கும் ஒரு விதத்திலும் சம்பந்தமே இல்லை.

இந்தியா அப்படி அல்ல. சமீபத்தில் மொஹெஞ்சோதடோவில் பல அருமையான புதைபொருள்கள் கிடைத்தன. அவற்றில் சில தெய்வ உருவங்களும் இருந்தன. அவற்றையேதான் இந்தியர் இன்னும் வழிபட்டு வருகிறார்கள். 4000 வருஷங்களுக்குமுன் நம் முன்னோர் ஓதிய அதே வேத மந்திரங்களைத்தான் இன்னும் இமயம்முதல் குமரிவரை ஓதி வருகிறோம். மொழி, இலக்கியம், கலை, சமயம் எந்தத் துறையிலும் தொடர்பு கெடாதபடி இந்தியா அப்படியே இருக்கிறது. இந்திய சரித்திரத்திலுள்ள விசேஷம் இதுதான்.

சமீபகாலம் வரையில், இந்தியா அடிமைத் தளையில் சிக்கிச் சக்தி குன்றிக் கிடந்தது. இதனால் மற்ற நாடுகள் அதை மதிக்கவில்லை. ஐரோப்பிய சரித்திர ஆசிரியர்கள் எகிப்து முதலிய புராதன நாடுகளைப்பற்றி நடுநிலைமை குன்றாமல் எழுதியிருக்கிறார்கள். ஆனால் இந்தியா விஷயத்தில் அப்படி நடந்து கொள்ளவில்லை. சமீபகால அரசியல் நிகழ்ச்சிகளை மனத்தில் வைத்துக்கொண்டு துவேஷ மனப்பான்மை காட்டியிருக்கிறார்கள். வின்ஸெண்ட் ஸ்மித் பூர்விக இந்தியாவைப்பற்றி எழுதிப் பிரசித்தி பெற்றவர்; அவர் ஐ. ஸி. எஸ். காரர்; பிரிட்டிஷ் ஆட்சியினால் விளைந்த நன்மைகளைப் புகழுவதிலேதான் அவருக்குத் திருப்தி. "ஹர்ஷவர்த்தனருக்குப்பின் இந்தியாவில் ஒழுங்கான ஆட்சிமுறை நடக்கவேயில்லை; குழப்பம் தலைவிரித்தாடியது. பிரிட்டிஷ் ஆட்சி நிலைத்த பிறகுதான் இங்கே அமைதி ஏற்பட்டது" என்று ஒரேயடியாக முடிவு கட்டிவிட்டார்.

சரித்திர நிபுணர் இந்தியர்களாக இருந்தாலோ, தீவிர தேசாபிமானத்தினால் இதற்கு நேர்மாறாக எழுதி விடுகிறார்கள். புராதன இந்தியாவின்

காப்பிரைட்: நியூ டெமொகிராட் (ஆங்கிலம்: 31-12-'48), பம்பாய்.

பெருமையை வானளாவப் புகழ்கிறார்கள்; அங்கு ஒன்றும் இங்கு ஒன்றுமாகக் கிடைக்கும் அரைகுறை விவரங்களை வைத்துக்கொண்டு, "அந்தக் காலத்திலேயே நம் நாட்டில் பார்லிமெண்டரி ஆட்சிமுறை இருந்திருக்கிறது. அதை அப்படியே மேனாட்டார் எடுத்துக்கொண்டு விட்டார்கள்" என்று நிரூபிக்கப் பார்ப்பார்கள். இப்போது நம் சமூகத்தில் காணும் மோசமான பழக்க வழக்கங்களைக்கூட இவர்கள் பிரமாதமாகப் புகழ்வார்கள். அதே சமயம் ஐரோப்பிய ஆசிரியர்கள் நம்மைப்பற்றி என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா? "இந்தியருக்கு என்ன தெரியும்? நாம் வருவதற்குமுன் ஆட்சி என்றால் இவர்களுக்கு யதேச்சாதிகாரம் என்றுதான் அர்த்தம். இவர்கள் புராணம் இதிகாசமெல்லாம் நம்மிடத்திலிருந்து பிச்சை வாங்கினதே" என்று நம்மை அவமதித்துப் பேசுகிறார்கள்.

இரண்டு அபிப்பிராயமும் தவறே. "இந்தியர்களுக்கு எப்போதும் ஆத்மிக வளர்ச்சியிலேயே கருத்து; அதனால்தான் உலக விஷயங்களைப்பற்றி அவர்கள் அக்கறைப் படவில்லை" என்று சிலர் சொல்கிறார்கள். இதைக் கவனிக்க வேண்டியதுதான். இந்திய நாகரிகத்தின் போக்கே அலாதி; உலகத்திலுள்ள மற்ற நாடுகளோடு அதை ஒப்பிட்டுப் பார்ப்பது சரியல்ல. புதிய நோக்கிலிருந்து அதன் சரித்திரத்தை எழுதவேண்டும். போர், வெற்றி, சாம்ராஜ்யங்கள் உண்டானது, அவைகளின் வீழ்ச்சி, அரசியல் வளர்ச்சி இவற்றைப் பிரமாதமாக எண்ணக்கூடாது; நம் நாட்டுத் தத்துவம், சமயம், கலை, இலக்கியம், உயர்ந்த லட்சியங்கள், உலகத்துக்கு நம்மால் ஏற்படும் நன்மை இவற்றை எடுத்துக் காட்டுவதுதான் முக்கியம்.

ஆனால் எதையும் நிச்சயமென்று தீர்மானித்துவிட முடியாது. நம் முன்னோர்கள் சரித்திர நிகழ்ச்சிகளைத் தேதிவாரியாகத் தொகுக்காமல் போனதே இதற்குக் காரணம். இந்தப் பெருங்குறையினால்தான் நாம் நம் அரசியல், கலை வளர்ச்சியைப்பற்றிச் சரியாக அறிந்துகொள்ள முடியவில்லை. இந்த நிலையில் ஆராயப்போனால் இன்னும் சிக்கல்தான் நேரும். கருத்து வேற்றுமைகள் முற்ற முற்ற விவாதம் பலமாகிவிடும். சில சமயம் நாம் சொல்லும் விஷயம் சரியாக இருந்தாலும் அதை நிரூபிக்கப் போதுமான ஆதாரம் இராது; இதனால் வேறு திண்டாடவேண்டியிருக்கும். எல்லா அபிப்பிராயங்களையும் தழுவிக்கொண்டு போவதும் சாத்தியமில்லை; ஏதாவது ஒரு வழியாகத்தான் போக முடியும். விவாதத்துக்கு இடங்கொடுக்கக் கூடிய விஷயமாக இருந்தால் அதைப்பற்றி அதிகமாக ஒன்றும் எழுதக்கூடாது; "இன்ன நூலிலோ பத்திரிகையிலோ அறிஞர்கள் இதைப்பற்றி விவாதித்திருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டு விடுவது நல்லது. நமக்கு நன்றாகத் தெரிந்ததையும், அரைகுறை விவரத்தையும் போட்டுக் குழப்பக்கூடாது. தனித்தனியாக எடுத்து அலசி ஆராய வேண்டும்.

இந்திய சரித்திரத்தில் கி. பி. 13-ஆம் நூற்றாண்டு மிகவும் முக்கியமானது. அப்போதுதான் ஆட்சி அந்நியர் கைக்கு மாறுகிறது. அவர்கள் மதமும் நாகரிகமும் நமக்குப் புதிசு. அதனால் குடிகளுக்கும் அரசர்களுக்கும் தொடர்பே இல்லாமல் போய்விடுகிறது. இது

முதல், இந்திய சரித்திரத்தில் எழுது வதற்கு நிறைய விஷயம் கிடைக்கிறது. ஆனால் இதிலும் ஒரு குறை. நம்மை ஆண்ட அரசர்களைப்பற்றி விசேஷமாக இருக்கிறதே தவிரக் குடிகளைப்பற்றி ஒரு விவரமும் இல்லை.

கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் ஏறக்குறைய இந்தியா முழுதும் மொகலாய ஆட்சியின்கீழ் வந்து விடுகிறது. அதுமுதல் இந்திய சரித்திரம் தெளிவாகப் புரிகிறது. குடிகளிடம் அன்பு செலுத்தினால் தான் ராஜ்யம் நிலைக்கும் என்று அந்நியர்களான மொகலாயர்கள் கண்டுகொள்கிறார்கள்; இந்து முஸ்லிம் நாகரிகங்கள் (அக்பர் காலத்தில்) ஒன்றோடொன்று இழைகின்றன. ஆளுவோர் முஸ்லிம்களாயிருந்தாலும் இந்துக்களுக்கும் ஆட்சியில் பங்கு தருகிறார்கள். ஆனால் இந்து முஸ்லிம் ஐக்கியம் ஏற்பட்டு இந்தியா ஒரே நாடாகும் என்ற எண்ணம் (ஒளரங்கஜேப்பின் மதவெறியால்) ஈடேறாமல் போய் விடுகிறது. (சிவாஜி போன்ற) இந்துக்கள் தலை தூக்குகிறார்கள்.

இதிலிருந்து சரித்திர ஆசிரியர்கள் சரியாகக் கவனித்து மாறுபடாமல் எழுதியிருக்கிறார்கள்.

புதிய உடுப்பு!

வடக்கேயிருந்து வருகிறது இந்தக் கதை. உண்மையோ, பொய்யோ நமக்குத் தெரியாது.

கிழக்குப் பாகிஸ்தான்வாசி ஒருவர் சில மாதங்களுக்கு முன் மேற்கு வங்காளத்தில் இருக்கும் ஓர் ஊருக்கு வந்தார். அது இந்திய யூனியனைச் சேர்ந்தது. அங்கே ஜவுளிக் கட்டுப்பாடு அப்படிப் பிரமாதமாக இல்லை. அதனால் தமக்குப் பிடித்த சூட், ஹாட், பூட்ஸ் எல்லாம் வாங்கிக்கொண்டார். சியால்தஹ் தாண்டினதும் பாகிஸ்தான் எல்லை; அங்கிருந்து ரெயில்வண்டி புறப்படுவதற்குமுன் எல்லை அதிகாரிகள் பெட்டி படுக்கையைச் சோதனை போடுவார்கள் என்று கேள்விப்பட்டார். சியால்தஹ் ஸ்டேஷனுக்கு வந்ததும் ரெயில்வே கூலிக்காரன் ஒருவனைப் பிடித்தார். அவனுக்குத் திருப்தியாகச் சம்மானம் கொடுத்தார். முன்னாலேயே பெட்டியை முதல்வகுப்பு வண்டியில் வைத்து விடச் சொன்னார். அவனும் பெட்டியை எடுத்துக்கொண்டு போய்விட்டான்.

அவர் டிக்கெட் வாங்கிக்கொண்டு ஜோராகக் கையை வீசியபடி முதல்வகுப்பு வண்டியில் போய் ஏறிக்கொண்டார். பெட்டியும் அங்கே இருந்தது. அதிகாரிகள் சோதிப்பதற்கு முன் பழைய துணிகளையும் பெட்டியையும் எறிந்துவிட்டுப் புதிய உடையில் காட்சியளிக்கவேண்டும் என்று அவருக்கு எண்ணம். அப்போது அவரை ஏன் சோதிக்கப் போகிறார்கள்? பெட்டியை எடுத்துக்கொண்டு ஸ்நான அறைக்குள் போனார். முதலில் பழைய உடைகளையெல்லாம் களைந்துவிட்டுப் பிறந்தமேனிக்கு நின்றுகொண்டு, அவைகளை ஜன்னல் வழியாக வெளியே வீசி எறிந்தார். அப்புறம் பெட்டியைத் திறந்து பார்த்தால் ஒரே ஒரு பழைய தினசரித்தாள் மட்டுந்தான் இருந்தது; மற்றப்படி பெட்டி காலி!

நம்பத்தகுந்த நம்பூதிரிகள்

டாக்டர் கே. என். கேஸரி

> இதை எழுதிய ஆசிரியர் ஆந்திரர். இவர் மனைவி மலையாளிப் பெண். அதனால் இவருக்கு மலையாள நாட்டைப் பற்றிய விவரங்கள் நன்ருகத் தெரியும்.

பரசுராமர் க்ஷத்திரியர்களைக் கொன்ற பிறகு அந்தப் பாவத்தைப் போக்கப் பிராம்மணர்களுக்குப் பூதானம் வழங்க நினைத்தார். மேற்குக் கடற்கரையிலிருந்த ஒரு மலை உச்சியில் நின்றுகொண்டு தம் கோடரியைக் கடலிலே வீசி எறிந்தார். அது விழுந்த வேகத்தில் கடலிலிருந்து நிலப்பரப்பு வெளிப்பட்டது. இதுதான் கேரள தேசம்.

பிறகு பரசுராமர் வட இந்தியாவிலிருந்து பிராம்மணர்களை வரவழைதார்; கேரள தேசத்தை அவர்களுக்குத் தானம் செய்தார். ஆனால் வந்தவர்கள், அங்கே திரிந்த துஷ்ட ஜந்துக்களுக்குப் பயந்து கொங்கண நாட்டுக்கு ஓடிவிட்டார்கள். அவர்களே இன்று அழகிய ஜாதி என்று புகழ் பெற்ற ஸாரஸ்வதப் பிராம்மணர்கள். இதைக் கண்ட பரசுராமர் இரண்டாம் முறையும் சில பிராம்மணர்களை வரவழைத்தார்; மறுபடி பூதானம் செய்தார். இப்போது வந்தவர்கள், தவத்திலும் மந்திர சக்தியிலும் தேர்ந்தவர்கள். அதனால் துஷ்டஜந்துக்களை வசப்படுத்திக் கொண்டு அங்கேயே தங்கிவிட்டார்கள். இவர்கள்தாம் நம்பூதிரிகள். நம்பூதிரிகள் என்ருல் 'நம்பத் தகுந்தவர்கள்' என்று அர்த்தம். இப்படிப் பரசுராமரே சிருஷ்டி செய்ததால் இந்த நாட்டுக்குப் 'பரசுராம க்ஷேத்திரம்' என்று பெயர் வந்தது. மலைகள் அடர்ந்திருப்பதால் 'மலை நாடு' என்றும் பெயர். தேங்காய் அபரிமிதமாக உற்பத்தியாவதால் 'கேரளம்' ஆயிற்று. இங்கே குடியேறியவர்கள் ஷோடச கர்மாக்களையும் தவருமல் செய்துவந்ததால், இதற்குக் கர்ம பூமி என்றும் பெயர்.

காட்டில் இவர்கள் முதலில் பாம்புகளின் தொந்தரவுக்கு ஈடு கொடுக்கவேண்டியிருந்தது; அப்போது மந்திர தந்திரங்களால் நாகங்களை வசப்படுத்திக் கொண்டார்கள். இன்னும் இங்கே நாக பூஜை அதிகம். அதன் சின்னமாகவே நம்பூதிரிகள் முன்குடுமி வைத்திருக்கிருர்கள். குடியேறிய போது இவர்களுக்கு வீடுகள் முதலிய வசதிகள் இல்லை. அதனுல் இவர்கள் காட்டை அழித்துச் சிறு குடிசைகள் அமைத்துக்கொண்டார்கள். இன்றும் இவர்களில் பலர் இயற்கை எழிலை அநுபவித்துக் கொண்டு கிராமங்களில் குடிசை கட்டிக்கொண்டு வாழ்கிருர்கள். தங்கள் நாகரிக முறைப்படி முடிந்தமட்டும் பூமியைப் பண்படுத்திப் பயிர் செய்தார்கள்; மரங்களை வளர்த்தார்கள். அந்த நிலங்கள்

காப்பிரைட்: கிருகலட்சுமி (தெலுங்கு: டிசம்பர், '48), சென்னை.

இவர்களுக்குச் சொந்தமாயின. இவர்களது ஒழுக்கத்தின் உயர்வைக் கண்டு பிற்காலத்தில் அரசர்கள் இவர்களுக்கு மானியம் கொடுத்தார்கள். இப்படி மானியம் பெற்றவர்களை 'ஜன்மி' (மிராசுதார்) என்று சொல்லுவார்கள். இன்றைக்குக் கேரளத்தில் பாதி நிலத்துக்கு மேல் இவர்கள் வசமே இருக்கிறது. இப்போதும் ரிக்வேத கால ஆரியரைப்போலவே இவர்கள் அநுஷ்டானங்கள் செய்து வருகிறார்கள்.

பொதுவாக நம்பூதிரிகள் வீட்டை விட்டு வெளியே போவதில்லை; பிறரையும் தீண்டுவதில்லை. ஆனால் சிலர் ஆங்கிலம் படித்துவிட்டு உத்தியோகம் பார்க்கிறார்கள். என் வீட்டில் நம்பூதிரிப் பிராம்மணர் ஒருவர் சமைக்கிறார். வந்தது முதல் இவர் என்னிடம் நெருங்கிப் பழகுகிறார். நல்ல படிப்பாளி; ஆசாரசீலர். 'சாஸ்திரிகளே' என்பதுபோல் இவரைத் 'திருமேனி' என்று அழைக்கவேண்டும். இவர் சொல்லித்தான் நம்பூதிரிகளைப்பற்றி நான் அறிந்துகொண்டேன்.

பிறந்து நான்கு மாதம் வரைக்கும் நம்பூதிரிகள் குழந்தையை வெளியில் கொண்டுவரமாட்டார்கள். 'நிஷ்க்ரமணம்' (புறப்பாடு) என்று ஒரு சடங்கு நடத்துவார்கள். அதற்காக ஒரு பலாமரத்தை அலங்கரிப்பார்கள். வெட்ட வெளியில் குழந்தையை எடுத்துவந்து அதன் காலால் பலாமரத்தின் வேரை மிதிக்கச்செய்வார்கள். பிறகு பிராம்மணர்களுக்குத் தானம் கொடுப்பார்கள்.

நம்பூதிரிகளில் பெண்களுக்குக் கூடக் குடுமி வைக்கும் சடங்கு உண்டு; ஆனால் பெயருக்கு இரண்டு மூன் மயிரைத்தான் களைவார்கள்.

பூணூல் போட்டபின் புரோகிதர் மூச்சு விடாமல் வடமொழியில் மட்டும் பிரம்மசரிய விதிகளைச் சொல்லும் வழக்கம் நம்மிடம் உண்டு. ஆனால் அவர்கள் பையனுக்குப் புரியும்படி மலையாளத்திலும் சொல்லுகிறார்கள். நம்பூதிரிச் சிறுவர்கள் குருகுல வாசம் செய்து வீடு திரும்புகிறார்கள். இது இன்னும் நடந்துவருகிறது.

அவர்கள் மரபில் குடும்பத்தில் மூத்த பிள்ளைமட்டும் தன் ஜாதிப் பெண்ணை முறைப்படி கலியாணம் செய்து கொள்வான். மற்றத் தம்பிகள் நாயர்ப் பெண்களுடன் தொடர்பு வைத்துக்கொள்வார்கள். இந்த வழக்கம் ஏற்பட்டதற்குப் பல காரணங்கள் சொல்லுகிறார்கள். நம்பூதிரிகள் இந்த நாட்டுக்கு வந்தபோது அவர்களுடன் மிகச் சில பெண்களே வந்தார்களாம். எல்லோரும் கலியாணம் செய்துகொள்ளப் பெண்கள் போதவில்லையாம். அதனால் இந்த 'ஸம்பந்த' முறை வந்ததாம். ஜமீன்தாரர்களாகிய நம்பூதிரிகள் தங்கள் சொத்துச் சீர்குலையாதிருக்க இப்படிச் செய்ததாகவும் சொல்லுகிறார்கள்.

இப்போது நம்பூதிரிப் பெண்கள் மலிந்துவிட்டார்கள்; ஆனால் மூத்த பிள்ளைமட்டும் கலியாணம் செய்துகொள்ளவேண்டும் என்ற சட்டம் எடுபடவில்லை. அதோடு சாஸ்திரங்களை நன்றாகப் படித்தவனாகவும் இருக்கவேண்டும். இதனால் பல பெண்கள் கன்னிகைகளாகவே இருக்கிறார்கள். வரனை மணவாளன் என்பார்கள். பிள்ளைக்கு ஆயிரக்கணக்கில் வரதட்சிணை கொடுக்கவேண்டியிருக்கிறது. ஒருவனுக்கே பல

பெண்களைக் கொடுத்து அந்தச் செலவை மிச்சம் பிடிப்பதும் உண்டு. மூத்த பிள்ளைக்குக் குழந்தைகள் பிறக்காமல் வயதும் சென்று விட்டால், அவன் தம்பியைத் தன் ஜாதியில் கலியாணம் செய்து கொள்ள அநுமதி கொடுத்துவிடுவானும்! அப்போது வரதட்சிணை இல்லாமலே அவனுக்குப் பெண்ணைக் கொடுப்பார்கள். நம்பூதிரிகளில் பெண் பருவம் அடைவதற்கு முன் மணக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. அவர்கள் ஜாதகத்தை ஒப்பிட்டுப் பார்ப்பவர்களுக்குப் 'பணிக்கர்' என்று பெயர். கலியாணப்பிள்ளை புறப்படும்போது அவனிடம் வேலை பார்க்கும் நாயர்கள் கத்தி, கபடாக்களை வீசிக் கொண்டு வருவார்கள். நம்பூதிரிப் பெண்கள் கோஷாக்கள். இதனுல் தான் வீட்டுக்கு வரும் மாப்பிள்ளையைக்கூட இவர்கள் எதிர்கொண்டு அழைப்பதில்லை. அதற்குப் பதிலாகப் பெண்வீட்டைச் சேர்ந்த நாயர்ப் பெண்கள், நம்பூதிரிப் பெண்களைப் போல் அலங்கரித்துக்கொண்டு மாப்பிள்ளையை வரவேற்பார்கள். 'புண்யாஹம்' செய்ய அழைத்துப் போகும்பொழுது மாப்பிள்ளையின் முன் ஒரு நம்பூதிரி தீபாராதனை எடுத்துக்கொண்டு நடப்பான். மணையில் உட்கார்ந்ததும் ஒரு நாயர்ப் பெண் வந்து சர்க்கரை கலந்த நீரை மாப்பிள்ளையின் பின் நின்று ஆரத்திபோல் சுற்றுவாள். பிறகு மாமனுர் வந்து மாப்பிள்ளையை வணங்குவார்; அவனும் நமஸ்கரிப்பான். மாமனுர் ஆசமனத்துக்கு நீர் கொடுப்பார். அப்பொழுது மாப்பிள்ளைக்குச் சரிகை போட்ட நாலு மூண்டுகளைக் கொடுப்பார். அவைகளை அப்படியே கலியாணப் பெண்ணுக்கு அனுப்ப, அவள் இரண்டு எடுத்துக்கொண்டு இரண்டைத் திருப்புவாள். அந்த ஜதையை மாப்பிள்ளை கட்டிக்கொள்வான். இதை 'மந்திரக்கோடி' என்பார்கள். (ஆண்டாள் 'வாரணமாயிரம்' என்ற திருவாய்மொழியில் மந்திரக் கோடியைக் குறிப்பிடுகிறுள்.)

கலியாணப் பெண்ணைத் தலையிலிருந்து கால்வரையிலும் மூடிப் பிள்ளையிடம் அழைத்து வருவார்கள். அவள் மாப்பிள்ளையின் முகத்தைப் பார்க்காமல் குடையினுல் தன் முகத்தை மறைத்துக்கொண்டு அவனிடம் பூமாலை ஒன்றைக் கொடுப்பாள். அதை மாப்பிள்ளை வாங்கிப் போட்டுக்கொள்வான். மந்திரம் சொல்லும்போது பெண்ணும் பிள்ளையும் பார்த்துக் கொள்வார்கள்.

அவர்களில் பெண்ணுக்குக் கணவன் தாலி கட்டுவதில்லை. தகப்பனுர் ஆண்பிள்ளைகளுக்குப் பூணூல் போடுவது போலவே பெண்களுக்கும் தாலி கட்டுவார்! அப்புறம் தாரை வார்த்தல்; பாணிக்கிரகணம். இப்போது கலியாணப் பெண் இடது கையில் கண்ணுடியுடன் வலது கையை நீட்டி விரல்களை மடக்கிக் கொள்வாள். மடக்கிய விரல்களைப் பிரித்து மாப்பிள்ளை கையைப் பிடிப்பான். கட்டை விரலைப் பிடித்தால் பிள்ளை பிறக்குமாம்; மற்ற விரல்களைப் பிடித்தால் ஆண் பெண் குழந்தைகள் சமமாகப் பிறப்பார்களாம். பிறகு மணமக்கள் அக்கினியை வலம் வந்து ஸப்தபதி நடத்துவார்கள். நமக்குத் திருமாங்கல்யமே கல்யாணச் சின்னம். அவர்களுக்கு அப்படி இல்லை; ஸப்தபதி, தாரை வார்த்தல், பாணிக்கிரகணம் இவை முக்கியம். கலியாணச் சடங்குகள் முடிந்தபின்,

மாமனர் மாப்பிள்ளையின் கையைப் பிடித்துக்கொண்டு, "அப்பனே! என் குழந்தையை ஜாக்கிரதையாகக் காப்பாற்ற வேண்டும்" என்று வேண்டுவாராம். முதல் நாள் சடங்குகள் முடிந்தபின், மாப்பிள்ளை பெண்ணை அழைத்துக்கொண்டு தன் வீட்டுக்குப் போவான். மூன்று நாட்கள் அங்கே சில சடங்குகள் நடக்கும். அவைகளைத் தீட்சை நாட்கள் என்பார்கள். தம்பதிகள் இருவரும் சேர்ந்து பிரம்மசரிய தீட்சை ஏற்பார்கள். சிலர் ஒரு வருஷத்துக்கு மேலும் தீட்சை நடத்துவது உண்டு. தீட்சை நாள் அதிகமாக அதிகமாக அத்தனைக்கு அத்தனை நல்ல பிள்ளை பிறப்பானும். நான்காம் நாள் மங்கள ஸ்நானம். சில சடங்குகள் நடந்த பின் இருவரும் ஒரே கலத்தில் உண்பார்கள்.

நம்பூதிரிகளில் போதாயன சூத்திரக்காரர்களுக்குள் வேடிக்கையான வழக்கம் ஒன்று உண்டு. பெண்ணும் மாப்பிள்ளையும் குளத்தில் இறங்கிப் பானையின் வாயைத் துணியால் மூடி வலையாக உபயோகித்து மீன் பிடிப்பார்களாம். ஒரு பிரம்மசாரி வந்து, "பசுங்கன்றைப் பார்த்தீர்களா?" என்று கேட்பானும். மாப்பிள்ளை, "இதோ" என்று மீனைக் காண்பிப்பானும். பிறகு பெண்ணும் மாப்பிள்ளையும் எண்ணெய் தேய்த்துக் கொள்வார்கள். பெண் கணவனுக்குத் தலை வாரி விடுவாள்; சாயங்காலம் மாப்பிள்ளை பெண்ணின் தலையில் பூ வைப்பான். பிறகு கங்கணவிசர்ஜனம். இதோடு கலியாணம் முடிந்தது. பிள்ளைக் குழந்தை பிறந்தால் தான் 'புத்' என்னும் நரகத்திலிருந்து விடுபடுவோம் என்ற நம்பிக்கை இவர்களுக்கும் உண்டு. பிள்ளைப்பேறு அடைவதற்காகப் பல பெண்களை மணப்பார்கள்.

பத்திரிகையும் பொதுஜனங்களும்

பத்திரிகை வெளியிடுவது ஒரு வேடிக்கைதான்; ஆனல் விளையாட்டல்ல.

ஹாஸ்யத் துணுக்குப் போட்டால், ஜனங்கள் "இதென்ன, அசட்டுப் பிசட்டென்று இருக்கிறதே!" என்பார்கள்; அது போடாவிட்டாலும், "அப்பாடா! நமக்கு எட்டாத பெரிய விஷயமெல்லாம் போடுகிறுர்களே!" என்பார்கள். மற்றப் பத்திரிகைகளிலிருந்து எடுத்துப் போட்டாலோ, "தாங்களே எழுதுவதற்குச் சோம்பேறித்தனம்!" என்பார்கள்; அப்படிப் போடாவிட்டால், "சும்மா தங்கள் பெருமையைப் பீத்திக்கொள்வதுதான் இவர்களுக்கு வேலை!" என்பார்கள். வெளியிலிருந்து யாராவது கட்டுரை அனுப்பிப் பிரசுரிக்காவிட்டால், "உண்மை அறிவாளிகளைத் தூக்கிவிடமாட்டார்கள்!" என்று குறைகூறுவார்கள்; அப்படிப் போட்டால், "இதென்ன! சுத்த வறட்டு விஷயமெல்லாம் போட்டு நிரப்புகிறுர்கள்!" என்பார்கள்.

இதுவே எந்தப் பத்திரிகையிலிருந்தோ எடுத்ததுதானே என்று சந்தேகிக்கிறீர்களா? சந்தேகம் வேண்டாம்; அப்படியே எடுத்ததுதான்.

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

இந்திய ஸினிமாப் பத்திரிகை உலகத்திலே ஒரு புரட்சி உண்டாக்கியவர் பாபுராவ். வழவழவென்ற ஆர்ட் காகிதத்தில், சுடச்சுட ஸினிமா விஷயங்களை எழுதுகிறார். 'பிலிமிண்டியா'வில் கேள்விகளுக்கு அவர் எழுதிவரும் பதில்கள் நகைச்சுவையும் விறுவிறுப்பும் மிகுந்திருக்கின்றன. ஸினிமாபற்றி மட்டுமல்ல; வேறு விஷயங்கள்பற்றியும் அருமையாகப் பதில் தருகிறார்.

கே: நம் நாட்டுப் படங்களில் ஏன் பாட்டுக்களைக் கொண்டுவந்து திணிக்கிறார்கள்?

ப: கதை எழுதினவருடைய மானத்தைக் காப்பாற்றத்தான்.

* *

கே: மனிதன் எந்த வயசில் முட்டாள் தனத்தை விட்டு விடுகிறான்?

ப: முட்டாளுக்கு வயசே இல்லை. அவன் வளர்வதில்லை.

* *

கே: மூன்றாவது உலகயுத்தம் சமீபத்தில் வருமென்று நினைக்கிறீர்களா?

ப: இரண்டாவது உலகயுத்தமே இன்னும் நின்றபாடில்லையே!

* *

கே: இந்தக் காலத்தில் மிகச் சிறந்த வீர ரமணி யார்?

ப: புகழுக்கும் இரக்கத்துக்கும் அப்பால் வறுமைக்கும் துன்பத்துக்குமிடையே இல்லத்தைப் பாதுகாத்து வரும் சாமான்ய மனைத் தலைவி.

* * *

கே: ஹாஸ்யத்துக்கும் விநோதப் பேச்சுக்கும் வித்தியாசம் என்ன?

ப: ஹாஸ்யம் அர்த்தபுஷ்டியுடையது; விநோதப் பேச்சு வெறும் நீர்க்குமிழி.

கே: முதலே வேண்டியதில்லை; ஆனால் நல்ல லாபம் கிடைக்க வேண்டும்; இப்படி ஒரு தொழிலைச் சொல்லுங்கள்.

ப: அரசியல் வாதியாகலாமே! அதற்குத் தொண்டைப் பலம் மாத்திரம் இருந்தால் போதும்.

* * *

கே: பாவம் செய்தவன் மரணச் சமயத்தில் என்ன எண்ணுவான்?

ப: ஆயுள் அதற்குள் முடிந்து விட்டதே என்று துக்கப்படுவான்.

* *

கே: நம் முன்னோர்கள் நம்முடைய சினிமாப் படங்களைப் பார்த்தால் என்ன நினைப்பார்கள்?

ப: ஏண்டா அப்பா கல்யாணம் பண்ணிக் கொண்டு வாழ்ந்தோம் என்று இரங்குவார்கள்.

* *

கே: அமெரிக்காவில் நீங்கள் எதை அதிகமாக விரும்புகிறீர்கள்?

ப: நடுத்தெரு நாராயணனை. நாம் நீக்ரோவராக இல்லாத வரையில் நம்மை நேசிக்கும் ஆத்மா அவன்.

* *

கே: மணமகளுக்கும் கன்னிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: பழைய காலத்தில் இரண்டு வார்த்தைகளுக்கும் அர்த்தம் ஒன்று

காப்பிரைட்: பிலிமிண்டியா (ஆங்கிலம்: டிசம்பர் '48, ஜனவரி '49), பம்பாய்.

தான். இப்போதோ கிழட்டு விதவை கள்கூடப் புது மணப்பெண்ணுகிறார் கள்.

*   *

கே: நம் நாட்டுப் படத் தொழி லின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

ப: நம் தேசத்தின் நல்லதிருஷ் டத்தைப் பொறுத்தது அது. அந்த அதிருஷ்டமோ அரசியல் வாதியின் கையில் இருக்கிறது.

*   *

கே: வாழ்க்கை முழுவதும் அழகைப் புதுக் கருக்கு அழியாமல் வைத்திருக்க முடியுமா?

ப: ஸ்தூல சரீரத்தைக் கடந்து ஆத்மாவுக்குள் ஊடுருவி நிற்கும் அழகை வயசு குலைக்க முடியாது.

*   *

கே: வியாபாரிகளுக்குத் தேச பக்தி எப்போது உண்டாகும்?

ப: அரசாங்கமே வியாபாரம் செய்யப் புகும்போது.

*   *

கே: பெண்கள் ஏன் உங்களை முட்டாள்தனமான கேள்விகள் கேட்கிறார்கள்?

ப: விடையளிக்க ஒரு புருஷன் இருப்பதனுல்தான்.

*   *

கே: ஊர்களுக்கும் வீதிகளுக்கும் பெயரை மாற்றும் 'மவுசு' வளர்ந்து வருகிறதே; அதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: சுதந்தரம் அடைந்த புதிதில் ஏற்பட்ட பைத்தியம்.

*   *

கே: பெண்மணிகள் கோயி லுக்குப் போகும்போது அலங்கார மான ஆடைகளை அணிந்துகொள் வது ஏன்?

ப: கடவுளைப் பார்க்க முடியா தானுலும் பக்தர்களுக்குக் கண் இருக்கிறதே!

கே: அகில தேசத் துறையில் இந்தியாவுக்குச் சிநேகிதர்களே இல்லையே; ஏன்?

ப: சுதந்தரம் வந்த புதிதில் ஒரு நாடு குழந்தைத்தனமாக லட்சியங் களை எடுத்து வீசும்; பழைய பாவி கள் அதை விரும்புவதில்லை.

*   *

கே: இளங்காதலர் இருவர் மணம் புரிந்துகொள்ளப் போகிறார் கள். அவர்களுக்கு நீங்கள் என்ன உபதேசம் செய்வீர்கள்? பரஸ்பரம் எப்படி இருக்க வேண்டும்?

ப: பரஸ்பரம் காதல் பூண்டு நம்பவேண்டும். முகத்தில் புன்ன கையுடனும் அடியிடும்போது ஜாக் கிரதையாகவும் தங்கள் லட்சியத்தை நோக்கிக் கைகோத்து இணைந்து நடந்து செல்லவேண்டும்.

*   *   *

கே: ஒரு மனிதனுடைய மனைவி மலடியாக இருந்தால் அவளுக்கு நீங்கள் என்ன புத்திமதி கூறு வீர்கள்?

ப: இந்தியாவைப் போல அநாதைகள் மிகுந்த தேசத்தில் புத்திமதி சொல்லித்தான் ஆக வேண்டுமா?

*   *   *

கே: எத்தனை விதமான பொய் களை உங்கள் வாழ்க்கையில் நீங்கள் கண்டிருக்கிறீர்கள்?

ப: வழக்கப்பட்டுப்போன பொய், ராஜதந்திரப் பொய், குற்றமாகும் பொய்.

*   *   *

கே: சில படித்த பெண்கள் பணக்காரரிடம் தொங்கிக்கொண் டிருக்கிறார்களே; ஏன்?

ப: பணத்தைச் சம்பாதிப்பதை விட அதைக் கல்யாணம் பண்ணிக் கொள்வது சுலபமாக இருக்கிறது.

கே: பெண்கள் அலங்காரமாக ஆடை அணிவது ஆடவர் வியப்ப தற்காகவா? மற்றப் பெண்களின் பொருமையைத் தூண்டுவதற் காகவா?

ப: இரண்டுக்குமே. அதோடு கண்ணாடியில் அழகுபார்த்து மகிழ் வதற்குக்கூடத்தான்.

* * *

கே: கல்யாணம் நன்ருக நிறை வேறப் பணம் அவசியமென்று நீங் கள் நினைக்கிறீர்களா?

ப: எந்தக் காரியம் பூர்த்தியாக வேண்டுமானாலும் அது மிகவும் முக்கியமான வஸ்து. எல்லா வற்றையும் துறந்த துறவிகளுக்குக் கூடத் தூபம் போடப் பணம் வேண்டியிருக்கிறதே!

* * *

கே: படித்த ஆடவர்கள் ஏன் படித்த பெண்களையே கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிருர்கள்?

ப: கல்யாணம் என்பதே ஒரு பள்ளிக்கூடம். மனிதர்கள் அங்கே கற்றுக்கொள்கிருர்கள்; பிறருக்குக் கற்றுக்கொடுக்க நேரமில்லை.

* * *

கே: இந்திய ஜனநாயகத்துக்கும் அமெரிக்க ஜனநாயகத்துக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: அமெரிக்க ஜனநாயகம் பணங்காசின் ஆனந்த நடனம்; இந்திய ஜனநாயகமோ பிச்சைக் காரக் கூத்து.

* * *

கே: பணக்காரனுடைய ஒழுக்கத் துக்கும் ஏழையின் ஒழுக்கத்துக்கும் குறிப்பிடத்தக்க வித்தியாசம் ஏதே னும் உண்டா?

ப: பணக்காரனுக்கு நல்லொழுக் கம் இருந்தால் சிறப்பு; ஏழைக்கோ அது அவசியமாக இருக்கவேண்டும்.

கே: "பெண்கள் குறையற்றவர் களாகப் பிறக்கிருர்கள். ஆனால் அவர்கள் வாழ்க்கையையும் அழகை யும் மானத்தையும் குலைப்பவர்கள் ஆண்களே" என்று ஒரு பெண்மணி சொல்கிருள். அவள் சொல்வது எவ்வளவு தூரம் நியாயம்?

ப. பெண்மணிகள் குறையற்ற வர்களென்பது உண்மையன்று; ஆனால் ஆண்களைப்பற்றி அந்தப் பெண்மணி சொல்வது உண் மைக்குத் தூரமன்று.

* * *

கே: ஒருவன் தன் பெண்டாட்டி யிடம் பயப்படுவானானால், அவன் என்ன செய்யவேண்டும்?

ப: பக்கத்தில் இருக்கிற குளத் திலோ குட்டையிலோ விழவேண்டி யதுதான்.

* *

கே: ஆணைக்காட்டிலும் பெண் ஏன் சீக்கிரம் முதுமையை அடை கிருள்?

ப: மனிதகுலத்தின் திருஷ்டிக் குத் தன் பருவத்தை வழங்கிவிடு கிருள்.

* * *

கே: இந்தியாவில் அடிதடியை முதலில் சிருஷ்டித்தவர் யாராக இருக்கலாம்?

ப: மற்றவர் கையில் அதிகாரம் இருப்பதைக் கண்டு பொருமை கொண்ட அரசியல்வாதியாகத் தான் இருக்கவேண்டும்.

* *

கே: நீங்கள் இன்னும் எவ்வளவு காலம் ஜீவித்திருக்கலாம் என்று நம்புகிறீர்கள்?

ப: அதைப்பற்றி நான் கவலைப் படுவதேயில்லை. எனக்கு யார் உயிரைத் தந்தாரோ அவரைச் சார்ந்தது அந்தப் பிரச்னை.

கார்ட்டூன் கதம்பம்

ஹிட்லரிடம் கற்ற பாடம்
டச்சு
டச்சு
இந்தோனேஷியா
—'ப்ரீ இந்தியா'


பசுபபாதுகாபபுநிதி
இந்தியா
VINOD


அவசயம தான,
ஆனல, ஹிமசை
ஆசசே!
சென்னை மாகாணம்
பாஷாவாரி
மாகாணக
கமிஷன


’நமஸ்காரம். இதோடு நின்று விடாதீர்கள
என் கொள்கைகளையும் கொஞ்சம்
கடைப்பிடியுங்கள்’
ராஜகட்டம்
— ’மார்ச்’

கடைசிவரையில போராடும் சியாங்கேஷேக்
’சங்கர்ஸ் வீக்லி

பசித்த குழந்தைக்கு உடனே பால் கொடுப்பதா? அல்லது அட்டவணை வேண்டுமா? எது சரி?

வேளையும் உணவும்

மிரியம் இ. லோவென்பெர்க்

குழந்தைகளுக்கு எப்படி ஆகாரம் கொடுப்பது என்று இந்தக் காலத்தில் அநேகம் தாய்மார்களுக்குப் புரிவதில்லை. நான்கு மணிக்கு ஒரு தடவைதான் கொடுக்கவேண்டும் என்று சிலர் சொல்லக் கேட்டிருப்பார்கள். இந்த விஷயத்தில் குழந்தைகள் தாங்களே சமாளித்துக்கொள்ளும் என்று வேறு சிலர் சொல்லியும் கேட்டிருக்கலாம். அதனுல்தான் இந்தக் கலவரம்.

ஓர் உதாரணம்: பிறந்து கொஞ்ச நாள் வரையில் ஒரு குழந்தை மணிக்கு மணி கத்திக்கொண்டிருந்ததாம். குழந்தை பசியினுல் அழுகிறதோ, வேறு ஏதாவது காரணமோ என்று தாய்க்குப் புரியவில்லை. அதுவோ, அவளுடைய முதல் குழந்தை! என்ன செய்வதென்று யாராவது சொன்னுல்தானே அவளுக்குத் தெரியும்!

"குழந்தை அழும்போதெல்லாம் பால் கொடுத்துப் பாருங்கள். அப்போது தெரியும்" என்ருர் குழந்தை வைத்தியர். அப்படியே செய்து பார்த்தாள். சில நாட்களுக்குப் பிறகு சுமார் இரண்டு மணிக்கு ஒரு தடவை குழந்தை நிஜமாகவே பாலுக்கு அழுகிறது என்று தெரிந்துகொண்டாள்.

விடியற்காலை குழந்தை விழித்துக்கொண்டு கத்துவதிலிருந்து கவனித்துவந்தாள். முன் இரவிலும் நடுராத்திரியிலும் குழந்தை விழித்துக்கொண்டு கத்துவது பாலுக்குத்தான் என்று தாய்க்குத் தெரிந்தது. புட்டியிலுள்ள இரண்டு அல்லது மூன்று அவுன்ஸ் பால் போதுமா என்றும் கவனிக்கச் சொன்னுர் வைத்தியர். "இல்லாவிட்டால் இன்னும் ஓர் அவுன்ஸோ இரண்டு அவுன்ஸோ சேருங்கள்; அப்போதுதான் ஒரு தடவைக்கு எவ்வளவு பால் குழந்தைக்குத் தேவை என்று நிச்சயமாகத் தெரியும். காலையில் முதல் முதல் கொடுக்கும்போது நான்கு அவுன்ஸ் வேண்டியிருக்கலாம். அப்புறம் ஒவ்வொரு வேளையும் இரண்டு அவுன்ஸே போதும். இப்படிக் கவனித்து வந்தால் குழந்தை வளர வளர அதற்கு எப்பொழுது ஆகாரம் தரவேண்டும், எவ்வளவு தரவேண்டும் என்று நீங்களே தெரிந்துகொள்வீர்கள். மாதம் ஆக ஆகக் குழந்தை பசியினுல் அழுவது குறைந்துகொண்டே வரும். அதற்கு ஏற்றபடி ஆகாரம் கொடுக்கும் வேளைகளை மாற்றிக்கொள்ளலாம்" என்றும் சொல்லியிருந்தார்.

சென்ற நான்கு வருஷங்களாக மின்னெஸோடாவில் உள்ள ரோசெஸ்டர் சிசுவைத்திய நிலையத்தில் இப்படித்தான் செய்து வருகிருர்கள். இதைக் கவனித்து நடக்

காப்பிரைட்: பேரெண்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம்: அக்டோபர் '48), 4600, டைவர்ஸி அவென்யூ, சிக்காகோ 39, யு. எஸ். ஏ.

கும்படி தாய்மாருக்கு அடிக்கடி சொல்லியும் வருகிறார்கள். எந்த எந்த வேளையில் ஆகாரம் கொடுப்பது என்று தீர்மானிப்பது தாயா, அல்லது குழந்தையா? இதுதான் பழைய முறைக்கும் புதிய முறைக்கும் உள்ள வித்தியாசம். 'குழந்தை பசித்து அழுவது இரண்டு மணிக்கு ஒரு தடவையா? மூன்று மணிக்கு ஒரு தடவையா? அல்லது நான்கு மணிக்கு ஒரு தடவையா?' என்று கண்டுபிடித்து அதற்கு ஏற்றபடி தாய் குழந்தையின் ஆகாரக் கிரமத்தை நிர்ணயிக்கிறாள். இதனால் குழந்தை, தாய் இரண்டு பேருக்கும் நிம்மதி.

அங்கே உள்ள டாக்டர்களும் நர்ஸுகளும் குழந்தைக்குத் தாய்ப்பால் தருவதுதான் நல்லதென்று சொல்கிறார்கள். அது தாய்மார்களுக்குச் சம்மதம் இல்லை என்றால், 'பீடிங் பாட்டிலை'த் தாயிடம் கொடுத்து அவளையே பால் கொடுக்கும்படி செய்கிறார்கள். பாட்டிலைக் குழந்தையின் வாயில் வைத்துவிட்டுப் போய்விடுவது என்ற பேச்சே அங்கே இல்லை. அநேக டாக்டர்களுக்கும் சரி, தாய்மார்களுக்கும் சரி, 'குழந்தை பசிக்கும்பொழுது இஷ்டப்படி சாப்பிட விட்டுவிட்டால் என்ன ஆகுமோ? குழந்தை சாப்பிட்டுப் பத்து நிமிஷத்திற்கெல்லாம் மறுபடியும் சாப்பிடுமோ? தேவைக்கு மேல் மிகவும் அதிகமாகச் சாப்பிடுமோ? மிகவும் குறைவாகச் சாப்பிடுமோ? குழந்தைக்கு எப்பொழுது பசிக்கிறது என்று நாம் தெரிந்து கொள்ள முடியுமா?' - இப்படியெல்லாம் பல சந்தேகங்கள் தோன்றலாம்.

அங்கே இவைகளையெல்லாம் நிவர்த்தித்திருக்கிறார்கள். லி. ஆண்டர்ஸன் ஆல்ட்ரிச், எடித் ஹ்யூவிட் என்னும் இரண்டு டாக்டர்கள் 668 குழந்தைகளைப் பற்றித் தங்கள் அநுபவங்களைச் சமீபத்தில் குறித்து வைத்திருக்கிறார்கள். அந்தக் குழந்தைகள் தங்களுக்கு வேண்டியபொழுது ஆகாரம் கொடுத்துப் பழக்கப்பட்டவை. அங்கே 1944, 1945 இந்த வருஷங்களில் பிறந்த குழந்தைகளின் பெற்றோர்கள் அந்தஸ்தில் பல திறப்பட்டவர்கள். ஆயிரக்கணக்கான சம்பளம் வாங்கும் உயர்ந்த உத்தியோகஸ்தர்களும் இருந்தார்கள்; அன்றாடம் கூலி வேலை செய்து பிழைக்கும் சாதாரண மனிதர்களும் இருந்தார்கள். அந்த 668-இல் ஏதோ ஒரு நூறு குழந்தைகளைப்பற்றிய குறிப்புக்களை எடுத்துப் பார்த்தாலே விஷயம் தெளிவாகும். 40 குழந்தைகள் பல மாதங்கள் வரை தாய்ப்பால் சாப்பிட்டு வளர்ந்தவை; மற்ற 60 குழந்தைகள் 'பீடிங் பாட்டி'லிலேயே வளர்ந்தவை என்று தெரியும்.

பலவீனமாகவோ குறை மாதத்தில் பிறந்தோ இருக்கும் குழந்தைகளுக்கு அங்கே பிரத்தியேகமான ஆகாரம் உண்டு. பெரும்பான்மையான குழந்தைகள் அங்கே நான்கு மணிக்கு ஒரு தடவை என்ற கணக்கில்தான் ஆகாரம் சாப்பிட்டு வந்தன.

பிரசவித்த ஒவ்வொரு ஸ்திரீயையும் அங்கே இருக்கும் வரையில் டாக்டர்கள் தினந்தோறும் போய்ப் பார்த்து வருவார்கள். குழந்தையின் வளர்ச்சியைப்பற்றியும் அவ்வப்போது தெரிவிப்பார்கள். தாய் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் தகுந்த பதில் சொல்லுவார்கள். அவளை வீட்டுக்கு அனுப்பும்

பொழுதும் இப்படியே விசாரித்துச் சில யோசனைகள் சொல்லுவார்கள்.

"இனிமேல் உங்களுக்குக் கவலை இராது. நிம்மதியாய்த் தூங்கிக் கொண்டிருக்கும்பொழுது பால் கொடுப்பதற்கென்று குழந்தையை எழுப்பவேண்டியிராது; பசியினால் குழந்தையும் கதறாது" என்று தாய்க்குத் தைரியமூட்டுவார்கள். சில நாட்களிலோ வாரங்களிலோ குழந்தை எப்போது பசியால் அழுகிறது என்று தானாகவே தெரிந்துவிடும். குழந்தைக்குத் தேவையான பால் எவ்வளவு என்ற ஒன்றுதான் தாய் கண்டுபிடிக்க வேண்டிய விஷயம்.

"ஏதாவது சந்தேகம் தோன்றினால் டெலிபோன் மூலம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். நாளைக்கு நர்ஸ் அங்கே வருவாள்" என்று சொல்லியனுப்புவார்கள். குழந்தையின் ஆகார விஷயமாய்த் தாய் புரியாமல் தவிக்கும்பொழுது இந்த நர்ஸுகள் இன்ன இன்னது செய்தால் சரி என்று தெரிவிப்பார்கள்.

அந்த வைத்திய நிலையத்தில் இருக்கும்போதே பிறந்த குழந்தை எப்படி இருக்கவேண்டும், போகப் போக எப்படி இருக்கவேண்டும் என்ற விவரம் அடங்கிய குறிப்பைத் தாயிடம் கொடுப்பார்கள். டாக்டரும் நர்ஸும் சொல்லாமல் விட்டுப்போன விவரங்களை அதிலிருந்து தெரிந்துகொள்ளலாம். குழந்தைக்கு ஒரு மாதம் ஆகும் வரையில் இது உபயோகமாயிருக்கும். அதற்குப் பிறகு ஒரு வயது வரையிலும் பிரதி மாதமும் குழந்தையை வைத்திய நிலயத்துக்குக் கொண்டுவந்து காட்டச் சொல்வார்கள். பிரதி மாதமும் குழந்தையைப் பரிசோதித்து வேறு வேறு குறிப்புக்கள் கொடுப்பார்கள். எந்தவிதமான ஆகாரம் கொடுக்கவேண்டும் என்றும் சொல்லுவார்கள். எப்பொழுது கொடுக்கவேண்டும், கொடுக்க வேண்டிய அளவு என்ன என்ற தகவல்களை அங்கே விசாரிக்க வேண்டியதில்லை. "பசி எடுக்கும் பொழுதெல்லாம் குழந்தைக்கு ஆகாரம்கொடுக்கலாம். கண்டிப்பான மணிக்கணக்குத் தவணை எதுவும் வேண்டியதில்லை" என்றே அந்த நிலயத்து டாக்டர்கள் சொல்லுவார்கள்.

டாக்டர் ஆல்ட்ரிச்சும் ஹ்யூவிட்டும் 100 குழந்தைகளைக் கவனித்துத் தெரிந்துகொண்ட விவரத்தைக் கீழே காணலாம்: "ஒரு மாதம் வரையிலும் 61 குழந்தைகள் மூன்றுமணிக்கு ஒருதரம் பாலுக்கு அழுதன. சாதாரணமாய் எல்லா டாக்டர்களும் நான்கு மணிக்கு ஒருதரம் ஆகாரம் கொடுப்பதே சரி என்று சொன்னாலும் 100 குழந்தைகளில் 25 குழந்தைகள் தாம் அப்படி நான்கு மணிக் கணக்கின்படி அழுதன. பத்துக் குழந்தைகளுக்கு இரண்டு மணிக்கு ஒருதரம் ஆகாரம் வேண்டியிருந்தது. இரண்டு குழந்தைகளுக்குத்தான் ஆகாரவேளை ஒரு நிலையாக இல்லை."

இந்த விவரங்கள் தாய்மார்களுக்குத் தைரியமூட்டும். ஒரு மாதம் ஆவதற்குள் குழந்தையே தன் ஆகார வேளைகளையும் அளவையும் நிர்ணயிக்கும் என்று இதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

இரண்டு மாதத்துக்குப் பிறகு ஏதோ சில குழந்தைகளுக்குத்தான் மூன்று மணிக்கணக்கு வேண்டியிருந்தது. அநேகம் குழந்தைகளுக்கு நான்கு மணிக்கு ஒருதரம் ஆகாரம் கொடுத்தாலே போதும் என்றும் தெரிந்தது. ஒரு

மாதத்தில் மூன்று மணிக்கு ஒரு தரம் சாப்பிட்ட குழந்தை இரண்டு மாதம் ஆனவுடன் அதிக அளவும் சாப்பிட்டது; நான்கு மணி நேரம் வரையில் அழாமலும் இருந்தது. மூன்று மாதத்தில் எல்லாக் குழந்தைகளும் அநேகமாய் நான்குமணிக் கணக்குக்கு வந்துவிட்டன. அதற்குப் பிறகு ஒரு நாளில் நான்கு தடவை ஆகாரம் கொடுத்தாலே போதும் என்ற நிலை ஏற்பட்டது. இதனால் இரவு நேரம் கழித்துப் பால் சாப்பிடும் வழக்கமும் ஒழிந்தது. எட்டு மாதம் ஆனதும் ஒரே ஒரு குழந்தைதான் இரவு பசித்து அழுததாம். அதற்குப் பிறகு நாளடைவில் பகலில் மூன்று வேளையே போதும் என்று தெரிந்தது. பன்னிரண்டு மாதம் ஆன குழந்தைகளில் 9 குழந்தைகளுக்குத்தான் நான்கு வேளை ஆகாரம் கொடுக்க வேண்டியிருந்தது.

இதிலிருந்து என்ன தெரிகிறது? ஆகாரம் கொடுக்கும் மணிக்கணக்கைக் குழந்தைகளிடமே விட்டு விடுவது நல்லது என்பதுதான். ஒரு மாதமான பிறகுங்கூட எல்லாக் குழந்தைகள் விஷயத்திலும் நான்கு மணிக்கணக்கை அநுசரித்தால் 100-க்கு 73 குழந்தைகள் ஆகார வேளைக்கு ஒரு மணிக்கு முன்னமேயே பசியினால் வாடும். அவைகளின் தாய்மார்கள் மிகவும் சங்கடப்படுவார்கள். ஒரு வயதான குழந்தையை அந்த வைத்திய நிலையத்துக்குக் கொண்டு வந்தால், இப்படி ஏதாவது தொந்தரவு உண்டா என்று தாயைக் கேட்பார்கள். ஒரு வயது வரையிலும் பசித்தபொழுதெல்லாம் தேவையான அளவு சாப்பிட்டுப் பழகிய குழந்தைகள்தாம் எந்த விதமான தொந்தரவுமின்றி வளர்ந்தனவாம்.

ஆகவே, "எப்பொழுது பசிக்கும், எவ்வளவு சாப்பிட வேண்டும் என்ற விஷயம் குழந்தைக்கே நன்றாய்த் தெரியும். பிறந்த குழந்தை சின்னஞ்சிறு பருவத்திலேயே கணக்காய் ஆகாரக்கிரமங்களை நிர்ணயித்துக்கொள்ளுகிறது" என்று நாம் உறுதியாகக் கொள்ளலாம். அதை அதன் கணக்கின்படி விட்டுவிட்டால் அதுவும் நன்றாய் வளரும்; நமக்கும் கவலை இல்லை.

குடிகாரன் சபதம்

ஒரு நாள் ஒரு குடியானவன் அளவுக்கு மீறிச் சாராயம் குடித்துவிட்டு வீட்டுக்கு வந்தான். குடிவெறியில் உள்ளே எரிந்துகொண்டிருந்த குத்துவிளக்கை அணைக்க 'உப்' என்று ஊதினான். அவன் மூச்சில் சாராயம் கலந்திருக்கவே அது 'குப்' என்று பற்றி எரிய ஆரம்பித்தது.

அவன் நடுநடுங்கிப் போனான்; "ஐயோ, சாமி! தப்புப் பண்ணிவிட்டேனே!" என்று கன்னத்தில் போட்டுக்கொண்டு, மனைவியைக் கூப்பிட்டு, "இந்தா, சீக்கிரம் ராமாயணப் புஸ்தகத்தைக் கொண்டுவா! ஆணையிடப்போகிறேன்" என்று மனைவியைப் பார்த்துச் சொன்னான்.

"அப்பாடா! இனிமேலாவது நம் புருஷன் குடிப்பழக்கத்தை விட்டொழிப்பான்" என்று அவளும் மகிழ்ச்சியுடன் ராமாயணத்தை எடுத்துவந்து அவன் எதிரே வைத்தாள்.

குடியானவன் அதன்மேல் கைவைத்து, "சாமீ! இதன் மேல் ஆணையாகச் சொல்கிறேன். இனிமேல் எரிகிற விளக்கை அணைக்கவே மாட்டேன்" என்று சபதம் செய்தான்.

'விவாக ரத்து' என்றாலே, 'ஹிந்து தர்மத்துக்கு ஆபத்து' என்று சிலர் கூறுகிறார்களே; அது சரியா?

ராவ் சிபார்சும் கௌடில்யரும்

பாரஸ் தீவான்

இந்திய சட்ட சபையில் 'டிராப்ட் ஹிந்து கோட்' பற்றிய விவாதத்தை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். ஜுன், 1941 - இல் ஹிந்து கோட் செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ராவ் கமிட்டியார் தமது முழு ரிபோர்ட்டையும் பிப்ரவரி 1947 - இல் சமர்ப்பித்தார்கள்.

இன்று நம் நாட்டிலுள்ள சம்பிரதாயவாதிகள் விவாக ரத்தை எதிர்க்கிறார்கள் என்பது உண்மை. அதனால்தான் சட்டசபையில் இந்த விவாதத்தை நிறுத்தியிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. ஆனால் நம் நாட்டிலுள்ள முற்போக்குச் சக்திகள் விவாக ரத்தை ஆதரிக்கின்றன. பரோடா ஸம்ஸ்தானம் 1931 - இலேயே விவாக ரத்துச் சட்டத்தை இயற்றியது. மதராஸ் ஆக்ட் 21 - 1933 - இன்படி நமது மாகாணத்திலுள்ள சில ஹிந்து ஜாதியாருக்கு விவாக ரத்து உரிமை உண்டு. 1934 - இல் பம்பாய் சட்ட சபையில் டாக்டர் கௌடு விவாக ரத்து மசோதாவைக் கொண்டு வந்தார். ஆதலால், ஹிந்து சமூகம் விவாக ரத்தின் அவசியத்தை உணர்கிறது என்பது தெளிவு.

பழங்காலத்திலிருந்து - வேத காலத்திலிருந்து - விவாக ரத்து நம்முடைய பழக்கங்களுக்கு மாறானது என்பதுதான் இதை எதிர்ப்பவர்களின் முக்கியமான வாதம். சுருதி ஸ்மிருதிகள் பெரும்பாலும் விவாக ரத்தைத் தடுக்கின்றன; ஒரு பெண்ணுக்கு இரண்டாவது கணவனை மறுத்திருக்கின்றன. ஆனால் சுருதிகாரரோ ஸ்மிருதிகாரரோ இதை அடியோடு எதிர்த்திருக்கிறார்கள் என்று சொல்லமுடியாது; ஹிந்து மதத்துக்கு விவாக ரத்தைப்பற்றி ஒன்றுமே தெரியாது என்றோ, இந்திய லட்சியத்துக்கும் வாழ்க்கை விதிகளுக்கும் இது முற்றும் மாறுபட்டது என்றோ சொல்லவும் முடியாது. சில ஸ்மிருதிகாரர்கள் விவாக ரத்தைத் தீவிரமாகக் கண்டித்திருப்பதிலிருந்தே, இது பழக்கத்தில் இருந்துவந்தது என்று தெரிகிறது. விவாக ரத்து இன்றுகூட இந்தியாவில் சில ஹிந்து வகுப்பாரிடையே பழக்கத்தில் இருக்கிறது.

'ஹிந்து மணம், தூய ஆத்மிகக் கட்டுப்பாடு' என்பது லட்சிய முறையிலே சரிதான்; விவகாரத்திலே அது ஒரு சமூகத் தேவையினால் ஏற்படும் பந்தனம்; தேவை ஏற்படும்போது அந்தப் பந்தனத்தை உதறி எறியவும் முடியும்.

விவாக ரத்து ஹிந்துக்களின் சட்டத்துக்கோ லட்சியத்துக்கோ புறம்பானது என்ற தர்க்கம் தவறு. கி. மு. மூன்றாவது நூற்றாண்டுக்கும் இரண்

காப்பிரைட்: ஸரிதா (ஹிந்தி: ஜனவரி '49), புது டில்லி.

டாவது நூற்றுண்டுக்கும் இடையிலே வாழ்ந்தவராகக் கருதப்படுகிற கௌடில்யர், "கணவன் வெளிநாடு சென்றிருந்தால், ஈவிரக்சமற்றவனுக இருந்தால், ராஜத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தால், நபும்ஸகனுக இருந்தால், மனைவியைக் கொல்ல விரும்புகிறவனுக இருந்தால், அத்தகைய கணவனை மனைவி துறந்துவிட முடியும்" என்று எழுதியிருக்கிறுர்.

டிராப்ட் ஹிந்து கோட், பாகம் 4, அத்தியாயம் 3, பிரிவு 3 - இல் இப்படிச் சொல்லியிருக்கிறது:

இந்தச் சட்டம் நிறைவேறுவதற்கு முன்போ பின்போ விவாகமான கணவனே மனைவியோ பின்வரும் காரணங்களைச்சொண்டு ஜில்லா கோர்ட்டிலோ ஹைகோர்ட்டிலோ மனுச் செய்துகொண்டு விவாக ரத்துப் பெற முடியும்;

(1) தகுந்த காரணம் இல்லாமல் கணவனே மனைவியோ ஐந்து வருஷ காலம் ஒருவரை மற்றவர் விட்டுப் போவது;

(2) மதமாற்றத்தால் யாராவது ஒருவர் ஹிந்துவாக இல்லாமலிருப்பது;

(3) கணவன் வைப்பாட்டியை வைத்துக்கொள்வது, அல்லது மனைவி வேறொருவனுக்கு வைப்பாட்டியாக இருப்பது, அல்லது வேசித்தொழில் செய்வது;

(4) ஐந்து வருஷமாக ஒருவருக்கு மூளைக்கோளாறு இருப்பது;

(5) தீராத குஷ்டவியாதி இருப்பது;

(6) ஐந்து வருஷ காலமாக, பிறருக்குத் தொற்றக்கூடிய மேகவியாதி இருப்பது;

(7) மற்றவரைக் கொல்லக் கூடிய அளவுக்கு இரக்கமற்றிருப்பது.

பிரிவு 29 - இன்படி பின்வரும் காரணங்களினுல் விவாக ரத்துப் பெற முடியும்:

(1) பிரதிவாதி நபும்ஸகனுக இருந்தால்;

(2) நிஷித்த கோத்திரத்தில் மணமாகியிருந்தால்;

(3) கணவனுக்கோ மனைவிக்கோ பைத்தியம் அல்லது மூளைக்கோளாறு இருந்தால்.

பார்க்கப்போனுல் டாக்டர் ராவின் டிராப்ட் கோடில் விவாக ரத்துக்குச் சொல்லிய காரணங்களில் பலவற்றைக் கௌடில்யரும் ஒப்புக்கொண்டிருக்கிறுர். விவாக ரத்தை ஆதரிக்கும் பராசருடைய சுலோகந்தான் பிரசித்தமாச்சே!

"கணவன் ஆண்மையற்றவனுக இருந்தால் மனைவி மறுமணம் செய்துகொள்ளலாம்" என்று நாரத ஸ்மிருதி சொல்லுகிறது. நாரதர் தர்மத்தை வற்புறுத்தாமல் பிள்ளைப் பேற்றுக்கே பெருமையளித்திருப்பது கவனிக்கத்தக்கது.

மநுவின் கொள்கைப்படி மனைவி காத்திருக்கவேண்டும்; தர்மகாரியமாய்ப் போன கணவனுக்காக எட்டு வருஷமும், கல்வி பயிலச் சென்றவனுக்காக ஆறு வருஷமும், யாத்திரையாகவோ சொந்த வேலையாகவோ போனவனுக்காக மூன்று வருஷமும் காத்திருக்க வேண்டும். கௌதமர் முதலியவர்களும் இப்படியே காத்திருக்கச் சொல்கிறுர்கள். ஸ்மிருதிகாரர்கள் விவாக ரத்தை எதிர்ப்பவர்களாக

இருந்தால், மனைவி கணவனை எதிர் பார்த்துக் காத்திருக்க வேண்டிய காலத்தை அவர்கள் இப்படிக் கணக்காகச் சொன்னதற்கு அர்த்தமே இல்லை. விவாக ரத்து இல்லையென்றால், மனைவி வாழ்நாள் முழுவதும் காத்திருக்க வேண்டியதுதானே?

காலத்தின் முன்னேற்றத்தை யாரும் தடுக்கமுடியாது. சுருதி ஸ்மிருதிகள் விவாக ரத்தைத் தடுத்தேயிருந்தாலுங்கூட, இந்தக் காலத்தில் நமது சமூகத்துக்கு அவசியமென்றால், அதைச் சட்டபூர்வமாக அமலுக்குக் கொண்டுவருவது தான் நன்மை.

ஹிந்துக்களுக்கு மட்டுமல்லாமல் பாரதநாட்டில் வாழும் அனைவருக்கும் பொதுவாக, வாழ்க்கையைப் பற்றிய சட்டங்கள் அமைந்தால் தான் உண்மையான ஜனநாயகம் நிலவி, நமது லட்சியம் நிறைவேறும். உளுத்துப்போன குட்டிச் சுவர்களை இன்று நாம் இடித்து அழிக்காவிட்டால், எதிர்காலத்தில் ஒளி வீசும் கதிர்களைக் காண்பது அரிதாகிவிடும்.

புகழ் பெற்றவரின் கடைசி வார்த்தைகள்

ஜூலியஸ் ஸீஸர் (தம்மைக் குத்திய புருட்டஸை நோக்கி): "நீகூடவா, புருட்டஸ்?"

டாண்டன் (தூக்குப் போடுபவனிடம்): "என் தலையை ஞாபகமாய் ஜனங்களிடம் காட்டு. அவர்கள் இதைப்போல் இனி எங்கே பார்க்கப் போகிறார்கள்!"

மேரி அந்த்வானெட் (தன் குழந்தைகளிடம்): "முடிவாக விடைபெறுகிறேன். உங்கள் தந்தையிடம் செல்கிறேன்."

ராபிலே: "திரையை விடுங்கள். கூத்து முடிந்தது."

மாடம் ரோலண்ட்: "ஏ சுதந்தரமே, உன் பேரால்தான் எத்தனை பாதகங்கள் நிகழ்கின்றன?"

சாக்ரடீஸ்: "க்ரிடோ, ஈஸ்குலாபியஸுக்கு நாம் ஒரு சேவல் கடன்பட்டிருக்கிறோமே; அதைத் தீர்த்துவிடு."

கார்டினல் உல்ஸீ: "அரசனுக்குச் செய்த சேவையில் பாதியைக் கடவுளுக்குச் செய்திருந்தேனானால், இந்தத் தலை நரைத்த பருவத்தில் என்னை அவர் கைவிட்டிருக்க மாட்டார்."

ஹாரியட் மார்ட்டினு: "நான் சிரஞ்சீவியாய் ஜீவித்திருக்க வேண்டும் என்பது என்ன அவசியம்?"

ஹாப்ஸ்: "என் கடைசி யாத்திரைக்குத் தயாராகிவிட்டேன் - இருட்கடலிலே குதிக்கப் போகிறேன்."

எலிஜபெத் ராணி: "என் சகல சொத்துக்களும் இன்னும் ஒரு நிமிஷத்துக்குத்தான்."

மகாத்மா காந்தி: "ஹா ராம்."

புத்தரின் சிஷ்யர்கள்

ஸுதாமயீ ஸேன்குப்த

"பிட்சுக்களே, என் சிஷ்யருள் புத்திமான்களிலே சிறந்தவன் ஸாரிபுத்திரன்; சித்தி பெற்றவரிலே சிறந்தவன் மகா மௌத்கல்யாயனன்" என்று அருளினார் புத்த பகவான். அந்த இரண்டு பேரின் அஸ்திகள் அடங்கிய அரிய பேழைகளை ஸாஞ்சி, ஸத்தாரா என்ற இடங்களில் உள்ள ஸ்தூபங்களிலிருந்து பிரிட்டிஷார் எடுத்துச் சென்றிருந்தார்கள். அவை இப்போது லண்டனிலிருந்து திரும்பிவிட்டன. அவற்றைத்தான் சமீபத்தில் பண்டித நேரு கல்கத்தா சென்று மகாபோதி சங்கத்துக்கு அளித்தார். அந்த இரண்டு சிஷ்யர்களின் வரலாறு இது. (படங்கள்: 'ஓரியெண்ட்')

ஸாரிபுத்திரன், மௌத்கல்யாயனன் என்ற இருவரும் சிறு வயதிலிருந்து நெருங்கிப் பழகினவர்கள். இரண்டு பேரும் ஒரே நாளில் அடுத்து அடுத்துள்ள ஊரில் பிறந்தவர்கள். ஒரு நாள் அவர்கள் ஏதோ நாடகத்துக்குப் போய் வந்தார்கள். அதைப் பார்த்த பிறகு அவர்களுக்கு வாழ்க்கையில் வெறுப்புத் தட்டிவிட்டது. வீட்டை விட்டுக் கிளம்பிக் குருவைத் தேடி அலைந்தார்கள். முதலில் அவர்களுக்கு ஸஞ்சயர் குருவாக இருந்தார். அவரிடம் அவர்களுக்குத் திருப்தி ஏற்படவில்லை. பாரத தேசம் முழுதும் சுற்றினார்கள். கடைசியில் இரண்டுபேரும் வேறு வேறு திக்காகப் புறப்பட்டுப் போனார்கள்.

ஒரு நாள் ஸாரிபுத்திரன் ராஜகிருகம் என்ற ஊரில் போய்க்கொண்டிருந்தான். அப்போது தெருவில் புத்த சங்கத்தைச் சேர்ந்த அஸ்ஸஜீ என்ற பிட்சு ஏதோ ஒரு சுலோகத்தைச் சொல்லிக்கொண்டே போனான். அதைக் கேட்டதும் ஸாரிபுத்திரனுக்கு, 'நாம் இத்தனை நாளாகத் தேடின பொருள் கிட்டும்' என்ற நம்பிக்கை உண்டாயிற்று. உடனே அவன் பௌத்தனானான். மௌத்கல்யாயனனுக்கும் சொல்லி அனுப்பினான். புத்தரே நேரில் இருந்து அவர்களைத் தம்முடைய பிரதான சிஷ்யர்களாக ஏற்றுக்கொண்டார். அவர்கள் இரண்டு பேரும் புத்தரைவிட வயதில் பெரியவர்கள், புதிதாக வந்தவர்கள்; இப்படி உடனே முன்னுக்கு வந்துவிட்டது மற்றப் பிட்சுக்களுக்குப் பொறுக்கவில்லை. இதை அறிந்த புத்தர், "இவர்கள் இதற்காக எத்தனை ஜன்மம் எடுத்து எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறார்கள் தெரியுமா?" என்று பிட்சுக்களைச் சமாதானப்படுத்தினார்.

பிறகு ஸாரிபுத்திரனையும் மௌத்

காப்பிரைட்: ப்ரபாஸீ (வங்காளம்: டிசம்பர் '48), கல்கத்தா.



ஸத்தாரா ஸ்தூபம்

கல்யாயனனையும் சங்கத்தில் சீர்கேடு நேராதபடி கவனித்துக் கொள்ளச் சொன்னார். அவர்களும் தங்களால் முடிந்தவரை அதைப் பாதுகாத்து வந்தார்கள். புரியாத விஷயங்களைக் கூட எளிதில் விளங்கும்படி சொல்லும் திறமை ஸாரிபுத்திரனுக்கு உண்டு. ஒரு சிறுவனுக்கு அவனிடம் உபதேசம் பெறவேண்டுமென்று



ஸாரிபுத்திரன் அஸ்திப் பேழை
(ஸத்தாரா)

ஆசை. அந்தப் பையன் வீட்டார் எத்தனையோ தரம் ஸாரிபுத்திரனுக்குப் பிட்சை செய்து வைத்திருந்தார்கள். ஆனால் சங்க விதிப்படி ஒரு சிஷ்யனுக்குமேல் உபதேசம் செய்யக்கூடாது. அதனால் பையனுடைய வேண்டுகோளுக்கு அவன் இணங்கவில்லை. புத்தருக்கு இது தெரிந்தது. அவர் சம்மதிக்கவே



மௌத்கல்யாயனன்
அஸ்திப் பேழை (ஸத்தாரா)

சிறுவனைச் சிஷ்யனாக ஸாரிபுத்திரன் ஏற்றுக்கொண்டான்.

ஒரு சமயம் ஸாரிபுத்திரனுக்கு வயிற்று வலி பொறுக்க முடியவில்லை. உள்ளிப்பூண்டு தின்றால் அது நீங்கும் என்று அவனுக்குத் தெரியும். ஆனால் சங்க விதிப்படி அதைச் சேர்த்துக்கொள்ளக் கூடாதே, என்ன செய்வது? இப்போதும் புத்தர் நேரில் வந்து, “மருந்தாகச் சாப்பிடலாம்; பரவாயில்லை” என்று அநுமதி கொடுத்தார்.

ஏழை எளியவர் என்றால் அவர்கள்மேல் அவனுக்கு அதிக இரக்கம். அவர்களுக்காகப் பாடுபடுவதுதான் அவன் வேலை. ஆனால் தான் அப்படி உபகாரம் செய்தது மறு நிமிஷமே அவனுக்கு நினைவு இராது. ஒரு நாள் யாரோ ஒரு பிராம்மணன் சங்கத்தில் சேர்ந்து பிட்சுவாக வேண்டுமென்று வந்தான். ஆனால் அவனை எந்தப் பிட்சுவும் மதிக்கவில்லை. அவன் மனம் நொந்து அங்கேயே பட்டினி கிடக்க ஆரம்பித்தான். புத்தர் இதைக் கவனித்தார்; “என் அவனை யாரும் சேர்த்துக் கொள்ளவில்லை?” என்று அவர்களைக் கேட்டார். அவர்கள், “சங்க விதிப்படி முன்னால் நமக்கு ஏதாவது நன்மை செய்திருப்பவர்களைத்தானே சேர்த்துக்கொள்ள முடியும்? இவன் அப்படி ஒன்றும் செய்திருப்பதாகத் தெரியவில்லையே?” என்றார்கள். அப்போது ஸாரிபுத்திரன் அங்கே வந்து, “ஒரு நாள் எங்கேயோ பிச்சை எடுக்கப் போனேன். பசி தாங்க முடியவில்லை. அப்போது இந்தப் பிராம்மணன் ஒருபிடி சாதம் போட்டான். அது என் வயிற்றுக்குப் போதவில்லை. இருந்தாலும் அவனுக்கு நல்ல எண்ணம் உண்டு என்று தெரிந்தது” என்றான். பிறகு புத்த

ரின் கட்டளைப்படி ஸாரிபுத்திரன் அந்தப் பிராம்மணனைச் சங்கத்தில் சேர்த்துக்கொண்டான்.

சங்கக் கட்டிடம் சுத்தமாக இருக்கவேண்டுமே என்று இரவு பகல் விடாமல் கவனித்து வருவான். "பிட்சுக்கள் வெளியே போயிருக்கும்போது யாராவது வந்து பார்த்துவிட்டு, 'இதுதான் புத்த சங்கத்தின் லட்சணமோ?' என்று சொல்லப் போகிறார்களே" என்றெல்லாம் கவலைப்படுவான். அசுத்தம் இருந்தால், தானே அதைக் கழுவி விடுவான்.

தன் முதல் குருவான ஸஞ்சயரையும் தனக்கு நல்வழி காட்டிய அஸ்ஸஜீ என்ற பிட்சுவையும் அவன் மறக்கவேயில்லை. இரவில் படுக்கப் போவதற்குமுன் அவர்கள் இருக்கும் திக்கு நோக்கி வணங்குவான். அவனுக்குப் பிட்டு என்றால் மிகவும் பிடிக்கும். ஆனால் சங்கத்தில் சேர்ந்ததும் அந்த ஆசையை அடியோடு விட்டுவிட்டான்.

மௌத்கல்யாயனனுக்கு அற்புத சித்திகள் கைகூடின. பிட்சுக்களில் யாராவது சங்கவிதியை மீறினால் உடனே எங்கிருந்தோ பூதாகாரமாக அவர்கள் எதிரில் வந்து தோன்றுவான். அவர்கள் பயந்து போய் அது முதல் நேர்மையாக நடந்துகொள்வார்கள். அவனும் நல்ல ஞானியே. ஒரு சமயம் புத்தர் கபிலவாஸ்துவில் சாக்கியருக்கு உபதேசம் செய்துகொண்டிருந்தார். நடுவில் அவருக்குக் களைப்புத் தட்டியது; மேலே பேசும்படி அவனுக்குக் கட்டளையிட்டார். அவனும் அவர் எடுத்துக்கொண்ட விஷயத்தைப்பற்றித் தெளிவாகப் பேசி முடித்தான். புத்தர் அவனை மிகவும் பாராட்டினார்.



ஸாஞ்சி ஸ்தூபம்

புத்தர் 'மகாபரிநிர்வாணம்' அடைவதற்குச் சில மாதங்களுக்கு முன், தனக்குச் சாவு நெருங்கிவிட்டது என்று ஸாரிபுத்திரனுக்கு ஞானதிருஷ்டி மூலம் தெரிந்தது. அதற்கு ஏழு நாள் முன்னாலேயே புத்தரிடம் விடை பெற்றுக்கொண்டு தன் தாயைக் காணப் புறப்



ஸாரிபுத்திரன் அஸ்திப் பேழை

பட்டான். அவன் தம்பிமார் சங்கத்தில் சேர்ந்தாலும் தாய் மட்டும் வீட்டிலேயே இருந்தாள்.

இப்போது பிள்ளை மறுபடியும் கிருகஸ்தனாகிவிட்டான் என்று எண்ணிக்கொண்டு அவள் மகிழ்ச்சியடைந்தாள்; அவனைத் தடபுடலாக வரவேற்கப் போனாள். ஆனால்



மௌத்கல்யாயனன் அஸ்திப் பேழை (ஸாஞ்சி)

பிள்ளை மாறவில்லை என்று தெரிந்ததும் அவளுக்கு அவன்மேல் வெறுப்புத் தட்டிவிட்டது. வந்ததும் வாராததுமாக ஸாரிபுத்திரனுக்கு ஜுரம் கண்டது. படுத்த படுக்கையாகக் கிடந்தான். அப்போது அவன் சகோதரன் சுந்தனுடன் இந்திரன் பிரம்மா முதலான தேவர்களும் இருந்துகொண்டு அவனுக்குப் பணிவிடை செய்தார்களாம்! இதைப் பார்த்த பிறகுதான் அவளுக்குப் பிள்ளையின் மகிமை தெரிந்தது. கடைசியில் அவளும் சங்கத்தில் சேர்ந்தாள்.

பிறகு ஸாரிபுத்திரன் பிட்சுக்களை அழைத்து, "இதுவரை உங்களுக்கு ஏதாவது தீங்கு செய்திருக்கிறேனா?" என்று கேட்டான். எல்லாருக்கும் அவனிடத்தில் அதிக அன்பு; "அப்படி ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லையே" என்றார்கள். அப்போதுதான் அவனுக்கு நிம்மதி ஏற்பட்டது. மறு நாள் கார்த்திகைப் பௌர்ணமி; அன்று பொழுது விடியும் சமயம் அவன் நிர்வாண நிலை அடைந்தான்.

தகனக் கிரியைகள் முடிந்ததும் அவன் சகோதரன் அவனுடைய அஸ்தி, பிட்சா பாத்திரம், சீவர ஆடை இவற்றைச் சிராவஸ்தி நகருக்கு எடுத்துச் சென்றான்.

அதற்குப் பதினைந்தாம் நாள் அமாவாசை அன்று மௌத்கல்யாயனனும் உயிர் நீத்தான். பௌத்த மதப் பிரசாரம் செய்வதில் அவன் மகா சமர்த்தன். அதைக் கேட்டுவிட்டுப் பிறசமயத்தைச் சேர்ந்தவர்கள் பௌத்த மதத்தைத் தழுவ ஆரம்பித்தார்கள். அதனால் தங்கள் பலம் குன்றுவதைக் கண்டு அவனுடைய விரோதிகள் எல்லாம் ஒன்று சேர்ந்தார்கள். அப்போது மௌத்கல்யாயனன் காலசிலா என்ற இடத்தில் ஒரு குகையில் தவம் செய்துவந்தான். அவர்கள் அதைச் சூழ்ந்துகொண்டு அவனைப் பிடிக்க எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தார்கள். எப்படியோ ஆறு நாள் தப்பித்துக்கொண்டான். ஆனால் ஏழாம் நாள் அவர்கள் கையில் சிக்கிவிட்டான். குற்றுயிரும் குறையுயிருமாக அவனை அடித்துப்போட்டுப் போய்விட்டார்கள். பிரக்ஞை வந்ததும் மிகவும் சிரமப்பட்டுப் புத்தர் எதிரே வந்து வணங்கினான். அங்கேயே உயிர் போய்விட்டது.

முன்னே ஒரு பிறப்பில் மனைவியின் சொல்லைக் கேட்டுக்கொண்டு அவன் தன் குருட்டுத் தாய் தந்தையர்களை நயவஞ்சகமாகக் கொன்றானம்; அதனால்தான் இப்படி நேர்ந்தது என்று சொல்கிறார்கள்.

'கடவுளை நம்புகிறேன்'

ஜெர்மனியில் கொலோன் நகரில் கத்தோலிக்க மாதா கோயில் ஒன்று இருக்கிறது. அதில் யுத்தகாலத்தில் யூதர்கள் அடைக்கலம் புகுந்தார்கள். கோயிலின் உட்புறச் சுவரில் இந்த வாக்கியம் செதுக்கியிருந்தது சமீபத்தில் தென்பட்டது: 'வெயில் காயாதபோதும் சூரியனை நம்புகிறேன். கடவுள் மௌனமாயிருக்கும்போதும் அவரை நம்புகிறேன். அன்பு புலப்படாதபோதும் அதை நம்புகிறேன்.'

—மகளிர் டைஜெஸ்ட்.

சிறு கதை:

ஓடிப்போன ஆசாமி

கொடவடிகன்டி குடும்ப ராவ்

'கதைக்குக் கால் உண்டா?' என்பார்களே; அதன் கருத்து, நம்பமுடியாமல் இருக்கவேண்டும் என்பது அல்ல. நம்பமுடியாதது நடந்தால்கூட எப்படி இருக்கும் என்பதை நம்பும்படி எழுதினுல், அதை அநுபவிக்கவேண்டும்; நடக்குமா, நடக்காதா என்று வறட்டு விவாதம் புரியக்கூடாது. இதுவே கருத்து. அத்தகைய கதைகளில் ஒன்று இது. ஆசிரியர் பல நாளாகச் சிறுகதைகள் எழுதிப் பெயர் பெற்றவர்.

யாரோ ஒரு கிழவி செத்துப் போய்விட்டாள். யசோதைச்கு ரூ. 30,000 பெறுமானமுள்ள ஆஸ்தி கிடைத்தது. அவளுக்குத் தாய் இல்லை; தகப்பனுர் இருக்கிருர். இந்த ஆஸ்தி வராவிட்டாலும், சாப்பாட்டுக்கு ஒன்றும் குறைவில்லை. இது வந்தவுடன் அவளிடம் ஒரு மாறுதலும் ஏற்படவில்லை. அவளுக்கு இருக்கும் குறையைத் தெய்வந்தான் தீர்த்து வைக்கவேண்டும்.

ஆஸ்தி வந்ததற்காக அவளை எல்லாரும் விசாரித்ததைப் பார்த்தால், சந்தோஷம் அவளுக்கா ஊராருக்கா என்று சந்தேகிக்கும்படி இருந்தது; ஆனுல் சமூகத்தில் தன் மதிப்பு உயர்ந்துவிட்டது என்று மட்டும் அவள் அறிந்துகொண்டாள். அதற்கு அவளுடைய மாமனும் காரணம்.

"உனக்கு என்ன குறைச்சல்? ஆஸ்தி வந்துவிட்டது. நீ இனிமேல் பிறத்தியாரை இழிவாகப் பேசலாம். இன்னும் என்ன என்னவோ வழியில் எல்லாம் பணத்தைச் செலவழிக்கலாம்; தெரிந்ததா?" என்ருன் மாமன்.

"ஆஸ்தியை எல்லாம் கண்டபடி செலவழித்தவன் நீ. உனக்குத்தான் அந்தச் சங்கதி நன்ருகத் தெரிந்திருக்க வேண்டும்" என்ருள் யசோதை.

"அதற்கு என்ன சந்தேகம்? பணத்தைச் செலவழிப்பதில்தான் மதிப்பு இருக்கிறது. உன்னிடம் ஆயிரம் ரூபாய் இருந்தால் அதைக் கொண்டு உனக்கு வேண்டியதை வாங்கிக்கொள்ளலாம்; அதோடு நின்ருல் பிரயோஜனமில்லை. கண்டபடி செலவழிக்கத் துணிகிறபோது தான் அதன் மதிப்பு உனக்குத் தெரியும். குடி, கொலை, கொள்ளை இவைகளை ஏழைகள் செய்தால் குற்றம்; பணக்காரர் செய்தால் பெருமை!"

காப்பிரைட் : பாரதி (தெலுங்கு : வெள்ளிவிழா மலர், டிசம்பர் '48), சென்னை.

யசோதைக்கு மாமனின் பேச்சுப் பிடிக்கவில்லை. அவனுக்குத் தெரியாத கெட்ட பழக்கம் இந்த உலகத்திலேயே இல்லை. பேச ஆரம்பித்தால் விடமாட்டான். குதர்க்க வாதம் செய்வதில் கெட்டிக்காரன்.

"உலகம் என்றால் நீ மட்டுந்தான் என்று நினைத்துக்கொண் டிருக்கிறாயோ? போதும், உன் பேச்சு!" என்று சொல்லி யசோதை எழுந்து போய்விட்டாள். விஷயத்தை அதோடுவிட இஷ்டமில்லாமல், லட்சுமீகாந்தம் நேராகத் தன் அத்திம்பேரிடம் போய், "என்ன அத்திம்பேரே! யசோதைக்கு வந்த சொத்தின்மேல் யாரோ வழக்குத் தொடுத்திருக்கிறார்களாமே; வாஸ்தவமா?" என்றான்.

"வக்கீலை விசாரித்தேன். அவர்களுக்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்று சொன்னார். அது கிடக்கட்டும். ஏதோ யசோதைக்குக் கொஞ்சம் நல்ல காலம் தலை காட்டுகிறது. ஓடிப்போன அவள் புருஷனும் வந்துவிட்டால் நன்றாக இருக்கும். புருஷன் இல்லாத பிழைப்பு என்ன பிழைப்பு?" என்று சலமையா வருத்தத்துடன் சொன்னார்.

"அதென்ன பிரமாதம், அத்திம்பேரே! அந்த விஷயத்தை என்னிடம் ஒப்பித்துவிடுங்கள்; ஏழு சமுத்திரத்தையும் குடைந்தாவது சிண்டைப் பிடித்து அவனை இழுத்து வந்துவிட மாட்டேனா?" என்றான் காந்தம்.

"இழுத்து வருகிற மூஞ்சியைப் பார்! போன தடவை போய் ஒரு நானூறு ரூபாய் தொலைத்தாகி விட்டது. இந்த வருஷக் குதிரைப் பந்தயத்துக்கு அடி போடுகிறாயோ?" என்றார் சலமையா.

"சத்தியமாக—"

"போதும், உன் சத்தியம்! உன்னை யார் நம்புவார்கள்? உன்னிடம் ஓர் ஓட்டைச் சல்லியும் கொடுக்கமாட்டேன்."

சலமையா இப்படிச் சொல்லியும் காந்தத்துக்கு ரோஷம் வரவில்லை. யார் என்ன சொன்னாலும் துடைத்துவிடும் பிறவி அவனுடையது.

யசோதைக்கு ஆஸ்தி வந்தவுடன் அதை எப்படிக் கைப்பற்றுவது என்று காந்தம் மூளை குழம்ப யோசித்தான். தான் அவளைக் கல்யாணம் செய்துகொண்டு விடலாமா என்ற யோசனையும் ஒரு நிமிஷம் வந்தது. பிறகு அது செல்லாது என்று தெரிந்துகொண்டான். அவளை மெதுவாகத் தன் வலையில் வீழ்த்தி, தானே சொத்துக்கு மானேஜர் ஆகலாமென்று மனப்பால் குடித்தான். யசோதை தனியாக இருக்கும் சமயம் பார்த்து அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். தன் திவ்வியமான யோசனைகளை நிதானமாகச் சொன்னான்:

"சொத்து வந்தால் ஆகிவிட்டதா? அதை யார் பார்த்துக்கொள்வது? ஐம்பத்தைந்து வயதான இந்தக் கிழவர் எத்தனை நாளைக்குச் சாசுவதம்? இவருக்குப் பின்னால் உன் கதி என்ன? இத்தனை ஆஸ்தி இருந்தும் புருஷனும் குழந்தைகளும் இல்லற சுகமும் இல்லாமல் எத்தனை நாளைக்கு இப்படி இருப்பாய்? மறுபடியும் கல்யாணம் செய்துகொள்ளாவிட்டாலும், ஆதரவுக்கு யாராவது வேண்டாமா? இதில் உலகம் சொல்வதற்கு என்ன இருக்கிறது? அவரவர் காரியம் அவரவருக்கு."

கடைசியில் யசோதை, "மாமா, நீ இப்படியெல்லாம் பேசாதே;

மோசமாக இருக்கிறதே! இனிமேல் யாருக்கும் இந்த மாதிரி யோசனைகள் சொல்லாதே!'' என்று எழுந்து போனாள்.

'இவள் வெறும் பேச்சுக்கு மசிகிறவள் அல்ல' என்று நினைத்த காந்தம் அவளை எட்டிப் பிடித்தான். அவள் கூச்சலிட்டாள். நடுநடுங்கிப் போய்க் காந்தம் ஓடிவிட்டான்.

ஒரு நாள் இரவு அவன் பெட்டியுடன் ரெயிலேறிவிட்டான். அவனுக்கு 'ஆகி வந்த' இடம் புனா. அங்கே நடக்கும் குதிரைப் பந்தயம் அவனுடைய தலையெழுத்தைப் படித்துக் காட்டும் பூதக்கண்ணாடி போன்றது. தானாக முயன்று ஒரு காரியத்தைச் செய்து அதன் மூலம் லாப நஷ்டம் அடைவதைவிட விதியின் கைப்பொம்மையாக ஆடுவது அவனுக்கு மிகவும் இஷ்டம். யசோதை விஷயத்தையே மறந்துவிட்டுக் குதிரைப் பந்தயத்தில் ஈடுபட்டான். ரூபாய் முந்நூறு லாபம் வந்தது. அதை அடைவதற்கே தன்னை ஈசுவரன் புனாவுக்கு அனுப்பியதாக நினைத்து அவன் மகிழ்ந்தான். எதிர்பாராமல் ஏற்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் யசோதையின் ஞாபகம் வந்தது.

காந்தம் ஒரு நாள் ஹோட்டலில் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது ஓர் ஆசாமி அவனிடம் பேச்சுக் கொடுத்தான். அந்த ஆளுக்கு வயது முப்பது இருக்கும். அதே ஹோட்டலில் அவனைக் காந்தம் ஒன்று இரண்டு முறை பார்த்திருக்கிறான். அவன் தங்கு தடையில்லாமல் மகாராஷ்டிரம் பேசியபோது, 'இந்த மராட்டியர் சில சமயங்களில் ஆந்திரர்களைப் போலவே இருக்கிறார்கள்' என்று காந்தம் நினைத்ததுண்டு. அந்த மனிதன் இன்று, "உங்கள் ஊர் எது?'' என்று சுத்தத் தெலுங்கில் கேட்டான்.

"அடே! நீ தெலுங்கனா? இங்கே என்ன செய்கிறாய்? எத்தனை வருஷமாக இருக்கிறாய்?'' என்று கேள்விகளை அடுக்கினான் காந்தம்.

"என் பெயர் தட்சிணாமூர்த்தி. சிறுவயதிலேயே தாய்தந்தையரை இழந்துவிட்டேன். என் மனிதர்கள் என்று யாருமே இல்லை. பம்பாயில் இருந்தேன். கூலிவேலை முதல் எல்லா வேலைகளும் செய்திருக்கிறேன். இப்போது ஒரு மாதமாக வேலையே இல்லாமல் இருக்கிறேன்'' என்று அவன் சொன்னான். தட்சிணாமூர்த்தி சொன்ன 'டிப்'புகள் காந்தத்துக்கு மிகவும் பயன்பட்டன. குதிரைப் பந்தயத்தில் நல்ல லாபம் வந்தது.

"எனக்கும் உனக்கும் சரியான ராசி, தம்பீ! உனக்கு ஏதாவது உபகாரம் செய்யவேண்டுமென்று எனக்கு ஆசையாக இருக்கிறது. என் கையில் தம்பிடி இல்லாவிட்டாலும் என்னை நம்பி மோசம் போனவர்களே இல்லை'' என்று காந்தம் தட்சிணாமூர்த்திக்கு உபசாரம் சொன்னான். தட்சிணாமூர்த்தி சிரித்தான்.

உண்மையில் தட்சிணாமூர்த்திக்குக் கடுகளவாவது உபகாரம் செய்ய வேண்டுமென்கிற எண்ணம் காந்தத்துக்குக் கிடையாது. வாயில் வந்ததைச் சொல்லிவிட்டான். அவ்வளவுதான். ஆனால் அன்றிரவு ஓர் அரிய யோசனை உதித்தது. பிறகு தூக்கமே வரவில்லை. தட்சிணாமூர்த்தியை நல்ல பேச்சில் திருப்பி, இவன்தான் யசோதையின் புருஷன் என்று கொண்டுபோய் நிறுத்திவிட்டால்?

யோசிக்க யோசிக்கக் காந்தத்துக்கு இது அபாரமாகத் தோன்

ரியது. "தட்சிணாமூர்த்திக்கு வேறு திக்கு இல்லை. யசோதையின் கணவன் ஓடிப்போனபோது அவனுக்கு வயது பதினைந்தே. இவனுக்கும் கிட்டத்தட்ட அந்த வயதே. இவனை 'அவன் அல்ல' என்று சொல்லும் தைரியம் யாருக்கும் இராது. இவனுக்கு அவனுடைய பூர்வோத்தரங்களையெல்லாம் சொல்லிக் கொடுத்து, 'அவளிடம் ஜாக்கிரதையாக நடந்துகொள்' என்று சொல்லிவைத்தால் ஆயிற்று! அந்த யசோதைக்குத்தான் என்ன கர்வம்? அவளை இவனுடன் சேர்த்துவிட்டால், அப்புறம் தெரிந்துதான் என்ன பிரயோஜனம்? செத்த நாய்மாதிரி அவள் கிடக்க வேண்டியவள்தானே? இவனுக்கோ பண விஷயமும் கல்யாணப் பிரச்னையும் ஒரே சமயத்தில் தீர்ந்துவிடும். இவன் யசோதையின் சொத்துக்கு மானேஜராக ஆகிவிட்டால், என் ஆயுள் முழுதும் நான் கஷ்டப்பட வேண்டியதில்லை. இந்த ரகசியம் வெளிப்படாமல் இருப்பதற்காக நான் சொன்னபடி இவன் கேட்டுத்தானே தீரவேண்டும்?"—இப்படி ஓடியது யோசனை.

மறுநாள் சாயங்காலத்துக்கு மேல் தட்சிணாமூர்த்தி வந்தான். காந்தம் தான் போட்ட 'பிளானை'ச் சொன்னான். முதலில் தட்சிணாமூர்த்திக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் திருதிருவென்று விழித்தான். "அம்மாடி! முதுகுத் தோலை உரித்துவிடுவார்கள். பொம்மனாட்டி விஷயம்! என்னால் முடியாது" என்றான். தட்சிணாமூர்த்தி மறுக்க மறுக்கக் காந்தத்தின் பிடிவாதம் அதிகமாயிற்று. 'நான் இவ்வளவு நல்ல யோசனை சொல்லவாவது, ஊர் பெயர் தெரியாத இந்த அநாதை அதை மறுக்கவாவது!' என்று சீறினான் காந்தம். எங்கேயும் அவன் இப்படி அவமானப்பட்டதில்லை. காந்தம் யசோதையின் அழகையும் குணத்தையும் பற்றி வர்ணித்தும் அந்த மூடன் செவி சாய்க்கவில்லை. வெகு நேரத்துக்குப் பின் தட்சிணாமூர்த்தியைப் பார்த்து, "நீ அவள் வழிக்குப் போகவேண்டாம்; ஆஸ்தியை மட்டும் எடுத்துக்கொள். அவளுடைய ஆஸ்தி முழுவதையும் உன்பேரில் எழுதிவைக்காவிட்டால், மறுபடியும் ஓடிப் போய்விடுவதாகப் பயமுறுத்து. பிறகு நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று சொன்னான்.

தட்சிணாமூர்த்தி ஒரு மாதிரி வழிக்கு வந்தான். இரண்டு பேருமாக ஊருக்குப் போனார்கள். ரெயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் இருந்த ஒரு சத்திரத்தில் தட்சிணாமூர்த்தியை இருக்கச் சொல்லிவிட்டுக் காந்தம் நேராகச் சலமையாவின் வீட்டுக்குப் போனான்.

இவனைக் கண்டதும் அவர் கோபத்துடன், "என்ன?" என்று உறுமினார்.

"நான் உங்களுக்கு நல்ல செய்தி கொண்டுவந்திருக்கிறேன். நாராயண சாஸ்திரி அகப்பட்டுவிட்டான். நான் போய்ச் சும்மா வருவேனா?"

"எங்கிருந்து அழைத்து வந்தாய்? உண்மையில் அவன் யார்? ஏன் இங்கே வரவில்லை?"

இந்தக் கேள்விகள் காந்தத்தை நடுங்கவைத்தன. 'இந்தப் படுபாவி எல்லாவற்றையும் அறிந்த மாதிரியல்லவா பேசுகிறான்?' என்று நினைத்தான். பிறகு சமாளித்துக் கொண்டு, "என் பேச்சை நம்பவேண்டாம். நான் அவனை அழைத்துக் கொண்டு வரவில்லை. ரெயிலிலே

சந்தித்தேன். முக ஜாடையைப் பார்த்து இன்னுனென்று ஊகித்தேன். அவனும் இதே ஊரில் இறங்கியதால் என் சந்தேகம் ஊர்ஜிதமாகி விட்டது. சத்திரத்தில் இருக்கிறுன். நீங்கள் வந்து பாருங்கள். அவன் அநேகமாய் வீட்டுக்கு வர உத்தேசித்திருப்பதாகத் தோன்றுகிறது'' என்று ஜாக்கிரதையாகப் பேசினுன். இந்த முறை சலமையா நம்பிவிட்டார்.

"நிஜமா, விளையாடுகிருயா? உன் பேச்சில் எதை நம்புவது, எதை விடுவது என்று தெரியவில்லை'' என்ருர்.

"இதில்கூடப் பொய் சொல்வேணு?''

"நீ சொல்லுவாய்'' என்று கூறிவிட்டுச் சலமையா கிளம்பினுர். காந்தமும் அவரும் சத்திரத்துக்குப் போனபோது, அங்கே சுமார் இருபது பேர் கூடிவிட்டார்கள். சலமையாவின் மாப்பிள்ளை வந்துவிட்டானும் என்ற செய்தி காட்டுத் தீபோல் ஊர் முழுதும் பரவிவிட்டது. வந்தவர்கள் எல்லாரும் தட்சிணுமூர்த்தியின் முகத்தை எறிட்டுப் பார்த்துவிட்டுத் திரும்பிப் போய்க்கொண்டிருந்தார்கள். கூட்டம் அதிகரித்துக் கொண்டே வந்தது.

"நீங்கள் எல்லாரும் யார்? எதற்காக என்னை உற்றுப் பார்க்கிறீர்கள்?'' என்று தட்சிணுமூர்த்தி கேட்கவேயில்லை. அவனே நாராயண சாஸ்திரி என்று நம்புவதற்கு இது ஓர் ஆதாரமாய் இருந்தது.

சலமையாவும் மற்றவர்களும், "நீ யார்? உன் பெயர் என்ன?'' என்று துளைத்தபொழுதும் தட்சிணுமூர்த்தி இடித்த புளிபோல் உட்கார்ந்திருந்தான்.

காந்தம் மெதுவாய், "கண்ணையும் மூக்கையும் பாருங்கள்; ஜாடை இருக்கிறது'' என்ருன்.

சலமையா சலிப்புடன், "எல்லாம் பார்த்தாயிற்று; எனக்கு ஒன்றும் தெரியவில்லை'' என்ருர்.

"இதோ நான் பேச வைக்கிறேன். என்னிடம் உன் ஜபம் சாயாது. நான் யாரென்று நினைத்தாய்? லட்சுமீகாந்தம்! கூப்பிட்டால் போலீஸ் இன்ஸ்பெக்டர்கூட வந்தாக வேண்டும். நீ நாராயண சாஸ்திரி அல்லவா? உள்ளதைச் சொல். இல்லாவிட்டால் உன் உயிரை வாங்கிவிடுவோம்'' என்று காந்தம் கர்ஜித்தான்.

தட்சிணுமூர்த்தி அசைந்து கொடுக்கவில்லை. "என்னை அரெஸ்ட் செய்யப் போகிருயா? உன்னுல் ஆனதைப் பார். என் பெயரைப் பற்றி உனக்கென்ன அக்கறை?'' என்று பதில் கொடுத்தான்.

"தெலுங்கன்! தெலுங்கன்!'' என்று எல்லாரும் சந்தோஷத்தால் கூச்சலிட்டார்கள். அவன் தெலுங்கு பேசியதும், நாராயண சாஸ்திரி என்றே பலர் தீர்மானித்துவிட்டார்கள்.

ஒரு கிழவர் எல்லாரையும் தள்ளிக்கொண்டு வந்து பார்த்துவிட்டு, "ஆமாம்; அவன்தான்'' என்ருர்.

சலமையா சூள் கொட்டினுர்.

"வீட்டுக்குப் போனல் பெண்டுகள் கண்டுபிடித்துவிடுவார்கள்'' என்ருன் காந்தம்.

தட்சிணுமூர்த்தி சலமையாவுடன் போக மறுத்தான். "நீங்கள் தேடும் ஆசாமி நான் அல்ல'' என்ருன். மற்றவர்கள் கேட்டால்தானே? இழுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

"நண்பர்களும் நாராயண சாஸ்திரியின் தூரபந்துக்களும் வந்து தட்சிணுமூர்த்தியைப் பார்வையிட்டார்கள். யாராலும் நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை.

"இவனை வீட்டில் வைத்துக் கொள்ளுங்கள். இவன்தான் உங்கள் மாப்பிள்ளை என்று ருஜுவானு லொழியப் பெண்ணைப் பழகவிட்டு மோசம் போகாதீர்கள்" என்றார்கள்.

"அது எனக்குத் தெரியாதா?" என்றார் கிழவர்.

யசோதையின் நிலைமை இரண்டுங்கெட்டான் ஆகிவிட்டது. 'புருஷன் வருவான். எல்லாரும் அவனைத் தெரிந்துகொள்வார்கள். தன்னுடன் அவன் சந்தோஷமாய்ப் பேசுவான்' என்றெல்லாம் கனவு கண்டுகொண்டிருந்தாள்.

இப்போது நிலைமை வேறு போக்கில் திரும்பிவிட்டது. அவன் வந்து ஒரு வாரம் ஆயிற்று. ஒரு நாள் அவன் தன் மாமனார்மேல் நல்ல பாம்பாய்ச் சீறினன்:

"நான் உங்கள் மாப்பிள்ளை; என்னை உங்கள் வீட்டில் வைத்துக் கொள்ளுங்கள் என்று உங்களைக் கெஞ்சவில்லை. நீங்களே அழைத்து வந்தீர்கள். என் சொக்காயைக் கழற்றி உடம்பைப் பரீட்சித்தீர்கள் கண், மூக்கு, காது எல்லாம் பார்த்தீர்கள். அப்படி அடையாளம் தெரியாத மாப்பிள்ளை உங்களுக்கு எதற்கு?" என்று கேட்டுவிட்டான். இதைப் பக்கத்தில் இருந்து கேட்ட யசோதைக்குக் கோபத்தோடு அவனிடம் மதிப்பும் ஏற்பட்டது.

மறுநாள் காலை அவன் யசோதையிடம் போய், "இந்த வீட்டில் என் நிலைமை தர்ம சங்கடமாய் இருக்கிறது. காலணாக் காசு வேண்டுமென்றால் யாரைக் கேட்பது? அல்லது நானே சம்பாதித்துக் கொள்ளட்டுமா?" என்று கேட்டான். அவனுடைய கிஷ்ரே வார்த்தைகளைக் கேட்ட யசோதை அயர்ந்துவிட்டாள். அவள் பதில் சொல்லுவதற்கு முன் சலமையா முந்திக்கொண்டு, "ஏனப்பா, அப்படி எடுப்பாகப் பேசுகிறாய்? பணம் வேண்டுமென்றால் வாங்கிக்கொள்" என்றார்.

"நீ பேசாமல் இரு, அப்பா" என்று யசோதை தகப்பனாரைச் சமாதானம் செய்தாள். தட்சிணாமூர்த்தி மேல்தான் தப்பு என்று அவள் சுட்டிக் காட்டுவதுபோல் இருந்தது. அவள் உள்ளே போய் ஐந்து ரூபாயைக் கொண்டு வந்து கொடுத்து, "போதுமா? இன்னும் வேண்டுமா?" என்று கேட்டாள்.

"வேண்டுமென்றால் கேட்கிறேன்" என்று வெறுப்புடன் சொல்லிவிட்டு வெளியே போனான் தட்சிணாமூர்த்தி. அன்று முழுதும் அவன் வீட்டுக்கு வரவில்லை. யசோதை எண்ணாததெல்லாம் எண்ணினாள். அவன் பெருந்தன்மையுடனும் அசிரத்தையாகவும் நடந்துகொள்வதிலிருந்து அவனே நாராயண சாஸ்திரி என்ற உறுதி தோன்றியது. தன்னைச் சரியாக நடத்தவில்லை என்று மறுபடியும் ஓடிவிட்டானோ-? இப்படியெல்லாம் எண்ணிப் பயந்தாள்.

அன்று மாலை பக்கத்து வீட்டுப் பையன் ஓடிவந்து, "மாமி, மாமி! உங்கள் வீட்டுக்காரர் ஸ்டேஷனுக்குப் பக்கத்து ஹோட்டலில் இட்டிலி எடுத்துக் கொடுக்கிறார்" என்றான்.

ஆறு மணிக்குத் தட்சிணாமூர்த்தி திரும்பி வந்து, "ஸ்நானம் செய்ய வெந்நீர் போடு" என்றான். ஹோட்டலில் பரிசாரகனாக இருப்பதைப்பற்றி இருவருக்கும் வாக்குவாதம் நடந்தது.

"ஹோட்டல் வேலையை விட்டுத் தொலைத்து எங்கள் மானத்தைக் காப்பாற்றுங்கள்" என்றாள்.

"ஓஹோ, உங்கள் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டுமோ? அதைக்கூட என் தலையில் சுமத்தியிருக்கிறதா? உன்னிடம் அடிக்கடி பணம் கேட்டு வாங்குவதைவிட, ஹோட்டலில் வேலை செய்து சம்பாதிப்பது கௌரவம் என்று எனக்குத் தோன்றுகிறது. நான் இன்னும் கேவலமான வேலைகள் கூடச் செய்திருக்கிறேன்" என்றான். யசோதைக்குக் கோபம் வந்தது.

யசோதைக்கு வந்த ஆஸ்தியின் மேல் மற்ற வாரிசுகள் தாவா செய்துவிட்டார்கள். அதற்காகக் காந்தமும் சலமையாவும் வெளியூர்களுக்குப் போய் வரவேண்டியிருந்தது. அவர்கள் இருவரும் பட்டணம் போய்த் திரும்பி வந்தபோது யசோதை அடியோடு மாறியிருந்தாள். தட்சிணாமூர்த்தியின் பேச்சுக்கு இப்பொழுது யசோதை காது கொடுக்கிறாள்; சிரிக்கிறாள். அவர்கள் இருவரும் குடித்தனம் செய்யும் தம்பதிகளாகத் தோன்றினார்கள்.

வழக்குகள் ஒரு வழியாக முடியும் வரைக்கும் சலமையா தன்னை விடப் போவதில்லை என்று காந்தத்துக்குத் தெரியும். தட்சிணாமூர்த்தி தன் மூலமாக வந்ததை அறிந்தால், யசோதை தன்னை என்றும் மன்னிக்கவே மாட்டாள்; முன்னால் அவனை வெளியேற்றிவிட்டால் தனக்கு என்றும் கடமைப்பட்டிருப்பாள் என்று யோசித்தான்.

மறுநாள் காலையில் தட்சிணாமூர்த்தி குளித்துவிட்டு உடுத்துக்கொண்டிருக்கும் சமயத்தில் யசோதை காபியைக் கொண்டு வந்து மேஜைமேல் வைத்தாள். பிறகு, "உங்களை யாரோ தேடிக் கொண்டு வந்திருக்கிறார்கள்" என்றாள்.

"என்னையா?" என்று அடிபட்டவனைப்போல் திரும்பிப் பார்த்தான் தட்சிணாமூர்த்தி.

"பாவம், வயதான கிழவியை நீங்கள் போய்ப் பார்க்காமல் இங்கே வரவழைத்தது நியாயமா?" என்று கேட்டாள் யசோதை. "கிழவியா?......" என்று பரபரப்புடன் கேட்டான் அவன். "உங்கள் பாட்டி" என்றாள் யசோதை.

தட்சிணாமூர்த்தி அறையிலிருந்து ஒரே ஓட்டமாக ஓடினான். யசோதையும் ஓடினாள். எண்பது வயதுக் கிழவி ஒருத்தி கூனிக் கொண்டு கட்டிலின்மேல் உட்கார்ந்திருந்தாள். அவளைக் கண்ட தட்சிணாமூர்த்தி அசையாமல் நின்றுவிட்டான். அந்த ஒரு கணத்துக்குள் யசோதைக்கு எத்தனையோ சந்தேகங்கள் தோன்றி மறைந்தன. தட்சிணாமூர்த்தி இரண்டு எட்டில் கிழவியின் பக்கத்தில் போய் உட்கார்ந்துகொண்டு அவளை இரண்டு கைகளாலும் தடவிக் கொடுத்தான்.

"பாட்டி, என்னைத் தேடிக் கொண்டு வந்துவிட்டாயே!" என்றான்.

"அப்பாடா! எத்தனை வருஷமாகிறது! எங்கே, உன் முகத்தைப் பார்க்கிறேன்" என்று அவன் தோள்களையும் முகத்தையும் தடவினாள் கிழவி. கண்ணும் தெரியாது; காதும் கேட்காது.

"நீ ஏன் இவ்வளவுதூரம் வர வேண்டும்? நானே வருவேனே" என்று கத்தினான் தட்சிணாமூர்த்தி.

"நீயா வருவாய்? என் நினைவு வேறு உனக்கு இருக்கிறதா?"

"அதென்ன, பாட்டி, அப்படிச் சொல்லிவிட்டாய்? இனிமேல் சாகும்மட்டும் நீ என்னிடமே இருந்துவிடு."

"எனக்கு என்ன குறைச்சல்? உன் அப்பன் இருக்கும்போது காப்பாற்றிக் கிழித்துவிட்டான்! நீதான் பாக்கி! என்னவோ... உனக்கு உன் தாத்தா பெயரை வைக்கச் சொன்னேன். என் பேச்சைக் கேட்டானா? கிடக்கிறது. ஏதோ ஒரு பெயர்; எந்தப் பெயராக இருந்தால் என்ன? நீ ஆயிரம் காலம் நன்றாய் இருக்க வேண்டும். அவ்வளவுதான் எனக்கு வேண்டியது."

இதே சமயத்தில் தட்சிணாமூர்த்தியை அவமானப்படுத்த எண்ணிய காந்தம் அவசரமாக உள்ளே புகுந்தான். கூட ஒருவனை அழைத்து வந்தான். யசோதையைப் பார்த்து, "அப்பா எங்கே?" என்று கேட்டான். அதே சமயத்தில், வந்த ஆசாமி தட்சிணாமூர்த்தியைப் பார்த்து முகமலர்ச்சியுடன், "தட்சிணாமூர்த்தி, இங்கே எஙகே வந்தாய்? போன தடவை உன்னைப் புனாவில் பார்த்தபோது ஆபீஸ் பெருக்கிக்கொண்டிருந்தாயே?" என்று கேட்டான்.

தட்சிணாமூர்த்தி எழுந்து நின்றான். அவன் முகம் வெளுத்துவிட்டது. உதடுகள் நடுங்கின. அவன் யசோதையையும் அந்த மனிதனையும் மாறிமாறிப் பார்த்தான். "என்னைத் தெரியவில்லையா?" என்றான் அந்த மனிதன்.

ஒன்றும் தெரியாதவனைப்போல் காந்தம், "இவன் நாராயண சாஸ்திரி இல்லையா? வேறு பெயர் வைத்துக் கூப்பிடுகிறாயே?" என்றான்.

"இவன் தட்சிணாமூர்த்தியடா" என்றான் வந்தவன்.

"ஓ!"

"இவன் புனாவில் கக்கூஸ் கூட்டினான்."

"அடேடே! மோசக்காரப் பயல்! எப்பேர்ப்பட்ட வேலை செய்துவிட்டான். அத்திம்பேருக்கு நன்றாகக் குல்லாய் போட்டுவிட்டான். அநியாயமாக என் மருமகளின் வாழ்க்கையைக் கெடுத்துவிட்டானே! இதென்ன கிரகசாரம், பகவானே!" என்று ஓலமிட்டான் காந்தம். இதைக் கேட்ட யசோதைக்கு நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது. தலை சுற்றியது. உடம்பு வேர்த்தது. முழங்கால்கள் கிடுகிடுவென்று ஆடின. அவள் காந்தத்தையும் தன் புருஷனையும் பைத்தியக்காரியைப் போல் பார்த்தாள். தன் புருஷன் இவர்கள் சொன்னதையெல்லாம் மறுத்துச் சொல்லாமல் அசையாமல் நின்றுகொண்டிருக்கிறானே என்று கலவரமடைந்தாள்.

அதே சமயத்தில் சலமையா உள்ளே நுழைந்தார். ஏதோ விபரீதம் நடந்துவிட்டது என்பதை ஊகித்தார்.

"என்னடா காந்தம்! என்ன என்ன?" என்று பரபரப்புடன் கேட்டார்.

"இன்னும் என்னவென்று கேட்கிறீர்களே! அவன் நாராயண சாஸ்திரி இல்லையாம்! அவனுடைய சொந்தப் பெயர் தட்சிணாமூர்த்தியாம். இவர் அவனைப் புனாவில் பார்த்திருக்கிறாராம்! இனிமேல் உங்கள் குடும்பம் நாசந்தான்; உங்கள் பெண்ணையும் பாழாக்கிவிட்டான். தலையெழுத்து!" என்றான் காந்தம்.

சலமையா பதறவில்லை. தட்சிணாமூர்த்தியைப் பார்த்து, "இதெல்லாம் என்ன? நீ என் மாப்பிள்ளை இல்லையா?" என்று கேட்டார்.

காந்தம் ஹாஸ்யம் ததும்பும்

பாவனையாக, "இனிமேல் மாப்பிள்ளைதான்" என்றான்.

"சட்! நீ வாயை மூடு" என்று சொல்லி, தட்சிணாமூர்த்தி பக்கம் திரும்பி, "என்ன அப்பா! என்ன சொல்கிறாய்?" என்றார் சலமையா.

தட்சிணாமூர்த்தி பேச ஆரம்பித்தான்: "நான் ஒரு போதும் நாராயண சாஸ்திரி என்று பெயர் சொல்லிக் கொள்ளவில்லை. இந்த மனிதர் நான் செய்ததாகச் சொன்ன வேலைகளை நான் செய்திருக்கிறேன். ஆனால் இந்த நிமிஷம் வரையில் இவர் என்னைப் பார்த்ததே யில்லை. இவர் பெரிய தலைப்பாகை மாற்றி என்று காந்தம் என்னிடம் அடிக்கடி சொல்லுவது உண்டு. இவர் பெயர் நாணு என்று ஞாபகம்" என்றான்.

தட்சிணாமூர்த்தி இந்த வார்த்தையைச் சொன்னதும் காந்தத்தோடு வந்த மனிதனுடைய முகம் சுண்டைக்காயாய்ச் சுருங்கிவிட்டது.

தட்சிணாமூர்த்தி தொடர்ந்து பேசினான்: "நானாக இங்கே வரவில்லை. ஆபீஸ் கூட்டுபவனுக்கு ரெயில் செலவுக்குப் பணம் ஏது? காந்தம் நாள்கணக்கில் உபதேசம் செய்து, என் பெயரை மாற்றினார். நான் உங்களிடம் நடந்துகொள்ள வேண்டிய முறையையும் சொல்லிக் கொடுத்தார். நீங்கள் என்னை நம்பிய பிறகு ஆஸ்தி முழுவதையும் என் பெயரில் எழுதிக்கொண்டு பாதியைத் தமக்கு ரிஜிஸ்டர் செய்து கொடுத்து விடவேண்டும் என்று சொல்லியிருந்தார்.

"ஆனால் நான் காந்தம் சொன்னபடியெல்லாம் செய்யவில்லை. கூடிய மட்டும் உங்கள் இருவரிடமும் சண்டையிட்டுக்கொண்டு எட்டியிருக்கவே பார்த்தேன். நான் இப்படி இருந்ததால் யசோதைக்கு என்மேல் பிடிப்பு ஏற்பட்டது. அதற்காக நான் வருத்தப்படவில்லை. யசோதையிடம் மனிதத் தன்மை இருக்கிறது; அவள் இப்படி வாழாவெட்டியாக இருப்பது அநியாயம்!"

"அதற்காக அவள் புருஷன் ஸ்தானத்தை நீ எடுத்துக்கொண்டாயோ?" என்று கூறிப் பல்லைக் கடித்தார் சலமையா. "என் மைத்துனன் குணம் உலகறிந்த விஷயம். ஆனால் உன்னிடம் பெரிய மனிதனுக்கு வேண்டிய குணங்கள் இருக்கின்றனவே. நாங்கள் உனக்கு என்ன தீங்கு செய்தோம்? மாப்பிள்ளை என்று வந்துவிட்டு எங்களுக்கு ஏன் இப்படி அபகீர்த்தி கொண்டுவந்தாய்?" என்று குரல் நடுங்கக் கேட்டார்.

"அபகீர்த்தி!" என்று முணுமுணுத்துக்கொண்டே தட்சிணாமூர்த்தி பாட்டியின் காதுக்குள்ளே, "பாட்டி, தாத்தாவின் பெயரைச் சொல்லேன்!" என்றான்.

சற்றுத் தயங்கிய கிழவி, "உன் தாத்தாவின் பெயர் தட்சிணாமூர்த்தி சாஸ்திரி" என்றாள்.

தட்சிணாமூர்த்தி, "அப்பாடா!" என்று எழுந்து நின்றான். "அப்பா எனக்குத் தாத்தாவின் பெயரை வைக்கவில்லை. அப்பாவை உங்களுக்குத் தெரியாது. நான் செய்த பாவம் அவர் வயிற்றில் பிறந்தது ஒன்றுதான். அவர் வைத்த பெயர், அவர் செய்து வைத்த கல்யாணம் எதையுமே அப்பொழுது விஷமாக வெறுத்தேன். யதேச்சையாக இருக்கலாம் என்று ஓடினேன். பெயரையும் மாற்றிக்கொண்டேன்" என்றான்.

"அதெல்லாம் சுத்தப் பொய்! இந்தக் கிழவி யார்? உன்னை எப்படி நம்புவது? இவன் புனா ஹோட்ட

வில் அகப்பட்ட வழிப்போக்கன்" என்று காந்தம் தன் குட்டையும் வெளியிட்டான்.

"ஒரு நிமிஷத்துக்கு முன்னல் புனுவில் பார்த்தது பொய்யாக மாறி இப்போது நிஜமாய்விட்டது. நீ என்னைக் கண்டுபிடித்ததாக எண்ணாதே! நான்கு நாள் ஹோட்டலில் உன்னைப் பார்த்தேன்; எங்கேயோ பார்த்த ஞாபகம் வந்தது. என் கல்யாணத்தின்போது என்று கடைசியில் தெரிந்தது. அதற்கு அப்புறம் நானே உன்னிடம் முதலில் பேசினேன். என்னை இங்கே அழைத்துவந்த புண்ணியம் உனக்குத்தான்; இல்லை என்று சொல்லவில்லை. உனக்கும் என் முகத்தைப் பார்த்ததும் பழைய நினைவு வந்திருக்கவேண்டும். வழியில் போகிறவனை அழைத்து வந்து யசோதையின் புருஷனுக ஆட்டிவைக்க வேண்டும் என்ற எண்ணம் உனக்கும் ஆதாரம் இல்லாமல் உதிக்கவில்லை. வேறு முகம் உனக்கு இந்த யோசனையை உண்டாக்கியிராது. முதல் முறை உன் யோசனையைக் கேட்டு ஸ்தம்பித்துவிட்டேன். நீ என்னை அடையாளம் கண்டுபிடிக்காததால் உன்னைச் சுலபமாய் ஏமாற்றினேன். என்னை நீ மிரட்டியபோது எனக்குச் சிரிப்பு வந்தது. உன் சிண்டு என் கையில் அகப்பட்டிருப்பதையும் நான் நாராயண சாஸ்திரி என்பதையும் நான் காட்டிக்கொள்ளவில்லை. நான் பெரிய துணிச்சல்காரன், தெரியுமா!" என்றுன் தட்சிணுமூர்த்தி.

"உன் துணிச்சல் நாசமாய்ப் போக!" என்று காந்தம் போலி ஆசாமியுடன் நழுவினுன். அவனைப் பார்த்து, "மறுபடியும் இந்த வீட்டில் காலை வைக்காதே" என்று கத்தினுர் சலமையா. தட்சிணுமூர்த்தி பக்கம் திரும்பி, "நல்ல வேளை, எனக்கு உயிர் வந்தது. காந்தத்தின் தடபுடலில் நிஜமாகவே நீ மோசக்காரனே என்று பயந்தேன். முதலிலேயே உன் ஜாடை எனக்குத் தெரிந்துவிட்டது" என்றுர். தட்சிணுமூர்த்தி யசோதையைப் பார்த்தான். அவள் முக பாவம் அவனுக்குச் சாதகமாகவே இருந்தது.

சற்று நேரத்துக்கெல்லாம் உள்ளே சமைத்துக்கொண்டிருந்த யசோதையிடம் சலமையா, "நம் மேல் கேஸ் தொடுத்தவர்கள் வழிக்கு வருகிறுர்கள். வக்கீல் ராஜி செய்துகொள்ளலாம் என்று அபிப்பிராயப்படுகிறுர்" என்றுர்.

"அதுதான் சரி, அப்பா! கேஸ் விட்டால் தொல்லை விட்டது" என்று திருப்தியுடன் சொன்னுள் யசோதை.

வாடகை அறை!

ஒரு தெருவில் வாடகைக்கு எங்கேயாவது ஓர் அறை கிடைக்குமா என்று ஒருவர் தேடிக்கொண்டே போனுர். ஒரு வீட்டில் அப்படி விளம்பரம் செய்திருந்ததைப் பார்த்ததும் உள்ளே நுழைந்தார். வீட்டுக்காரர் ஓர் அறையை அவருக்குக் காட்டினுர். அதன் கூரைப் பக்கம் தண்ணீர் ஒழுகியிருப்பதைக் கண்டு, "ஏன், ஸார், எப்போதுமே இப்படித்தான் ஒழுகிக் கொண்டிருக்குமோ?" என்று கேட்டார் வந்தவர். "இல்லை, ஸார், மழை நாளில் மாத்திரந்தான்" என்று பதில் அளித்தார் வீட்டுக்காரர்!

—'காரோனெட்'

விஷஜரம்

'வனபுல'

அநுமதிபெற்றுத்
தமிழில் சுருக்கியவர்:
த. நா. குமாரஸ்வாமி

ஆசிரியர் ஒரு டாக்டர். சிறு நிகழ்ச்சிகளையும் ரசம் ததும்ப விஸ்தரித்து எழுதுவதில் நிபுணர். வங்காளியில் நாலைந்து அரிய நாவல்கள் எழுதிக் கீர்த்தி பெற்றவர். ஒரு லட்சியவாதியின் காதல் எப்படி முடிகிறது என்று சித்திரிப்பது இந்த நாவல்.

காப்பிரைட்: பலாயிசாந்த் முகர்ஜீ, பாகல்பூர், பிஹார். (புத்தக விலை: ரூ. 1-8-0)

விஷ ஜுரம்

"நீங்கள் எவ்வளவு தூரம் போக வேண்டும்?"

"சாகேப்கஞ்ஜில் இறங்குவோம்."

ஆனந்தன் வியப்புடன், "சாகேப்கஞ்ஜா? நானும் அங்கே தான் போகிறேன்... அங்கே யார் வீட்டுக்கு?" என்றான்.

"ஹரேராம் பாபு வீட்டுக்கு. அவரைத் தெரியுமா உங்களுக்கு?" என்றார் அந்தக் கிழவர்.

"தெரியுமாவா? எங்கள் எதிர் வீட்டுக்காரர். ரொம்ப நன்றாகத் தெரியுமே. அவருக்கு நீங்கள் என்ன ஆக வேண்டும்? இப்போது அவர்களெல்லாம் கிரிடிக்குப் போயிருக்கிறார்களே; அங்கே யாரும் இல்லையே" என்றான் ஆனந்தன்.

"ஹரேராம் பாபு எனக்குச் சம்பந்தி. அவர் கிரிடிக்குப் போனது தெரியும். 'லீவ்' எடுத்துக்கொண்டு ஒரு பத்து நாள் தங்கலாமென்று தான் புறப்பட்டேன்" என்றார் கிழவர்.

"நல்ல காரியம் செய்தீர்கள்" என்று சொல்லி ஆனந்தன் மீண்டும் புத்தகத்தில் மனத்தைச் செலுத்தினான். படிப்பு ஓடவில்லை. சற்றுத் தொலைவில் உட்கார்ந்திருந்த யுவதியின்மீதே கண்ணோட்டம் சென்றது. இரவெல்லாம் கண் விழித்து வந்ததால் அவளுக்குத் தூக்கக் கலக்கம். ஜன்னலின் ஓரமாகத் தலையைச் சாய்த்துக் கொண்டிருந்தாள். ரெயில் வண்டியும் ஒரே சந்தத்தில் சென்றுகொண்டிருந்தது. வெளியே ககரவென்று உதயமாகும் அழகிய காட்சி; நாட்டுப்புறத்தின் மணம் வீசும் குளிர்ந்த காலை. அடுத்த ஸ்டேஷன் சாகேப்கஞ்ஜ்.

படுக்கை பெட்டியை யெல்லாம் மேலேயிருந்து எடுத்து வைத்துக் கொள்ள அவிநாசபாபு எழுந்திருந்தார். அநுபமா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். கிழவர் அவளை எழுப்பச் சென்றபோது ஆனந்தன், "எழுப்பவேண்டாம். எல்லாம் ஜாக்கிரதையாக நான் உங்களுக்கு இறக்கித் தருகிறேன். இதற்குள் என்ன அவசரம்?" என்றான்.

அவன் ஸ்டேஷனில் இறங்கியதும், நல்ல உயரமும் பலமான தேககட்டும், வசீகர முகச் சாயலும் கொண்ட ஓர் இளைஞன், "எங்கேயடா போயிருந்தாய்?" என்றான்.

"எங்கேயும் இல்லையடா, மிருணாள்; காசிக்குத்தான் போய்விட்டு வருகிறேன்."

"உன்னோடு வந்தார்களே; அவர்கள் எல்லாம் யார்?"

"ஹரேராம் பாபுவுக்கு உறவாம். இங்கே லீவுக்கு வந்திருக்கிறார்களாம்" என்ற ஆனந்தனுடைய கவனம் அநுபமாபக்கம் சென்றது.

"சாயங்காலம் நாம் மலையடிவாரத்தில் கூடிப் பேசுவோம். சங்கத்தைப்பற்றி முக்கியமான விஷயங்கள் அநேகம் பேசவேண்டும்" என்றான் மிருணாளன். வேறு கவனமாக இருந்த ஆனந்தனின் செவியில் இந்த வார்த்தைகள் விழவே இல்லை. "என்ன?" என்றான். "இதற்குள் கவனம் எங்கேயோ போய்விட்டது! உம்" என்றான் மிருணாளன்.

"தெரிந்தது; தெரிந்தது. கட்டாயம் வருகிறேன்" என்றான் ஆனந்தன்.

"அடே! வேறு ஜோலி இருந்தால் வரமாட்டேன் என்று இப்போதே சொல்லிவிடு. அப்புறம் எங்களை வீணாக ஏமாற்றிவிடாதே" என்றான் மிருணாளன்.

"சே, மறப்பேனா என்ன?" என்றான் ஆனந்தன்.

ஆனந்தனையும் மிருணாளனையும் போல் பிள்ளைகள் இந்த உலகத்தில் எங்கேயோ அபூர்வமாகத்தான் காண முடியும். அவர்கள் பிறருக்கு உபகாரமான எந்த மாதிரி இயக்கத்திலும் இறங்கி முன்னணியில் வேலை செய்வார்கள். எந்தப் பிரதி உபகாரத்துக்கும் ஆசைப்படுவது இல்லை. சாகேப்கஞ்ஜில் இருக்கும் இளைஞர் சங்கம் இவர்கள் நிறுவியதே. ஆனந்தன், மிருணாளன் என்றால் அந்த ஊர்ப்பிள்ளைகளுக்கெல்லாம் உயிர். கிராமப் புனருத்தாரணம், ஏழை மக்களுக்குச் சிகிச்சை, ஊர்க் காவல் போன்ற விஷயங்களில் மிகவும் ஊக்கத்தோடு அந்த இளைஞர் சங்கம் கட்டுப்பாடாக வேலை செய்வது இந்த இருவருடைய உன்னத குண விசேஷத்தினால்தான்!

*   *

ஆனந்தன் குளித்துச் சாப்பிட்டானதும் தன் அறையில் படுத்துக்கொண் டிருந்தான். நடுப்பகலில் தன் காரியங்களை முடித்துக் கொண்டு அவனுடைய மதனி உள்ளே வந்தாள்.

"காசி பார்க்க எப்படி இருக்கிறது?" என்றாள்.

"என், அழகான ஊர்தான். எங்கே பார்த்தாலும் கோவில்கள். கங்கை ஓரம் எத்தனையோ படித்துறைகள்."

"எங்கே தங்கியிருந்தாய்? நல்ல காலம், நீ விலாசம் கொடுக்காமல் போனாய்..."

"ஏன்?"

"இல்லாவிட்டால், உன் அண்ணாவிடமிருந்து தந்தி பறந்திருக்காதா?

"என்ன மன்னி, நீ சொல்வது எனக்கு ஒன்றும் புரியவில்லையே."

"போகப் போகத் தானே புரியும்!" என்று சொல்லிப் பக்கென்று சிரித்துவிட்டு, அறையிலிருந்து அகன்றாள். சிறிது நேரத்துக்கெல்லாம் கையில் ஒரு 'போட்டோ'வுடன் வந்து, "இப்போது தெரிகிறதா?" என்று அவனுக்குக் காட்டினாள். "ஜாதகம் ஒத்துப்போய்விட்டதாம். பெண்ணைப் பார்த்து நீ சம்மதிக்க வேண்டியதுதான் பாக்கி" என்றாள்.

"சரி, சரி, எல்லாருமாகச் சேர்ந்துகொண்டு என்னை ஆட்டி வைக்கிறீர்களாக்கும்!"

"ஆனால் நீ கல்யாணமே பண்ணிக்கொள்ளப் போகிறதில்லையா? வயசு இருபத்தைந்து ஆகிறதே; இன்னுமா யோசனை?"

"இப்போது என்னைத் தூண்டிக் கல்யாணம் செய்துகொள்ளும்படி செய்துவிடுவீர்கள்; அப்புறம் அந்தப் பெண் இப்படி அப்படி என்று ஏதாவது குத்திக் காட்டவும் தயங்கமாட்டீர்கள். கல்யாணம் ஆகாமல் இருந்தால் இந்தத் தலைவேதனையே இல்லை."

'போட்டோ'வை எடுத்து, "பெண் அப்படிச் சோடையாக இல்லை; 'மூக்கும் விழியு'மாக இருக்கிறாள். உனக்கு ஏற்றவள்தான்" என்றாள் மதனி.

"பெண் அழகில்லை என்று நான் சொன்னேனா, மன்னி?" என்றான் ஆனந்தன்.

அதே சமயம் கீழே வாசலில், "ஆனந்த அண்ணு!" என்று ஒரு குரல் கேட்டது. இதுதான் சாக்கென்று ஆனந்தனும் மாடி வராந்தாவுக்கு வந்து, "யாரடா கிஷோரா? என்ன சமாசாரம்?" என்றான்.

"'பீ' டீமுக்கும் 'வீ' டீமுக்கும் 'மாச்', அண்ணு; உன்னைத்தான் 'ரெபரி'யாகப் போட்டிருக்கிறோம்" என்றான் சிறுவன் கிஷோர்.

"எனக்கு உடம்பு என்னவோ மாதிரி இருக்கிறதடா...வம்சியைப் போடுங்களேன்" என்றான் ஆனந்தன்.

"அவனிடம் ரொம்பவும் பட்சபாதம் இருக்கிறது, அண்ணு. நீயே இருந்தால்தான் எங்களுக்குத் திருப்தி" என்றான் சிறுவன்.

"சரி; வந்து தொலைகிறேன். எத்தனை மணிக்கு ஆரம்பிக்கிறது 'மாச்'?"

"4-30-க்கெல்லாம்."

சிறுவன் சென்றதும், எதிர் வீட்டுப் பக்கமாக ஆனந்தனின் கண்ணோட்டம் சென்றது. மாடி அறை ஜன்னலண்டை அநுபமா நின்று கொண்டிருந்தாள். ஆனந்தனைப் பார்த்ததும் அவள் மறைந்துகொண்டாள். சற்றுப் பொறுத்துக் கிழவர் அவிநாச பாபு அங்கே வந்தார்.

"புது இடம் எப்படி இருக்கிறது? எல்லாம் சரியாகக் கிடைக்கிறதா? ஏதாவது வேண்டியிருந்தால் சொல்லுங்கள். நான் என்னுல் ஆனதைச் செய்கிறேன்" என்றான் ஆனந்தன்.

"எல்லாம் செளகரியமாக இருக்கிறது. வந்ததிலிருந்து உடம்பு தான் எனக்குச் சற்று என்னவோ மாதிரி இருக்கிறது. தலைவலி தாங்க முடியவில்லை. இன்றைக்குப் பையன் வரவேண்டும். அவனுக்கும் காலேஜ் பரீட்சை யெல்லாம் முடிந்திருக்கும். அசோகன் உனக்கு ஈடு தான். அவன் இல்லாமல் அநுவுக்குப் பொழுதே போகவில்லை" என்றார் அவிநாச பாபு.

"இடம் புதிசல்லவா? இப்படி எங்கேயாவது மலையடிவாரம்வரைக்கும் சாயங்காலம் உலாவிவிட்டு வரலாம். எல்லாம் போகப் போகப் பழக்கமாகிவிடும்" என்றான் ஆனந்தன்.

* *

கால் பந்தாட்டம் முடிந்தது. கிஷோரின் 'டீம்' ஜயித்தது. ஆனந்தனை வளைத்துக்கொண்டு பிள்ளைகளெல்லாம், ஒருவர் பேசுவது மற்றவர் செவிக்கு விழாதபடி, "கொஞ்சம் தப்பியது. இல்லாவிட்டால் மணி 'பௌல்' ஆகியிருப்பான். 'புல்பாக்'காக மன்மதனைப் போட்டதால்தான் நாம் பிழைத்தோம்" என்றெல்லாம் தம் தம் சாமர்த்தியத்தை வியந்து கூறிக் கூச்சலிட்டார்கள்.

வழியில் மிருணுளன் குறுக்கிட்டான். "மணி ஆறரை ஆகிறது; வா. முக்கியமான விஷயம் பேச வேண்டும்" என்று ஆனந்தனை அழைத்தான்.

வேண்டா வெறுப்பாய் ஆனந்தன், "போகலாம்" என்று இழுத்தான்.

"என்னடா, வரவர உன்னிடம் சுரத்தே இல்லை? உனக்கு என்ன வந்தது? கொஞ்சநாளாக நானும் பார்க்கிறேன்: நீ கலகலவென்று எங்களுடன் பேசுவதில்லை; சங்கத்தின் பக்கம் தலைகாட்டுவதுகூடக் கிடையாது. உன்னை என்ன விசித்திர நோய் பிடித்துக்கொண்டது? சொல்லித் தொலையேன்" என்றான் மிருணுளன்.

"எனக்கு ஒரு கேடுமில்லை."

இருவரும் அந்தரங்கமாகப் பேச மலையடிவாரத்தை நோக்கி நடந்தார்கள். தொலைவில் ஊர்க் கோடியில் 'மாச்' ஆடிவிட்டுத் திரும்பும்

பிள்ளைகளின் ஆரவாரம் காற்று வாக்கில் வந்தது.

*　　*

கூழுத்தளவு மூடிய கோட்டு. கால்களில் சுருக்கிடாத ஷூ. இடுப்பில் கொசுவமான வேஷ்டி; அதன் முன்கச்சம், கீழே புரளாமல் இருக்க, கோட்டின் பக்க ஜேபியில் செருகி இருந்தது. வலது கை விரலில் அஷ்டலோஹத்தால் செய்த மோதிரம். இடது கையில் அடுக்காக வெற்றிலைச் சுருள். சுண்ணாம்பு தோய்ந்த கட்டை விரல். தாம்பூலத்தைக் குதப்பிக் கொண்டே பிருந்தாவன மோகன் ராய் ஆபீசுக்குச் செல்லும் காட்சி இது. ஆனந்தன் அவருடைய இளைய தாயின் வயிற்றில் பிறந்த தம்பி. ஆசாரக்குடுக்கை என்று பெயர் வாங்கியவர். ஆபீசில் தாகம் நாக்கை வறட்டிக்கொண்டு போனாலும் வீட்டுக்கு வந்து ஸ்நானம் செய்த பிறகே எதையும் உட்கொள்வார். ஆபீசு துரை ஒரு வெள்ளைக்காரன். அவனுக்கு மட்டும் அன்றாடம் கும்பிடு போடத் தவறுவதே இல்லை. ஊரில் சற்று வயதானவர்களெல்லாம் அவருடைய வைதிகத்தைப் பார்த்துப் பிரமித்துப்போய் அவரிடம் மரியாதை காட்டுவார்கள். அவரிடத்தில் ஒரு குறை: சீட்டாட்டம் என்றால் அவருக்கு மிகுந்த பிரியம்; வீட்டைக்கூட மறந்துவிடுவார். ஆனால் மற்றொரு சாரார் வேறு விதமாக அபிப்பிராயம் கொண்டிருந்தார்கள்: "இவர் சீட்டாடச் செல்லும் வீட்டிலுள்ள ஓர் இளம் விதவையின் பேரில்தான் இவருடைய கவனமெல்லாம். ஆட்டத்தின்பேரில் இல்லை" என்றுதான் வதந்தி

பிருந்தாவன பாபு ஆபீசுக்குப் புறப்படும் சமயம். எசக்குப் பிசக்காய் ஆனந்தன் அவர் எதிரே மாட்டிக்கொண்டான்.

"எதிர் வீட்டில் என்னடா வேலை உனக்கு?" என்றார் அண்ணா.

"அவினாச பாபு ரொம்ப ஜுரமாகக் கிடக்கிறார். நவீன் டாக்டரை அழைத்துக்கொண்டு வந்தேன். வேறொன்றுமில்லை" என்றான் ஆனந்தன்.

"சமாசாரம் எனக்குத் தெரியாதென்று நினைக்காதே. நானும் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறேன். என் கண்ணில் படக்கூடாதென்று இரண்டு நாளாகத் தலை மறைந்து திரிகிறாய்."

பிறகு வாயில் வெற்றிலையை மென்றுகொண்டே ஜேபியிலிருந்து போஸ்ட் கார்டை எடுத்தார். கண்ணில் மூக்குக் கண்ணாடியைச் சரிப்படுத்தி, "பரேச பாபு எழுதிப் பத்து நாளுக்கு மேல் ஆயிற்று. என்னிடம் சொல்லாமல் காசிக்குக்கூட விட்டடித்தாய். எத்தனை நாள் நீ இப்படித் திரிய முடியும்? பரேச பாபுவுக்கு நான் பதில் எழுதவேண்டும். பெண்ணை வைத்துக்கொண்டு காத்திருக்கிறார். நல்ல மனுஷ்யன் பாவம், குடும்பஸ்தன். பெண்ணுக்கு இடம் அமையாமல் போய்விடுமோ என்று எவ்வளவு வேதனைப்படுகிறாரோ! பெண்ணுக்கு வயசு பதினாலு ஆகிறது. உன் மதனியும் இந்த ஸம்ஸாரத்தில் பத்து வருஷமாக ஒன்றியாக இடிபட்டு வருகிறாள். இந்தச் சித்திரை முதலிலேயே முடிக்கவேண்டும் தெரிகிறதா?" என்றார் பிருந்தாவன பாபு.

"பெண்ணைப் பாராமல் சட்டென்று எப்படிச் சொல்லிவிட முடியும், அண்ணா? யோசனை பண்ணிச் சொல்லுகிறேனே. சித்திரை மாசம் எங்கேயோ இருக்கிறது.

இதற்குள் என்ன முழுகிப் போய் விடும்'' என்றான் ஆனந்தன்.

''யோசனை பண்ணலாமென்பதை விட்டுக்கட்டு! நான் அதுவரையில் இருக்கிறேனே இல்லையோ? அந்தப் பாழும் பிராம்மணனிடம் வரதட்சிணை முன்னதாகவே இரண்டாயிரம் வாங்கிவிட்டேனே. என் மானத்தை வாங்கவேண்டுமென்று எண்ணமா உனக்கு?'' என்றார் அண்ணா.

ஆனந்தனுக்குத் தூக்கிப்போட்டது. வரதட்சிணையா? இரண்டாயிரத்துக்கா அண்ணா தன்னை விற்றுவிட்டார்? சுத்த மோசம்!

''அண்ணா, பணத்தைத் திருப்பி விடு. அந்த இடம் எனக்குச் சரிப்படாது'' என்றதும் ஆனந்தன் அங்கே நிற்கவே இல்லை.

பிருந்தாவன பாபு தம்பலம் ஊறும் வாயைப் பிளந்தபடியே, ''என்ன! என்ன!'' என்று சொல்லிக்கொண்டிருந்ததுதான் மிச்சம்.

* *

நோயாளியை நன்றாகப் பரீட்சை செய்துவிட்டு நவீன் டாக்டர், ''டைபாய்டாயிருக்குமோ என்று சந்தேகப்படுகிறேன். எதற்கும் நீ அடிக்கடி 'டெம்பரேசர்' எடுத்துக் குறித்து வை. நாளைக்கு எப்படிப் போகிறது பார்ப்போம்'' என்றார்.

அன்று இரவெல்லாம் ஆனந்தன் தம் பக்கத்திலேயே பணிவிடை செய்வதைக் கண்டு அவினாச பாபு, ''அப்பா ஆனந்தா, என்னால் உனக்கு அநாவசியமான கஷ்டம். இன்னும் அசோகன் வரக் காணோம்; என்னவோ தெரியவில்லை. நாளைக்கு அநுவைப் பார்க்க இரண்டு பேர் வருவார்கள். நான் என்ன பண்ணுவேன், இங்கே இப்படிப் படுத்துக்கொண்டேனே. அவர்களை யார் வரவேற்பது? அசோகன் இன்றைக்கு வராது போனால் நாளைக்கே அவனுக்குத் தந்தி கொடுத்துவிடு' என்றார்.

''நான் அவர்களை வரவேற்று உபசரிக்கிறேன். உங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம்; தூங்குங்கள்'' என்றான் ஆனந்தன். இதுவரை ஓடி ஒளிந்த அநுபமா, வெட்கத்தையெல்லாம் மீறிக்கொண்டு, ''நீங்கள் இப்படி அப்பாவின் கிட்டவே இருந்தால் எப்போது போய்ச் சாப்பிடுவது?'' என்றாள். கூடவே அநு சுடச்சுட டீ ஒரு கோப்பையில் எடுத்து வந்திருந்தாள். அதை ஆனந்தன் பக்கமாக நீட்டினாள். அவள் விரல்கள் நடுங்கின.

''அவளுக்கும் என்னால் கஷ்டம்; இரண்டு நாளாக ராத்திரியெல்லாம் கண்விழித்துத் தேய்ந்துவிட்டாள். என்னவோ இந்த இடத்தில் வந்து மாட்டிக்கொண்டேன்'' என்று பெருமூச்செறிந்தார் கிழவர்.

''எனக்காகக் கவலைப்படாதே, அப்பா! யாரோ வருகிறார்களே, அவர்களைத்தான் நான் எப்படி...?'' என்று அநு கூச்சத்துடன் சொன்னாள். ஆனந்தன், அநுபமாவை நோக்கி, ''நான் அதையெல்லாம் கவனித்துக்கொள்கிறேன். இன்றிலிருந்து எங்கள் சங்கத்துப் பிள்ளைகள் 'டர்ன்' (முறை) போட்டுக் கொண்டு நோயாளியைக் கவனித்துக் கொள்வார்கள். டாக்டரை அழைத்துக்கொண்டு ராத்திரி எழு மணிக்குத் திரும்பி வருகிறேன். நீ கதவைத் திறந்துவை'' என்றான் ஆனந்தன். அநுபமாவை நீ என்று மிகவும் அந்யோன்யமாக அவன் நா எதனாலோ குழறிவிட்டது.

இரவு மணி பதினொன்று இருக்கும். நோயாளி அவினாச பாபு நினைவு இல்லாமல் கிடந்தார்.

அநுபமா அறையின் ஒரு மூலையில் ஏதோ புத்தகத்தில் கவனம் செலுத்த முற்பட்டாள். ஆனால் புத்தியில் ஏறவே இல்லை. பல எண்ணங்கள் அலைகள் போல் மோதி வந்தன. திடுமென்று காலடிச் சப்தம் கேட்கவே அவள் திரும்பினாள். ஆள் இன்னாரென்று தெரிந்தும், "யார்?" என்றாள்.

"நான்தான். அவிநாச பாபு கொஞ்சமாவது தூங்கினாரா?" என்றான் ஆனந்தன்.

அநுபமாவின் இதயம் காரணமின்றிப் படபடவென்று அடித்துக் கொண்டது.

"அது தூக்கமோ மயக்கமோ தெரியவில்லை" என்று சொல்லிக் கொண்டே விளக்கைக் குறைத்து விட்டு, "கீழே தாழிட்டுவிட்டீர்களா?" என்றாள் அநு.

"அட, மறந்தே போய்விட்டேனே; வருகிறேன்" என்று சொல்லி, ஆனந்தன் திரும்பிப் போகப் புறப்பட்டான். "இருங்கள், நான் போட்டு விட்டு வருகிறேன்" என்று அநுபமா கீழே இறங்கிச் சென்றாள். தான் உட்கார்ந்திருக்கும் நாற்காலியில் அல்லவா சற்று முன் அவள் அமர்ந்திருந்தாள்? இன்னும் அவளுடைய மெல்லிய தேகத்தின் உஷ்ணங்கூட ஆறவில்லை. கொடியில் அவளுடைய அழகான 'வாயில்' சேலை காற்றில் மெல்ல அசைந்தது. ஷெல்பில் ஒழுங்காக வைத்திருக்கும் புஸ்தகங்கள் அவளுடைய மிருதுவான விரல்கள் தீண்டியவை அல்லவா? ஆனந்தனுக்கு இன்பத்தினால் உள்ளம் சிலிர்த்தது; உடலின் ரோமம் பொடித்தது.

அநுபமா திரும்பி வந்தாள். சற்று நேரம் இருவரும் எதுவுமே பேசவில்லை. ஆனந்தனுக்கு இந்த மாதிரி மௌனம் சங்கடமாக இருந்தது. "நாளைக்கு யாரோ வரப் போவதாகச் சொன்னாரே?" என்று பேச்சை எடுத்தான்.

"என்னைப் பார்க்கத்தான் வருகிறார்கள்" என்று சொல்லிவிட்டு, அநுபமா நாணத்தால் தலையைக் குனிந்துகொண்டாள்.

"நல்ல இடமாகப் பார்த்து உன்னைக் கல்யாணம் செய்து கொடுத்து விட்டால் பாதி கவலை நீங்கின மாதிரி என்று அவிநாச பாபு சொன்னார்" என்றான் ஆனந்தன்.

அநுவின் கண்கள் கலங்கின. தன் அறைக்குள் விர்ரென்று போய் விட்டாள்.

* *

அவிநாச பாபு படுத்த படுக்கையாகக் கிடந்தார். இந்த நெருக்கடியில் பெண்ணுக்கு எப்படி அலங்கரித்துக்கொள்ளத் தோன்றும்? ஆனந்தன், பெண் பார்க்க வந்தவரை மரியாதையுடன் வரவேற்றான். அவரேதாம் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறவரும். நடுவயதினர். பகட்டாக உடை தரித்து இருந்தார். எவ்வளவு இளமையாகத் தோன்ற வேண்டுமென்று அவர் வேஷம் போட்ட போதிலும் முதுமை இளித்து எட்டிப் பார்த்தது. "நீங்கள் பெண்ணைச் சாதாரணமாகப் பார்க்க வேண்டுமா, ஒழுங்காக உடுத்துக் கொண்ட கோலத்தில் பார்க்க வேண்டுமா?" என்றான் ஆனந்தன்.

"அதெல்லாம் அவசியமில்லை. இருக்கிறபடி பார்ப்பதுதான் நல்லது. அப்போதுதான் நமக்கு ஓர் அபிப்பிராயம் விழும்" என்றார் வந்தவர்.

அநுபமாவை அவர் பார்த்தாகி விட்டது. அவருக்கு உபசாரமாக இரண்டு தித்திப்பு வகையும் ஆனந்தனின் நண்பர்கள் வழங்கினார்கள்.

"பெண்ணைப்பற்றி உங்களுடைய சம்மதமோ அசம்மதமோ எனக்குத் தெரியப்படுத்த வேண்டும். 'ஊருக்குப் போய்க் கடிதம் போடுகிறேன்' என்று சில பேர் சொல்லுவது வழக்கம். இந்த இடத்தில் நீங்கள் தயக்கமிராமல் தெரிவிக்கலாம்" என்றான் ஆனந்தன்.

வந்தவர், "பெண் நான் எதிர்பார்த்தபடி சின்ன வயசு அல்ல; இருபது இருக்கும் போல் தோன்றுகிறது. அதோடு ரொம்ப ஒல்லி" என்று மழுப்பினார்.

"ஸார், உங்களுக்கு என்ன வயசு ஆகிறது? என்னுடைய கணக்குப்படி ஏறக்குறைய 45க்கு மேல் இருக்கும். பெண்ணைப் பெற்றுத் திண்டாடுபவர்கள் வயசை இரண்டொரு வருஷம் குறைத்துச் சொல்வதில் தவறு ஒன்றும் இல்லை. அதே போல் இரண்டாம் தாரம் கொள்பவர்களும் தங்களை ரொம்பவும் இளமையானவர் போல் காட்டிக்கொள்வதும் உலகத்தில் சகஜம். நான் உங்களைச் சொல்லவில்லை" என்றான் ஆனந்தன்.

"என்ன, ஸார்! அப்படி என்ன, வங்காளத்தில் பெண்களுக்குப் பஞ்சமா? நாற்று விட்டிருக்கிறது! பணம் இருந்தால் எத்தனையோ பெண்கள் கிடைக்கிறார்கள். அப்படி என்ன, நான் உம் கண்ணில் கிழம் போல் படுகிறேனா?" என்று சொல்லிவிட்டு, வந்தவர் விடுவிடு என்று எழுந்து போய்விட்டார்.

ஆனந்தன் திகைத்து நின்றான். அவர் போன விசையின் அர்த்தம், 'பெண் பிடிக்கவில்லை' என்பது தான்.

'அநுபமாவா இவன் கண்ணுக்கு நன்றாக இல்லை? அட மிருகமே!' என்று ஆனந்தன் நினைத்துக்கொண்டான். அநுபமாவுக்கு ஏதோ ஒரு பாரம் மனத்தை விட்டு நீங்கின மாதிரி இருந்தது. 'புறப்படு. அப்பாவுக்கு அபாயம் - அநு' என்று தன் அண்ணனுக்குத் தந்தி அடிக்கும்படி ஆனந்தனிடம் அவள் சொன்னாள்.

* *

"என்னடா, எப்போது பார்த்தாலும் அந்த வீட்டிலேயே ஜோலி! குழந்தை புஞ்சிகிக்கு இரண்டு நாளாக மார்ச்சளி கட்டிக்கொண்டு ஜுரமாம். பையன் போந்தா ஏதோ 'ஜாமெட்ரி பாடம் தெரியவில்லை' என்று என்னைத் தொந்தரவு செய்கிறான்! வீட்டைக் கவனி, போடா" என்று கடுகடுத்து ஆனந்தனை நோக்கிச் சொன்னார் பிருந்தாவன பாபு.

"இதோ" என்று அவனும் பையனைக் கூப்பிட்டு எதிரில் உட்கார வைத்துக்கொண்டான்.

"புரிகிறதா-? ஒரு முக்கோணத்தின் இரண்டு பக்கங்கள் ஒருங்கே மூன்றாவதைவிட அதிகம். ஒருங்கே என்பதைக் கவனமாய் வைத்துக்கொள்."

"புரிகிறது சித்தப்பா. எதிர் வீட்டில் யார் வந்திருக்கிறார்கள்?" என்றான் பையன்.

"எங்கேடா..?"

"அதோ சிவப்புக்கரை போட்ட புடைவை கட்டிக்கொண்டிருக்கிறாள் பார்: அந்த மாமி."

அநுபமா வராந்தாவில் நின்றுகொண்டிருந்தாள். சூரிய வெளிச்சம் சேலைமீது படவே அதன் ஓரமுள்ள கரை இன்னும் செவேலென்று எடுத்துக் காட்டியது. ஆனந்தனின் இருதயத்துள் அதனுடைய சாயம் பற்றிக்கொண்டது.

"அவள் அவிநாச பாபுவின் பெண்; காலேஜில் படிக்கிறாள். அதெல்லாம் அப்புறம் பேசலாம். அடுத்தபடி 'நேர்க்கோடு' என்றால் என்ன?"

"வளைந்திராதது நேர்க்கோடு" என்று பட்டென்று பதில் தந்தான் பையன்.

"அது சரியான விடை அல்ல. இரண்டு புள்ளிகளுக்கு இடையே உள்ள மிகவும் குறுகிய தூரமே நேர்க்கோடு" என்றான் ஆனந்தன்.

"இப்போது தெரிந்தது" என்று தலையசைத்தான் போந்தா. உட்புறத்திலிருந்து மதனி கூப்பிடுவது கேட்டது:

"டீ ஆறிப் போகிறதே, குடித்து விட்டுப் போகவில்லையா?"

ஆனந்தன் உள்ளே சென்றபோது புஞ்சியை மடியில் வைத்தபடி தூங்கப் பண்ணிக்கொண்டிருந்தாள்.

"குழந்தைக்குச் சளிக்கட்டு எப்படி இருக்கிறது, மன்னி?" என்றான் ஆனந்தன்.

"நேற்றுத்தான் சற்று அதிகம். இப்போது பரவாயில்லை."

டீயை ருசி பார்த்துக்கொண்டே ஆனந்தன், "ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்; ஊரெல்லாம் டைபாய்டும் நியுமோனியாவுமாக இருக்கிறது" என்றான்.

* *

நெடுமெனத் தூக்கம் கலைந்தது. கனவு என்னவோ விசித்திரமானது. ஆனால் ஞாபகப்படுத்திக்கொள்ள முடியவில்லை. ஆனந்தன் கண்களைக் கசக்கிக்கொண்டு எழுந்தபோது சூரிய கிரணம் அறையினுள் படிந்திருந்தது.

"ஆனந்த அண்ணா!" என்ற குரல் கேட்டது.

ஆனந்தன் சோம்பலுடன் கீழே இறங்கி வந்தான். கூப்பிட்டது சிறுவன் கிஷோர்தான். அவன், "மிருணாள் அண்ணா இதை உன்னிடம் தரச் சொன்னார். இன்று அவர் எதோ ஊருக்கு ரெயிலேறிப் போய்விட்டார்" என்று சொல்லி ஒரு கடிதத்தை ஆனந்தனிடம் கொடுத்தான்.

"நான் திரும்பிவரச் சில தினங்கள் ஆகும். அடுத்த தடவை பயணத்தில் நீயும் என்னுடன் வர வேண்டியிருக்கும். நான் போகும் விஷயம் பின்னால் உனக்குத் தெரியப்படுத்துவேன். அடுத்த மாசம் புதன்கிழமை - அமாவாசை அன்று உன்னை நடுநிசியில் வந்து கூப்பிடுவேன். தயாராக இரு" என்று எழுதியிருந்தான்.

* *

ஊருக்குப் புறம்பில் ரெயில் பாலத்தின் ஒரு விசாலமான பாகத்தில் இருட்டிய பின்பும் ஆனந்தன் தனிமையாகச் சிந்தனையில் மூழ்கி இருந்தான். மிருணாளன் சென்ற காரியத்தின் மர்மம் அவனுக்கு விளங்கவில்லை. அநுபமா மிகவும் அருகில் இருந்தாலும் தொலைவாய் இருப்பதாகவே தோன்றினாள். கொஞ்சநாளாகத் தனக்கு எதனாலோ ஆக்க வேலைகளில் ஊக்கம் குறைவதைப்பற்றி ஆனந்தனுக்கு ஒரு வேதனை. மிருணாளனின் மனோதிடத்தை நினைத்துக்கொள்ளும் போது ஆனந்தனின் உள்ளத்தில் மீண்டும் உறுதி தலை தூக்கியது. தெம்பும் துயரும் இழைந்த நிலையில் மிதந்துகொண்டிருந்தான். காயஸ்தகுலப் பெண் அநுபமா; தானோ வேறு வர்ணத்தவன். அவளை மணக்கச் சமூகம் அநுமதிக்குமா? அண்ணாதான் இசைவாரா? நடக்காத காரியம்! ஆனால் மனசு வரைக்கும் ஜாதி மதமெல்லாம் எது? ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயுள்ள கவர்ச்சி இயற்கையின் தூண்டுதல் அல்லவா?

தொலைவில் மலையுச்சியில் மஞ்சம் புல் பற்றிக்கொண்டு திகுதிகுவென்று வரிசையாக எரிந்து

அணைந்துகொண்டே வந்தது. ஆனந்தனுக்கு அப்போதுதான் வீடு திரும்ப வேண்டுமென்று உணர்வு வந்தது; எழுந்தான்.

இரவு 7-30 மணி வண்டியில் தான் 'ஐஸ்' கிடைக்கும். அவிநாச பாபுவுக்கு ஜுரவேகம் அதிகமாகி, சன்னியும் கண்டுவிட்டது. நவீன் டாக்டர் நோயாளியின் தலையில் ஐஸ் வைக்கச் சொன்னார். ஆனந்தன் ரெயில் பாதை ஓரமாகவே சென்று ஸ்டேஷனை அடைந்தபோது கையும் தாழ்ந்திருந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் ஜிகு ஜிகு வென்று ரெயில்வண்டி ஸ்டேஷனுக்குள் வந்து நின்றது. ஐஸ் விற்கும் பெட்டியைத் தேடிக் கொண்டு போகும்போது, "அடே ஆனந்தா! யாரைத் தேடுகிறாய்?" என்றது ஒரு குரல். ஆனந்தன் திரும்பிப் பார்த்தான். அவனுக்கு மிகவும் பழக்கமான டிக்கட் பரிசோதகன்.

"யாருக்கு உடம்பு?" என்றான்.

"ஒருவருக்கு டைபாய்ட். ஐஸ் அவசியமாக வேண்டியிருக்கிறது" என்றான் ஆனந்தன்.

"ஓ! உனக்கு எதிர்வீட்டில் வந்திருக்கிறாரே, அவரா? அவருக்கு ஒரு பெண் இல்லை? நேற்று நம் கிளப்பிலே இதைப்பற்றிப் பேச்சு"



என்றான். "ஆமாம். அதனால் என்ன?" என்றான் ஆனந்தன்.

வண்டி நகர்ந்தது. ஆனந்தனின் முதுகில் அந்த நண்பன் தமாஷாகத் தட்டிக்கொடுத்து, "உன் பாடு அதிருஷ்டந்தான்" என்று சொல்லி, மிடுக்காக வண்டியில் தொற்றிக்கொண்டான். அந்த இருட்டில் அவன் பற்களைக் காட்டி இளித்த விதம் ஆனந்தனை மிகவும் உறுத்தியது.

* *

ஐஸ் கிடைக்காமல் ஆனந்தன் வீடு திரும்பினான். அவன் வந்ததுமே மதனியம்மாள், "எதிர்வீட்டுப் பெண் நல்ல அடக்கம்; சமர்த்தாகப் பேசுகிறாள். இப்போதுதான் வந்து விட்டுப் போனாள்" என்றாள். அவள் இப்படிப் பேசுவது ஆனந்தனுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

"பாவம், அவள் அப்பாவுக்கு இரண்டு நாளாக ஸ்மரணையே இல்லையாமே! பிழைப்பாரா?" என்றாள் மதனி.

"கஷ்டந்தான்" என்றான் ஆனந்தன்.

அப்போது அவன் அண்ணா மகன் போந்தா உள்ளே ஓடிவந்தான்; "சித்தப்பா, போலீஸ் இன்ஸ்பெக்டர் உன்னைக் கூப்பிடுகிறார்" என்று பேச்சின் நடுவிலே ஆனந்தனை அழைத்துச் சென்றான்.

இன்ஸ்பெக்டர் விநோத பாபு நல்ல மனுஷ்யர்தாம். ஆனந்தனுக்கு மிகவும் சிநேகம். உத்தியோக முறைமை ஒன்று இருக்கிறதே! அவருக்கென்னவோ பிடிக்கவில்லைதான்; ஆனாலும் மேல் அதிகாரிக்குத் தெரிவித்தாக வேண்டுமே! ஆனந்தனை அணுகி, "உங்கள் எதிர்வீட்டில் யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டார்.

"ஏன்? அவிநாச பாபுவும் அவர் பெண்ணும். கல்கத்தாவில் அவருடைய பிள்ளை—" என்று ஆனந்தன் கூறி முடிப்பதற்குள், இன்ஸ்பெக்டர் இடைமறித்து, "அவனால்தான் இந்தத் தொல்லையெல்லாம். கல்கத்தாவில் ஏதோ அரசியல் சம்பந்தமாக அவன்பேரில் புகார் இருக்கிறது. அவர்கள் வீட்டைச் சோதனை போடவேண்டும். எனக்கு என்னவோ பிடிக்காத காரியம்" என்றார்.

"சோதனையா? அது ஒழுங்கில்லை. பாவம், அந்தக் கிழவர் போகாப் பிராணனாகக் கிடக்கிறார். இந்தச் சந்தர்ப்பத்தில் இப்படிச் செய்வது அடாத காரியம்" என்றான் ஆனந்தன்.

"அதற்குத்தான் நான் உன்னைத் தேடிக்கொண்டு வந்தேன். உன் எதிரிலேயே ஒருவிதமாக முடித்துவிட்டு 'ரிபோர்ட்' செய்துவிடுகிறேன்" என்றார் அதிகாரி.

நோயாளியின் தலையணையைக் கூடப் புரட்டிப் பார்த்தாகிவிட்டது. துளியும் விடாமல் சோதனை போட்டுவிட்டு இன்ஸ்பெக்டர் அகன்றார்.

ஆனந்தன் டாக்டரிடம் இதைச் சொன்னபோது அவர், "நம் விநயனா இப்படிச் செய்தான்? சுத்த மோசம்! அவிநாச பாபுவை இங்கே வைத்துக்கொண்டால் குணமாகாது போல் தோன்றுகிறது. பையனைக் ஜாக்கிரதையாக இருக்கச் சொல். நோயாளியின் நிலையை அநுபமாவுக்குத் தெரிவித்துவிடு" என்று சொல்லிவிட்டுப் போனார்.

* *

அவிநாச பாபுவின் பிள்ளை அசோகனுக்குப் பதிலாக அவ

னுடைய காலேஜ் நண்பன் விமானன் என்பவன் ஒரு கூலியின் தலையில் தோல் பெட்டியையும் அதன்மேல் 'ஹோல்டாலை'யும் ஏற்றிக்கொண்டு வந்து சேர்ந்தான்.

எதிரே ஆனந்தனுடைய சிஷ்யர்கள் சிலர் வந்துகொண்டிருந்தார்கள்; "இங்கேதானே அவிநாச பாபு இருக்கிறார்?" என்று அவர்களைக் கேட்டான். அவர்களில் ஒருவன், "ஆம்" என்று அந்த வீட்டுக்குள்ளே அவனை அழைத்துச் சென்றான்.

நாகரிகமான உடை அணிந்த அந்த இளைஞன் உள்ளே நுழைந்ததுமே சாதுவாக இருந்த அநுபமா, கொந்தளிப்புடன் ஓடி வந்து அவனை மாடிக்கு அழைத்துச் சென்றாள். சிறிது நாழிகைக்கெல்லாம் ஒலி அடங்கியிருந்த வீடு கலகலப்பாக விளங்கியது.

ஒரே குதூகலச் சிரிப்பு. எதிர் வீட்டிலிருந்து இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த ஆனந்தனுக்கு மனம் என்னவோ மாதிரி ஆகிவிட்டது. அதுவும் அநுபமா, விமானனுடன் உராய்ந்துகொண்டே ஆனந்தனை நோக்கிய விதம், 'ஐயோ பாவம்! ஆனந்தன்' என்று ஏளனத்துடன் சிரிப்பதுபோல் இருந்தது. இவ்வளவு இருந்தும் விமானனை விசாரித்து அவனுக்கு உபசரணை புரிவதில் அவன் துளியேனும் தவறவில்லை.

"வாருங்கள்; உட்காருங்கள்" என்றான்.

"தாங்கள் தெய்வமென்றே சொல்லவேண்டும். அநு எல்லாம் சொன்னாள். உங்களைத் தவிர வேறு யார் இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொள்ளப்போகிறார்கள்!" என்றான் விமானன்.

"என்னை ஏளனம் செய்கிறீர்கள்; தெரிகிறது. என்னை அவ்வளவு தூக்கி வைக்கவேண்டாம்" என்று பதில் சொன்னான் ஆனந்தன்.

"அவிநாச பாபுவை இந்த நிலையில் கல்கத்தாவுக்கு எடுத்துக் கொண்டு போவது உசிதமல்ல. நவீன் டாக்டரைவிட அங்கே உள்ளவர்கள் என்ன செய்துவிடப் போகிறார்கள்? பக்கத்தில் இருக்கும் உங்கள் துணை இருந்தால் போதாதா?" என்றாள் அநுபமா.

"சரி, வருகிறேன்" என்றான் ஆனந்தன்.

"எங்களால் உங்களுக்கு அதிக சிரமம்" என்றான் விமானன்.

* *

அன்று மாலை ஸ்போர்ட்டிங் கிளப் கூட்டத்துக்குச் சென்றுவிட்டு ஆனந்தன் திரும்பிக்கொண்டிருந்தான். அவன் எண்ணம் எல்லாம், தன்னை விட்டு நழுவிப்போகும் அநுபமாவின் பேரிலேயே சென்றது. அந்தச் சமயத்தில், "யாரது, ஆனந்தனா போகிறது?" என்று அவர்கள் சங்கத்தைச் சேர்ந்த ஜீவன் கூப்பிட்டான்.

"ஆமாம்; நான்தான்" என்றான் ஆனந்தன்.

கண்ணீர் வெடித்தவர ஜீவன், "தெரியுமா சமாசாரம்? மிருணாளன் போய்விட்டானடா!" என்றான்.

"என்ன? என்ன?" என்றான் ஆனந்தன். அவன் கண்ணுக்கு ஆகாயமும் பூமியும் இருட்டிக் கொண்டு வந்தன.

"ரெயிலில் மாட்டிக்கொண்டான், முங்கேரில்" என்றான் ஜீவன்.

சட்டென்று ஆனந்தனுக்கு ஞாபகம் வந்தது: "இன்றுதானே அவன் சொன்ன அமாவாசைத் தினம்; புதன்கிழமை? ஐயோ! எவ்வளவோ விஷயம் அவனிடம் சொல்ல வேண்டுமென்று இருந்தேனே!

இனிமேல் யாரிடம் என் மனத்தில் இருப்பதைத் தெரிவிப்பேன்? மிருணாளன் இறந்தது நிஜமா?"-இப்படி மனம் குழம்ப நண்பனின் பிரிவினால் ஆனந்தன் உள்ளூறப் புலம்பினான். திடீரென்று தன் மனத்தில் அநுபமா இடம் கொண்டதால், மிருணாளன் தன்னை விட்டுப் போயே போய்விட்டானோ?

இந்த அநுபமா யாரோ? எங்கிருந்தோ திடீரென்று முளைத்தாள்! நெஞ்சு நிறைய இவளே நிற்கிறாள்! விமானன் வந்துவிடவே அடிக்கடி இவளைக் காண மனம் தாவுகிறது. பின்னும் காந்தம் இழுக்கிறது. விமானனும் அநுபமாவும் ஒரே அறையில்தான் படுப்பார்களோ? அந்த வீட்டில்தான் வேறு இடமே இல்லையே. இப்படியெல்லாம் ஆனந்தனின் மன ஓட்டம் மிருணாளனை விட்டு வேறு வழியாகச் சென்றது.

அவன் மன ஆகாயத்தில் அநுபமா உதயமாக ஆக மிருணாளன் அஸ்தமித்துக்கொண்டே வந்தான். ஆனால் நவீன் டாக்டர் ஆனந்தனைப் பார்த்து, "மிருணாளனைப் போல் ஒருவன் வரப்போகிறானா? உனக்குக் கை ஒடிந்த மாதிரி. சிறந்த லட்சிய புருஷன் அவன்" என்றதும், ஆனந்தனுக்குத் துக்கம் மீண்டும் இரண்டு மடங்காக வெடித்து எழுந்தது.

'மிருணாளனா, அநுபமாவா?' இந்தப் புதிருக்கு விடை என்ன?

வீட்டுக்கு வந்தபோது தீன் பாஹாடிலிருந்து ஒரு தந்தி அங்கே வந்து காத்திருந்தது. ஆனந்தனின் தங்கை வீணாவுக்கு ஆபத்தான நிலைமை. பிள்ளை நோவு எடுத்தும் பிரசவம் ஆகவில்லை. உதவிக்கு ஆனந்தன் தேவையென்று அவளுடைய கணவன் தந்தி கொடுத்திருந்தான். உடன்பிறந்த தங்கைக்கு ஆபத்து என்றால், போய்த் தானே ஆகவேண்டும்? ஆனால் அநுபமாவை விட்டுப்போவது ஆனந்தனுக்கு அழமாட்டாத குறை. போகுமுன் ஒரு தரம் அவிநாச பாபுவின் வீட்டுக்குச் சென்றான். விமானன் அந்தச் சமயத்தில் அநுபமாவைத் தொட்டுத் தொட்டுப் பேசியபடி 'டெலிவிஷ'னைப்பற்றி விளக்கிக்கொண்டிருந்தான். வாசற்படியில் வந்து ஆனந்தன் நின்றதைக்கூட அவர்கள் இருவரும் கவனிக்கவே இல்லை. ஆனந்தன் மெல்ல மெல்ல அந்த இடத்தை விட்டுக் கனவில் நடப்பவன் போல் வெளியே சென்றான். அவன் மனம் இடிந்துவிட்டது.

* *

இரவு மணி இரண்டு இருக்கும். இருட்குவையைப் பிளந்துகொண்டு ரெயில் வண்டி வேகமாகச் சென்றுகொண்டிருந்தது. ஓர் இண்டர் வகுப்புப் பெட்டியில் ஆனந்தன் தனியாக உட்கார்ந்திருந்தான். வீணா பிழைத்துவிட்டாள். இந்தச் சில தினங்களாக அநுபமாவைக் காண முடியாததால் ஆனந்தனுக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. சாகேப்கஞ்ஜ் சீக்கிரம் வந்து தொலையாதா என்ற பரபரப்பு.

சாகேப்கஞ்ஜை அடைந்தபோது கிழக்கு வெளுக்கவில்லை. எங்கும் விடிநேரத்துக்கு முன் திகழும் மையிருள். கீழ்வானில் சுக்கிரன் பளிச்சென்று சுடர்விட்டது. அவன் மனத்தில் அநுபமாவின் கவனமே குடிகொண்டிருந்தது. கால்கள் தாமாகவே பழக்கமான அந்த வீட்டை நோக்கிச் சென்றன. தெருவில் இருந்த முனிசிபல் லாந்தர்கள் அணைந்துகொண்டிருந்தன. எங்குமே சந்தடி இல்லை. அவிநாச பாபு

வின் வீட்டில் விளக்கு வெளிச்சமே இல்லை. ஏன் இப்படி?

"கிஷோர்! கிஷோர்!" என்று கூப்பிட்டான். பதில் வரவில்லை. அயர்ந்து தூங்குகிறார்களா என்ன? வாசல் கதவு திறந்து கிடந்தது. உள்ளே நுழைந்து மாடிக்குச் சென்றான். அங்கேயும் அறைகள் ஆவென்று சூன்யமாக இருந்தன. நடுங்கிய குரலில், "அநு.....! அநுபமா!" என்று கூப்பிட்டான். யாருமே இல்லை. அவிநாச பாபு படுத்திருந்த இடம் காலியாக இருந்தது.

ஆனந்தன் தட்டுத் தடுமாறிக் கொண்டே வெளியே வந்து தன் வீட்டுக் கதவைப் பலமாகத் தட்டினான். மதனி விழித்துக்கொண்டு, 'என்னவோ ஏதோ?' என்று பயந்து போய்க் கதவைத் திறந்தாள். "வீணாவுக்கு ஒன்றுமில்லையே?" என்றாள் திகிலுடன்.

"ஒன்றுமில்லை" என்றான் ஆனந்தன், உள்ளே வந்து. "அவரும் பெண்ணைப் பார்த்துவிட்டு நேற்று ராத்திரிதான் திரும்பினார். சித்திரை 17க்கு முகூர்த்தம் வைத்தாகிவிட்டது" என்றாள் மதனி. ஆனந்தன் பைத்தியக்காரனைப்போல் நின்றான். எதுவுமே அவனால் பேச முடியவில்லை. வேகமாகத் தன் அறைக்குள் சென்று மிருணாளினின் பெரிய 'போட்டோ'வின் முன் நின்றான். அந்த வைகறை ஒளியில் மிருணாளன் தன்னைப் பார்த்து லேசாகச் சிரிப்பதுபோல் பட்டது ஆனந்தனுக்கு.

வக்கீல் செய்த யுக்தி!

சிக்காகோ நகரில் ஒரு பிரபல வக்கீல். அவருக்கு அடுத்த வீட்டில் ஒரு டாக்டர் இருந்தார். இறந்தவர் கொலையுண்டதாகச் சந்தேகப்பட்ட ஒரு வழக்கில் வக்கீலுக்கு எதிராக டாக்டர் சாட்சியம் சொல்ல ஆஜரானார். அந்திம காலத்தில் அந்த டாக்டரிடம் வைத்தியம் பார்த்துக்கொண்ட ஒருவர் பெயரைச் சொல்லி, "இன்னாருக்கு நீர் வைத்தியம் செய்ததுண்டா?" என்று கேட்டார் வக்கீல். "ஆம்" என்றார் டாக்டர்.

"அவர் எங்கே இருக்கிறார்?"

"அவர் இறந்துவிட்டார்."

இப்படியே தமக்குத் தெரிந்த இன்னும் சிலரின் பெயர்களைச் சொல்லி வக்கீல திரும்பத் திரும்ப அதே கேள்விகளைக் கேட்டார். அவர்களுக்கும அந்த டாக்டரே கடைசியில் வைத்தியம் பார்த்தவர். அதனால் ஒவ்வொரு தரமும் அதே பதில் தான் கொடுத்தார்.

"சரி; போதும், ஐயா! நீர் போகலாம்" என்று குறுக்கு விசாரணையை முடித்துக்கொண்டார் வக்கீல். வழக்கில் அவருக்குத்தான் ஜயம்!

—லியோனார்ட் லியான்ஸ்

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM, FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

காந்தியை நினைப்போம்

உலகெங்குமே காந்தியை நினைக்கும் நாள் இது. அவரை நினைக்கும்போது எண்ணற்ற சம்பவங்கள் ஞாபகத்துக்கு வருகின்றன. இதோ ஒன்று:

குஜராத் வித்தியாபீடத்து நிர்வாகக் கமிட்டியின் கூட்டத்துக்கு மகாத்மா போகவேண்டியிருந்தது. வண்டி வந்து சேரவில்லை. குறித்த சமயத்தில் குறித்த வேலையைக் கட்டாயம் செய்தாகவேண்டும் என்பது அவர் கொள்கை. வண்டி வராததால் அவர் ஆசிரமத்திலிருந்து நடக்கத் தொடங்கிவிட்டார்.

கொஞ்ச தூரம் போனதும் எதிரே ஓர் இளைஞன் சைகிளில் வந்தான். மகாத்மா அவனை நிறுத்தி, "உன் சைகிளை என்னிடம் கொடு, தம்பி! நான் வித்தியாபீடத்துக்குச் சமயத்தில் போய்ச் சேரவேண்டும்" என்றார். அவன் பேசாமல அவரிடம் வண்டியைக் கொடுத்தான். ஆனால் அவருக்கு சைகிளில் போய் அதிகப் பழக்கமில்லை. எப்போதோ சில சமயம் தென்னாப்பிரிக்காவில் சைகிளில் போவார். இந்தியாவுக்கு வந்ததும் அந்தப் பழக்கமே விட்டுப்போயிற்று. ஆயினும் அவர் சைகிளில் ஏறி, அதை வேகமாகத் தட்டிவிட்டார். குறித்த சமயத்தில் அவரை 'ந்தியாபீடத்தில் கண்டதும் எல்லாரும் பிரமித்துப் ானார்கள்.

காந்தியடிகளின் செயல் திறமையை விளக்க, இந்தச் சம்பவம் ஒன்றே போதும். சத்தியமும் அஹிம்சையும் அரசியலில் செல்லுமா என்று ராஜதந்திரிகள் சந்தேகப்பட்டுக்கொண்டிருந்த காலத்தில், நம்முடைய அரசியல் போராட்டத்துக்கு அவற்றையே அவர் ஆயுதமாகக் கொண்டார்; சுதந்தர இயக்கத்தை வெற்றிகரமாக நடத்தினர்; நமது நாட்டின் விடுதலையைக் கண்டார். லட்சியங்களை நோக்கிய இடைவிடாத போராட்டந்தான் காந்தியடிகளின் வாழ்க்கை. அவரே ஓரிடத்தில் சொல்லியது போல, இன்று காந்தி இல்லை; ஆனால் காந்தீயம் என்றும் வாழ்கிறது.

காந்தீயக் கொள்கைகளைக் கடைப்பிடித்து வாழ்வதே நல்வாழ்வு பெற வழி - நமக்கு மட்டும் அல்ல; உலகத்துக்கே.

— ஆசிரியர்